# புலஸ்தியர்

## வாதசூத்திரம் - 300
## ஞானகற்பம் - 200

# திருவள்ளுவர்

## பரிமுப்பு சூத்திரம் 30
## சூத்திரம் 16
## பஞ்சரத்தினத் திருப்புகழ் II



தாமரை நூலகம், சென்னை - 600 026.

# புலஸ்தியர்

## வாதசூத்திரம் 300 ஞானகற்பம் 200

# திருவள்ளுவர்

## பரிமுப்பு சூத்திரம் 30 சூத்திரம் 16

## பஞ்சரத்ன திருப்புகழ் 11

பதிப்பாசிரியர்
ஆர்.சி.மோகன்



தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி 3வது தெரு
வடபழனி, சென்னை - 600 026
தொலைபேசி எண் - 044 - 23620249

தாமரை வெளியீடு எண் : 151

முதல் பதிப்பு : ஜூலை 1995

இரண்டாம் பதிப்பு : ஜனவரி 2009

மூன்றாம் பதிப்பு : ஜூலை 2013

நான்காம் பதிப்பு : ஜூன் 2019

பதிப்புரிமை பெற்றது :

**நூலைப்பற்றி**

நூலின் பெயர் : புலஸ்தியர் வாதசூத்திரம் ஞானகற்பம்
திருவள்ளுவர் பரிமுப்புசூத்திரம்

பதிப்பாசிரியர் : ஆர். சி. மோகன்

வெளியிட்டோர் : தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி
வடபழனி, சென்னை - 26.

பதிப்பு ஆண்டு : ஜூன் 2019

உரிமை : பதிப்பகத்திற்கு

நூல் வடிவம் : டெமி

அச்சுத்தாள் : 16 கி. வெள்ளைத்தாள்

எழுத்துக்கள் : 11 புள்ளி

மொத்த பக்கங்கள் : 150

பிரதிகள் : 1000

நூல் விலை : ரூ. 75/-

அச்சிட்டோர் : கிரியேட்டிவ் ஆப்செட்
நுங்கம்பாக்கம், சென்னை -34

**திருமதி. எஸ். மாலதி**
இ.ஆ.ப

ஆவணக் காப்பகம்
மற்றும் வரலாற்று
ஆராய்ச்சி ஆணையர்

தமிழ்நாடு ஆவணக்
காப்பகம், எழும்பூர்,
சென்னை - 8.

*க. எண் 9553 / ஆநூ / 95.* *நாள் : 12. 7. 95*

# அனுமதிக் கடிதம்

பொருள், தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்- **"புலஸ்தியர் வாத சூத்திரம்-300, ஞானகற்பம், 200, திருவள்ளுவர் பரிமுப்பு சூத்திரம் -30. பஞ்சரத்தினத் திருப்புகழ்- 11"** - மறுபதிப்பு செய்தல் - குறித்து.

பழைய அரிய தமிழ் நூல்களை காப்பாற்றி மக்கள் படிக்க வகை செய்யும் வண்ணம், அரிய தமிழ் நூல்கள் மறுபதிப்புச் செய்யும் திட்டம் ஒன்றினை தமிழக அரசு கல்வித் துறை அரசாணை (நிலை) எண். 372, (கல்வி), நாள் 20.4.92 ல் வெளியிட்டு உள்ளது. அத்திட்டத்தின்படி "புலஸ்தியர் வாத சூத்திரம் 300, ஞான கற்பம் 200, திருவள்ளுவர் பரிமுப்பு சூத்திரம் 30 பஞ்சரத்தினத் திருப்புகழ் 11" என்னும் நூலை மறுபதிப்பு செய்வதற்காகத் தாங்கள் செய்து கொண்ட மனு ஏற்றுக் கொள்ளப்பட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

**பெறுநர்:**
லோட்டஸ் பப்ளிஷிங் ஹவுஸ்,
7, என். ஜி. ஓ. காலனி,
வடபழனி, சென்னை - 26.

(ஒ-ம்) **மாலதி**
ஆணையர்
**10 - 7 - 95**

# பதிப்புரை

சித்தர் இலக்கியத்தில் புலஸ்தியரின் பாடல்களுக்கு மிகச் சிறப்பான இடம் உண்டு. ஞான கற்ப நூல் பாடியவர் இவர் மட்டுமே.

புலஸ்தியர், அகஸ்தியரின் பிரதம சீடர். சிவராஜயோகத்தில் சிறந்தவர். திருமந்திரத்திற்கு காரணமானவர். இவருக்கு சிவராஜ யோகி என்றும் பெயர். இவர் சீன நாட்டுக் கடலோரத்தில் சில நாள் தங்கியிருந்த பிறகு தேரையருடன் வந்து பொதிகைமலைச்சாரலில் சமாதி புகுந்தார். பிறகு சிலகாலம் சென்று வெளி வந்து தேரையருக்குப் புத்தி கூறி மறுபடியும் சமாதி புகுந்து தேகத்தை மறந்தார் என்றும் தேவரிஷி வரத்தால் கமலமுனிக்குப் பிறந்தவர் என்றும் டிவி. சம்பாசிவம் பிள்ளை அகராதியில் கூறப்பட்டுள்ளது.

புராணங்களில் வரும் புலஸ்திய மகரிஷி பிரம்ம தேவரின் காதிலிருந்து பிறந்தவர். இவர் மகன் விசிரவசுவின் மகன் இராவணன். அதனால் இவர் இராவணனுக்கு பாட்டனார் ஆகிறார். இராவணன் கார்த்த வீரியார்ச்சுனனால் சிறைப்படுத்தப்பட்ட போது அவனை விடுவித்தவர். புலஸ்தியர்கள் இருவரா அல்லது ஒருவரா என்று ஆராய்ச்சி செய்யப் புகுந்தால் அது வீண்வேலையாகத்தான் இருக்கும்.

புலஸ்தியர் நூல்களில் காணப்படும் அருமையான கருத்துக்களை ஆராய்வது சித்தர் இலக்கியத்திற்கு பெருமை சேர்க்கும்.

இந்த நூலில் புலஸ்தியர் வாத சூத்திரம் - 300, ஞான கற்பம்-222 என்பவற்றுடன் திருவள்ளுவர் இயற்றியவற்றில் கிடைத்தற்கு அருமையாக உள்ள பரிமுப்பு சூத்திரம் - 30, சூத்திரம் - 16, பஞ்சரத்தினத் திருப்புகழ் - 11 இடம் பெற்றுள்ளன. 1903-ல் வெளியிடப்பட்ட இந்த அரிய நூலை பாதுகாத்து வைத்திருந்து மறுபதிப்பு செய்ய அனுமதி தந்த ஆவணக் காப்பகத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

வணக்கம்

**எஸ்.பி. ராமச்சந்திரன்**

பதிப்பாசிரியர்

# பொருளடக்கம்

## புலஸ்தியர் வாத சூத்திரம் - 300


| வ. எண் | | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | லிங்கரச பற்ப | 10 |
| 2. | சண்டர்ச பற்பம் | 10 |
| 3. | புகை நீர் | 11 |
| 4. | அண்டச் சுண்ணம் | 11 |
| 5. | லிங்கரச பற்பத்திற்குத் தீரும் வியாதி | 13 |
| 6. | லிங்கரச பற்பவேதை | 13 |
| 7. | வாலைரச மெழுகு | 14 |
| 8. | வாலை ரச மெழுகால் தீரும் வியாதிகள் | 16 |
| 9. | உப்புக்கட்டு | 17 |
| 10. | உப்பு வேதை | 19 |
| 11. | கெந்தி தைலம் | 20 |
| 12. | கெந்தகத் தைலப் பெருமை | 21 |
| 13. | துருசு செம்பு | 21 |
| 14. | இரும்புருக்கு | 22 |
| 15. | களங்கின் வேதை | 23 |
| 16. | செம்பு வேதை | 24 |
| 17. | செம்பு செந்தூர வேதை | 25 |
| 18. | நாகரச கெந்தி தைலம் | 26 |
| 19. | மாற்றுயர | 27 |
| 20. | கருவங்கச் செந்தூரம் | 27 |
| 21. | உப்பின் பெருமை | 28 |
| 22. | தங்கவுரம் | 29 |
| 23. | வெள்ளிவுரம் | 31 |
| 24. | தாதுவுறு லேக்கியம் | 31 |
| 25. | பஞ்சலோகச் செந்தூரம் | 32 |
| 26. | தங்கம் | 33 |
| 27. | காரீயம் | 33 |
| 28. | செம்பு | 34 |
| 29. | இரும்பு | 34 |
| 30. | நாகம் | 35 |
| 31. | துருசி செந்தூரச் செம்பு | 35 |

| | | |
|---|---|---|
| 32. | பஞ்சலோகக் களங்கும் வேதையும் | 36 |
| 33. | பஞ்சலோகச் செந்தூரத்திற்கு தீரும் வியாதி | 37 |
| 34. | சூதக்கட்டு | 38 |
| 35. | சூதக்கட்டுப்பு மார்க்கம் | 39 |
| 36. | சூதக்கட்டுப்பு வேதை | 39 |
| 37. | அயச்செம்பு | 40 |
| 38. | அயச்செம்பு வேதை | 42 |
| 39. | அயச்செம்பு களங்கு வேதை | 42 |
| 40. | நாகக்கட்டு | 43 |
| 41. | புகைநீர் | 44 |
| 42. | வெடியுப்புச் சுன்னம் | 44 |
| 43. | நாகக்களங்கு வேதை | 45 |
| 44. | நாகச்செந்தூரத்தால் தீரும் வியாதி | 46 |
| 45. | நீலகண்ட செந்தூரம் | 46 |
| 46. | திராவகம் | 47 |
| 47. | ரசபற்பம் | 47 |
| 48. | துருசுநீரு | 48 |
| 49. | நீலகண்ட செந்தூர வேதை | 49 |
| 50. | நீலகண்ட செந்தூரத்தால் தீரும் வியாதி | 50 |
| 51. | உபரி பாண்டுச் சுன்னம் | 51 |
| 52. | உபரிபாண்டுச் சுன்ன செயநீர் | 52 |
| 53. | துரிசிச் சுன்னம் | 52 |
| 54. | சாறு வர | 53 |
| 55. | லிங்க கட்டு வேதை | 53 |
| 56. | கெவுரிகட்டு அயக்களங்கு | 53 |
| 57. | அயக்களங்கு செந்தூரம் | 54 |
| 58. | வெள்ளிவித்தை | 55 |
| 59. | தாளகக் குரு | 57 |
| 60. | கெந்தி நீரு | 58 |
| 61. | நாகபற்பம் | 59 |
| 62. | நாகபற்பம் வேதை, தீரும் வியாதி | 60 |
| 63. | காந்தச் சத்து, களங்கு, செந்தூரம் | 62 |
| 64. | கெந்தகச் செம்பு விபரம் | 65 |
| 65. | கெந்தகச் செம்பு காந்த சேர்மானம் | 66 |
| 66. | கெந்தகச் செம்பு மகிமை, கெந்தக செம்பு களங்கு | 66,67 |
| 67. | சவுக்காரம், வெடியுப்புச் செயனீர் | 69 |
| 68. | வெள்ளீயச் சுன்னம், துருசிச்சுன்னம் | 70,71 |
| 69. | ரசக்கட்டு, ரசக்குளிகை மகிமை | 71,72 |

| | | |
|---|---|---|
| 70. | வாலை ரச பதங்கம் - தீரும் வியாதி | 73,74 |
| 71. | கல்லுப்புக் கட்டு, கல்லுப்பு வேதை | 75,76 |
| 72. | கிறாணி பேதிக்கட்ட | 77 |
| 72. | தாளக பற்பம் - தீரும் வியாதி | 79,80 |
| 73. | நாகரச செயனீர், துரிசுச் செந்தூரம் | 82 |

**புலஸ்தியர் ஞான கற்பம் - 200**

| | | |
|---|---|---|
| 1. | முதல் திங்கள், இரண்டாம் திங்கள் | 86, 87 |
| 2. | மூன்றாந் திங்கள், நாலாந் திங்கள் | 87, 88 |
| 3. | அஞ்சாந் திங்கள், தேக சித்தி, வெண்சாரை | 89, 90,91 |
| 4. | ஆறாந் திங்கள், ஏழாந் திங்கள் வேறு | 91, 92 |
| 5. | எட்டாந் திங்கள் | 94 |
| 6. | அதிமதுரமிளகரத்தையுடன் முறிகற்பம் | 94 |
| 7. | அமிர்த சஞ்சீவி யாஸ்திரமெனல் | 95 |
| 8. | அமுரியின் பெருமை | 95 |
| 9. | அறியார் தெளிந்தவர்போல் பேசுவரெனல் | 95 |
| 10. | குரு நூலிரு நூற்றின் மகிமையும் தீக்ஷை கங்கை மதியால் அறிவதெனல் | 95 |
| 11. | மதிசந்திர புஷ்கரணி மறைந்ததெனல் | 96 |
| 12. | விஷம் | 96 |
| 13. | ஒன்பதாந் திங்கள் பிராணவாய் வெழுந்தோங்கு நிலமை | 96 |
| 14. | பத்தியம், அபத்தியத்தால் வருந் துன்பம் | 99, 100 |
| 15. | கற்ப முண்ண நாள் | 102 |
| 16. | கல்லுப்பு | 105 |
| 17. | முதலாண்டு, இரண்டாவதாண்டு, மூன்றாண்டு | 108, 109 |
| 18. | உப்பின் பெயர், வழலையுப்பு | 113, 114 |
| 19. | சுன்ன ஜெயநீர் | 116 |
| 20. | நாலாமாண்டு, யோகதாரணை | 118, 119 |
| 21. | ஆறாமாண்டு, ஏழாமாண்டு, எட்டாமாண்டு | 123 - 125 |
| 22. | ஒன்பதாமாண்டு, பத்தாமாண்டு | 126, 127 |
| 23. | மூலிகைகளாக | 127 |
| **1.** | **திருவள்ளுவ நாயனாரருளிச் செய்த பரிமுப்பு சூத்திரம் - 30** | **132** |
| **2.** | **திருவள்ளுவ நாயனாரருளிச் செய்த சூத்திரம் - 16** | **140** |
| **3.** | **திருவள்ளுவ நாயனாரருளிச் செய்த பஞ்சரத்தினத் திருப்புகழ் - 11** | **145** |

சுப்பிரமணியர் துணை

**பதினெண் சித்தர்களிலொருவராகிய**

**புலஸ்திய மகா முனிவரவர்கள் அருளிச் செய்த**

**வாத சூத்திரம் - 301 ஞான கற்பம் - 222**

**திருவள்ளுவ நாயனார் அருளிச் செய்த**

**சூத்திரம் - 30, 16, 11**

இவைகளை நுங்கம்பாக்கம்

*ம-ாளா-ாளா-ஸ்ரீ*

**இரத்தின முதலியாரவர்கள் குமாரர்**

*ம-ாளா-ாளாஸ்ரீ*

**சிங்காரவேலு முதலியாரவர்களால்**

*பல ஏட்டுப் பிரதிகளைக் கொண்டு பரிசோதித்து,*

**உத்தர கோச மங்கை**

*ம-ாளா-ாளா-ஸ்ரீ*

**சண்முக முதலியாரவர்கள்**

வேண்டுகோளின்படி

**சென்னை ஸ்ரீ பத்மநாப விலாச அச்சுக் கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.**

***1903***

**இதன் விலை** *அணா 12*

உ

சிவமயம்

புலஸ்திய மகாரிஷி யருளிச் செய்த

# வாத சூத்திரம் 300

ஆதியந்தம் நிறைந்ததொரு சோதிபாதம்
அன்பான ரிஷிகளுட பாதம் போற்றி
நீதியாயெனை யாண்ட வகத்தீசர்பாதம்
நினைந்துருகிப் போற்றிசெய்து நேர்மையாகச்
சோதியெனு மம்பிகைப் பெண் பாதம் போற்றி
தொல்லுலகில் ரசவாதம் நிலைக்கவேண்டி
பாதிமதி சடையணிந்தோர் பாதம்போற்றி
பகருகிறேன் சூத்திரமுந் நூறுந்தானே. 1

தானென்ற கும்பியெழு நூறுஞ்சொன்னேன்
தாஷ்டிகமாயந் நூற்றில் பாகஞ்சொன்னேன்
வானென்ற யதைக்குறிக்கி முந்நூறாக
வகையாகக் கைபாகம் வரிசையாக
நானென்ற வுலகத்தோர் வாதஞ்செய்து
நலமாகப் பிழைக்கும்வகை நன்மையாக
கோனென்ற குருவருளால் வாதக்காட்டைக்
கொள்ளையிடச் சொல்லுகிறேன் கொள்ளைதானே. 2

கொள்ளையாம் லிங்கபற்பம் அயத்தின்செம்பு
குணமான மெழுகோடு தைலப்போக்கு
சள்ளையி தில்லாமல் வீரப்போக்கு
சரியான கட்டுவகை செந்தூரங்கள்
வள்ளலார் கைபாகம் வரிசையாக
வடிவான சூதபற்பங் கற்பூரங்கள்
உள்ளபடி சொல்லுகிறேன் உலகந்தன்னில்
ஓகோகோ இந்தநூல் உறுதி பாரே. 3

## லிங்கரச பற்பம்

உறுதியாய் முன்னேதான் லிங்கபற்பம்
உகந்துநீ வைத்திடுவா யுலகத்தோர்க்கு
அறுதியாய்ப் பலபிணிகள் தீர்த்துவிட்டு
ஆண்மையாஞ் சீவனத்தைப் பண்ணிக்கொண்டு
உறுதிபெற ரசவாதம் யோகமார்க்கம்
முடிவான ஞானமொடு வழலைபாகம்
நருதியா யிடைபாகம் கைபாகந்தான்
நலமாகச் செல்லுகிறேன் நடத்தைப்பாரே. 4

## சண்டரச பற்பம்

நடத்தைபார் சண்டரச பற்பங்கேளு
நலமாகயடி தளத்தில் நிற்கும்பாகங்
கிடத்திலிட்டு யெரிக்கிறதோர் பாகமாகுங்
கீர்த்தியாய்ப் பலபிணிகள் தீரும்பாகம்
மடபதிகள் மறைத்ததோர் பாகமெல்லாம்
மயங்காமல் பசளைக்குந் தோணும்பாகம்
திடத்துடனே புவியிலுள்ளோர் பிழைக்கச்சொன்னேன்
திரமாக வைத்தியர்க்கு ஆணியாமே. 5

ஆணியாம் லிங்கமது சேர்தானொன்று
அடைவாகக் கல்வத்தில் பொடியாய்ப்பண்ணி
காணியாங் கொடிவேலி ரெண்டுசேரு
காரணமா யிடித்துநீ தெள்ளிக்கொண்டு
வாணியாம் பொடியாக்கி லிங்கத்திட்டு
வடிவாக ரெண்டுமொன்றா யரைத்துத்தூளாய்
நாணியாய் கிடத்திலிட்டு மேலேமூடி
நலமாகச் சீலைமண் வலுவாய்ச்செய்யே. 6

செய்துநீ வாலையென்ற யடுப்பிலிட்டு
செயமாக நால்சாம மெரித்துவாங்கு
நய்துமே தீயாற்றி யெடுத்துப்பாரு
நலமாக வாலைரசம் மேலேநிற்கும்
பய்துமே வழித்ததனை யெடுத்துக்கொண்டு
பதிவாகத் துணிதனிலே விட்டுக்கேளு
கய்துமே பிழிந்திட்டுக் கல்வந்தன்னில்
கலங்காம லிட்டுநீ நாட்டக்கேளே. 7

## புகைநீர்

நாட்டமாய் புகைநீரு வொன்றுகேளு
நலமாக வெடியுப்பு அஞ்சாங்காச்சல்
வாட்டமாய் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
வடிவாகச் சீனமது யிருபத்தினாலுக்
கூட்டமாய் ரெண்டுமொன்றா யிடித்துக்கொண்டு
குணமான வாலையென்ற சட்டியிட்டு
மூட்டவே வாலைதனை மூடிமைந்தா
முனிவாகச் சீலைமண் செய்திடாயே. 8

சீலையென்ற மண்ணதுவே செய்தபின்பு
சிறப்பாக வடுப்பேற்றித் தீயைமூட்டி
வாலையென்ற தீநீரு முந்நேவெள்ளை
வடிவான வெள்ளைதனை வீசிப்போடு
காலையென்ற புகைமஞ்சள் நீருமாகும்
கனிவான மஞ்சள்நீர் தன்னைவாங்கு
வாலையென்ற சூதத்தைக் கல்வத்திட்டு
வடிவான புகைநீரை விட்டுக்கேளே. 9

விட்டுமே சூரியனில் வைத்தபின்பு
விதமாகக் காளான்போல் பூர்த்துநிற்கும்
வட்டுமே பூர்த்ததெல்லா மெடுத்துக்கொண்டு
வடிவாகப் புகைநீரை விட்டுவாநீ
கட்டுமே பின்பொருக்கால் பூத்துநிர்க்கும்
கனிவாக பூத்ததெல்லாங் காயவைத்து
நட்டுநீ சீனமது சேருவாங்கு
நலமான வண்டோடுஞ் சேருதானே 10

## அண்டச்சுன்னம்

தானான வண்டோடு சுத்திக்கேளு
தனியான உவர்மண்ணுஞ் சுன்னம்நேரே
வானாகயோடு தனி விட்டுக்கேளு
வரிசையாய்க் குமுரயெரிக் கழுவிப்போடு
கானான சுத்திசெய்த வண்டவோடு
காதலாய் சேரொன்று சீனாகாரம்
தானான சேரொன்று கல்வத்திட்டு
தன்மையா ரெண்டுமொன்றா யரைத்திடாயே. 11

அரைத்திடவே பழச்சாற்றால் சாமம்னாலு
அதைக்காய வைத்துநீ பின்புகேளு
பரைத்திடவே வெண்கருவால் நாலுசாமம்
பதிவாகக் காயவைத்து வில்தைன்னை
மரைத்திடவே பெரியபுட மிட்டுத்திரு
மயமாகச் சீனமது பொங்கதப்பா
குரைத்திடவே சுன்னமது வாகும்பாரு
குணமான கைபாகம் வரிசைதானே. 12

தானென்ற கடுஞ்சுன்னஞ் சீனச்சுன்னந்
தாஷ்டிகமாய்ச் சகலதுரை யிதுக்குள்ளாச்சு
வானென்ற முன்னேதான் பூத்துநின்ற
வாலைரசந் தானெடுத்துப் பூத்தப்பூவை
நானென்ற சேரொன்று நிறுத்துக்கொண்டு
நலமான சீனமது சுன்னம்நேராய்
கோனென்று தானெடுத்து ரெண்டுமொன்றாய்க்
குணமாகக் கல்வத்தி லிட்டுக்கேளே. 13

இட்டுமே புகைநீரால் ஜாமமாட்டு
இதமாக வில்லைதட்டி ரவியில்போடு
பட்டுமே காய்ந்தபின்பு பகரக்கேளு
பதிவாகக் கிடத்திலிட்டு மேலேமூடி
நட்டுமே மண்சீலை வலுக்கச்செய்து
நாடாக தீயெரிப்பாய் நாலுசாமம்
கட்டுமே யிருந்திடுங்காண் அடியிலேதான்
கனிவாக வாலையென்ற சூதந்தானே. 14

தானென்ற சூதமது வுயரயேராத்
தாஷ்டிகமா யிருந்துவிடும் அடியிலேதான்
கோனென்ற குருவருளாம் பதத்தைப்போற்றி
குணமான சாதிலிங்கஞ் சுன்னமாச்சு
வானென்ற யென்குருதா னகத்தியர்தானும்
வடிவாகச் சொல்லவில்லை வழக்காய்ச்சொன்னார்
நானென்ற ஆணவத்தால் வெளியிற்சொன்னேன்
நலமாக யிக்குருவை நயந்துகாணே. 15

## லிங்கரசபற்பத்திற்குத் தீரும்வியாதி

காணவே சாதிவெல்லந் தன்னிலேதான்
கால்களஞ்சியிட்டு நீயந்தி சந்திகொண்டால்
தோணவே நாளாறு வுண்டபோது
துடியான பத்தியங்க் ளில்லையப்பா
மாளவே தீருகிற நோய்கள் தன்னை
யடைவாகச் சொல்லுகிறே னுற்றுக்கேளு
ஆணவே பேதியோடு சோகைதீரும்
அடவாகச் சூசிகாவாய்வும் போகும். 16

போகுமே மாலையோட சோகைதீரும்
பொல்லாத யீளையொடு யிருமல் தீரும்
ஆகுமே மூலமொடு கிறாணிப்போகும்
அடங்காத வாதமொடு பித்தம்போகும்
பாகுபெற வலிகுன்மம் பித்தகுன்மம்
பாங்காக தொந்தமாங் குன்மம்போகும்
வரகுபெற சிலேற்பனங்க ளெல்லாம்போகும்
வடிவான காயமது கல்தூணாமே. 17

நாமென்ற மகோதரங்க ளெல்லாம்போகும்
நடுங்குமே காமாலை பித்தப்பாண்டும்
தாமென்ற கருமேகங் குஷ்டமெல்லாம்
தன்மையாம் பெருவயறு யிரைப்புநீங்கும்
வாமென்ற தலைவலியும் மண்டைக்குத்தும்
வடிவாகச் சொன்னநோ யனைத்தும்போகும்
கோனென்ற குருவருளால் சொல்லிவிட்டேன்
குணமாகுங் கைமுறையாய்க் கூர்ந்துபாரே. 18

## லிங்கரச பற்பவேதை

கூர்ந்துபார் முன்னேதான் பண்டிதத்தைக்
குணமாகப் பார்த்துநீ பின்னேதானும்
வார்ந்துமே வாதமது செய்துதிரு
வடிவாக யிக்குருவைக் குடுக்கும்பாகம்
நாய்ந்து பார்கும்மிதனில் தைலச்செம்பு
நலமாகச் சொல்லிவிட்டேன் செம்பு தன்னை
பாய்ந்துமே யெடுத்துநீ வுரிக்கிக்கொண்டு
பலமான வாலைகுரு வொன்றுநாக்கே. 19

தாக்கிடவே மாத்தென்ன பத்துமாகுந்
தாஷ்டிகமா யுப்புக்குங் காவிக்கப்பா
வாக்கிடவே யோடாது வொளித்திடாது
வடிவாக யிதைக்கொண்டு ஜீவனத்தைப்பண்ணு
பாக்கியமாய்ச் செய்துநீ யோகம்பாருப்
பதிவாகக் காயசித்திப் பண்ணித்தேறுந்
தூக்கிடவே சொன்னசொல்லுத் தப்பதப்பா
துடியாகச் சகலசித்துஞ் சித்தியாமே. 20

சித்தியாம் வாலைரசம் வைத்துநீயுஞ்
சிறப்பாக வோடாமல் சுன்னமாக்கி
சுத்தியாங் குளிகைதனைக் கட்டிக்கொண்டு
காரியமாய் ஞானவழி யடுத்துக்கூடு
புத்தியாய் சாஸ்திரத்தைக் கூர்ந்துபாரு
பொருளான சகலசித்து மாடலாகும்
பத்தியே நினைவுதான் வைத்துப்பாரு
பதிந்துமனஞ் சாஸ்திரத்தின் பண்பும்பாரே. 21

பண்பாக வைத்தியர்க்கு யிதுவேயாதி
பகலிரவாய்க் கைபாகம் அறியவேணும்
உண்பாரைப் பாத்துநீ திரியவேண்டாம்
உத்துமே சாஸ்திரத்தை நம்பிப்பாரு
கண்பார்வை யாகவே சூதந்தன்னைக்
கனிவாகக் கட்டியே சுன்னம்வைத்து
நண்பாக வுண்டுவர வியாதிபோகும்
நலமாகப் பின்பெல்லாம் நயந்துபாரே. 22

## வாலைரச மெழுகு

பாருநீ வாலைரச மெழுகு தன்னைப்
பண்பாகச் சொல்லுகிறேன் பரிந்துகேளு
காருநீ வாலைரசம் பலமும் ரெண்டு
கனிவாக நிறுத்துமே வைத்துக்கொண்டு
சாருமே வேப்பிலைதான் சேருநூறு
சாக்ஷியாய்க் குறுக்கவே நறுக்கிக்கொண்டு
வாருமே பெரும்பாண்டத் துள்ளேயிட்டு
வடிவாக நல்ல தண்ணீர் நிறையவாரே. 23

வார்த்துநீ யடுப்பேத்தி யெரிநேர் பாகம்
வடிவாக யிலைசுவர வெரித்துக்கொண்டு
சாத்துநீ போகாதே சொல்லக்கேளு
சரியான கம்பிளியில் பிழிந்துகொண்டுக்
காத்துநீ கிட்டிகிகட்டி பிழிந்துகொண்டு
கனிவாக யடிகனத்த சட்டிதன்னில்
பார்த்துமே விட்டுநீ யடுப்பிலிட்டுப்
பதிவாக வாலையென்ற சூதம்விட்டே. 24

விட்டுநீ பொங்காமல் பதமாகத்தான்
விதமாக யெரித்திடக் குழம்புபோலே
நட்டுமே யெரித்திட்டு வழித்துக்கொள்ளு
நலமாகக் கல்வத்தி விட்டுத்தானும்
மட்டுமே யிருசாமம் நன்றாயாட்டி
மயமாக வாலைரசம் மெழுகாய்நிற்கும்
கட்டுமெழு கெடுத்துப் பலமும்பத்து
கனிவாக வாளமது வொன்றுதானே. 25

வொன்றாகுஞ் சுத்திசெய்து கூடச்சேர்த்து
வுறவான பெருங்காயம் பலமுஞ்சேர்த்துக்
கன்றாகச் சிவதைவேர் பலமுமொன்று
நலமாக சுக்கொன்று மிளகுமொன்று
வன்றாக யிவையெல்லாம் நிறுத்துக்கொண்டு
வன்பாக ரசமெழுகோ டொக்கச்சேர்த்து
நன்றாக யரைத்திடுவாய் சாமம்நாலு
நலமாக யரைத்துநீ வழித்திடாயே. 26

யரைத்துடனே வழித்ததைச் சிமிழில்வைத்து
யடவாக வயிரவர்க்குப் பூசைசெய்து
பரைத்துடனே பரைதனக்கும் பூசைப்பண்ணி
பதிவாக மெழுகெடுத்துப் பணந்தான் வீதங்
கரைத்துமே கொடுக்கின்ற வரிசைகேளுக்
கருவாகக் குன்றுமணிப் பிரமாணந்தான்
திரைத்துநீ கொடுத்திடவே தேனில் தானும்
துரையாகத் தீருகிற நோயைக்கேளே. 27

## வாலை ரச மெழுகால் தீரும் வியாதிகள்

தீருகிற நோயென்ன சொல்லக்கேளுத்
திரமாகக் குன்மமுதல் வாதரோகம்
பேருல்கில் பித்தமெல்லா மோடிப்போகும்
பேதமறும் ரசமெழுகைக் கண்டாயானால்
காருகிறகடல் போலே நோய்களெல்லாம்
கருதினால் ரசமெழுகை யுண்டபோதே
ஆருமே யறியாதே யோடிப்போகும்
அண்டபகி ரண்டமெல்லா மாடலாமே. 28

ஆடுமே வாலைரச மெழுகைக்கண்டால்
ஆடலா மொருகோடி வியாதிபோகுங்
கூடுமே கூட்டறிந்தால் சித்தியாச்சுக்
குணமாக வறியாட்டால் குணமொன்றில்லை
தேடுமே தேட்டெல்லாம் ரசத்தினாலே
திடமான பற்பமெல்லாம் பாகத்தாலே
பாடுமே பாட்டெல்லாம் மார்க்கத்தாலே
பரிகாரம் பண்டிதத்தைப் பணிந்துபாரே. 29

பணிந்து பெரியோர்கள் நூலைத்தானும்
பண்பாக மனம்பூண்டு பழக்கம்பண்ணு
அணிந்து பார்முன்னூற்றை யறிந்துபாரு
வாகாக பண்டிதத்தால் நிலைத்துப்போகுந்
தணிந்துபார் சண்டாளர்க் கெய்தாவாறு
தாஷ்டிகவான் கோடியிலே யொருவனுண்டு
பிணிந்துமே பிணியறிந்து மருந்தையீய்ந்தால்
பொல்லாத பிணிகளெல்லாந் தீர்ந்துபோமே. 30

தீர்ந்துபோம் வாலைரச மெழுகைவைத்துப்
பேசாதே புண்டிடவே ரோகமெல்லாங்
கரைந்துமே கடல்புக்கும் வினைகளெல்லாங்
காதலாய் வீற்றிருக்குங் கருதிப்பாரு
பார்த்துமே புளியுப்பைத் தள்ளிப்போடு
பகலிரவாய்ப் பலபிணிக ளோடிப்போகும்
நார்ந்துமே நோயெல்லாந் தவுடுபொடியாகும்
நாதாக்கள் சொல்மொழியை நாட்டம்பாரே. 31

பாருமே நூலைவிட்டுப் பண்டிதத்தைப்
பார்த்தலைவார் பலறினயா மடையரப்பா
காருமே கைபாகந் தன்னைவிட்டு
காதலாய்ப் பார்த்தவர்க்கு நரகமெய்தும்
யேருமே வுழுதாக்கால் பலனுமாகும்
இதமாகப் பண்டிதத்தைப் பாராமூடர்
வேருமே யடிதொடுத்து யேறலாகும்
வீணாக பார்த்தாக்கா லில்லைகாணே. 32

காணவே சூதத்தை விட்டோர் கெட்டார்
காதலாய்த் திரிந்தோர்கள் உடல்கள் கெட்டார்
பூணவே பண்டிதங்கள் புடபாகங்கள்
போக்கோடே செய்தார் மருந்துங்கெட்டு
ஆணவே செத்தாலே வுயிர்கள் போச்சு
ஆகாகா யிச்சையினால் மனதுபோச்சு
நாணவே மனங்குண்ணி யேங்கி யேங்கி
நாடு தனிலலைவார்கள் வாதிதானே. 33

வாதிமகன் வைத்தியனாம் வடிவுமாகும்
வகையறியான் பண்டிதங்கள் செய்யமாட்டான்
சாதியினால் பேசியே சுணங்கன் தானும்
தற்கமது பேசியே தெரிந்தாப்போலே
வேதியார் போலவே யுறவுபேசி
வேதாந்த சாஸ்திரத்தை மெத்தப்பேசி
கோதியே கிளிப்பிள்ளை போலே பேசிக்
குணமாக வலைந்திடுவர் கோடிதானே. 34

## உப்புக்கட்டு

கோடியிலே யலையாம லுப்பைக்கட்டி
குணமாகச் சொல்லுகிறேன் முந்நூர் தன்னில்
நாடியே கைபாகம் உப்புமார்க்கம்
நலமாகக் கட்டுகிற மார்க்கங்கேளு
சாடியே கல்லுப்புப் படி தானெட்டுச்
சார்வாகக் கடல் தண்ணீர் முப்பத்திரண்டு
வாடியே யடிகனத்த சட்டிதன்னில்
வகையாக விட்டுநீ காச்சிடாயே. 35

காச்சியே யகப்பையினால் கிண்டிக்கிண்டி
கனிவாகப் போகாமல் வடிகட்டிக் கொண்டு
வாச்சிடவே வொட்டயெரி யுப்புவெல்லாம்
வகையாக நெடியடங்கிக் கட்டிப்போகுங்
காச்சிடவே ஆண்பனை காய்க்குங்காலம்
கனிவாகப் பெண்பனையாங் கருதிப்பாரு
ஏச்சிடவே யுப்பினா லெல்லாமாகும்
யினமாகும் நவலோகம் பழுக்கும்பாரே. 36

பழுக்குமே உப்பினிட வர்ணங்கண்டால்;
பாஷாணஞ் செம்பதுவுங் களிம்புபோகு
மிகுக்குமே நவலோக மெல்லாந் தங்கம்
ஏழைமதி போகாதே யின்னங்கேளு
நழுக்குமே காச்சினதோ ருப்புவாங்கி
நலமாக வுறுக்குகிற வரிசைகேளு
வழுக்குமே யுப்பதுவும் பலமுமெட்டு
வடிவாக வுண்டையாய்ப் பிடித்துக் கொள்ளே. 37

கொள்ளவே யுண்டைமேல் கவசங்கேளு
கொடிதான கடல்நுரையும் மேனிதானுந்
தள்ளவே சீனமொடு யிடையாய்ச் சேர்த்து
துடியாக யரைத்து நீ வுண்டைமேலே
தள்ளவே கவசமிட்டுக் காயவைத்துத்
தாஷ்டிகமாய் பத்தெருவில் புடத்தைப்போடு
உள்ளபடி யிப்படியே யைந்துதிரம்போடு
உறுதியா யுப்பதுவுங் கட்டும்பாரே. 38

கட்டியதோருப் பதனை யெடுத்துக்கொண்டு
கல்வத்தி விட்டுநீ நெகிழரைத்து
முட்டியே சூதமது பலமுமொன்றில்
முடிவாகக் கவசமது கட்டிநல்ல
இட்டமுட னிதின்மேலே கவசங்கேளு
இதமாகக் கடல்நூரையை யறைத்துக்கட்டிச்
சட்டமுடனதின் மேல்மண் கவசங்கட்டி
சரியாகப் புடமதுவை சாத்தக்கேளே. 39

## உப்பு வேதை

சாத்தக்கேள் பத்தெருவில் புடத்தைப்போடு
சமுசயங்க ளில்லாதே யுப்புச்சாகும்
பார்த்திடவே வுப்பென்றால் யெளிதோமக்காள்
பண்பாகவுப்பை விட்டா லெல்லாம்பாழாங்
காத்திடவே சகலருக்குங் குருவுந்தோணும்
கனிவாகக் கைப்பாகந் தோணுமப்பா
நாத்திடவே பயிர்விளையும் நாத்தில் லாவிட்டால்
நலமாக வுலகமது நில்லாதாமே. 40

ஆமேதான் செம்புருக்கி நூற்றுக்கொன்று
அணைத்திடவே நவலோகம் யெல்லாம்யேமம்
வாமேதா னுப்புக்குங் காவிக்கப்பா
வடிவாகத் தங்கமது யிறங்கும்பாரு
நாமேதான் உப்பைவிட்டா லெல்லாம்பாழாம்
நலமாக உப்பில்லாக் காரமெல்லாம்
சாமேதான் உப்புக்குச் சாயமேற்று
சரியாகும் உப்பினிட தண்மையாமே. 41

தண்மையாய் உப்புச் செந்தூரங்கேளு
தாஷ்டிகமாய்க் கட்டியதோ ருப்புதன்னை
உண்மையாய்ப் பலம்பத்து ரெண்டுதூக்கி
உறுதியாய்ப் பொற்றலையின் சாற்றாலாட்டி
வண்மையாய் நால்சாம மாட்டிக் கொண்டு
வடிவாக வில்லைதட்டிக் காயப்போடு
மேன்மையாய்ப் பத்தெருவில் புடத்தைப்போடு
மெதுவாக யெடுத்துப்பார் செந்தூரமாமே. 42

செந்தூரம் நவலோகம் நூற்றுக்கொன்று
சேர்த்திடவே பத்தரைதா னாணிக்கொக்கும்
பந்தூர மாகவே மண்டலந்தான்
பதிவாக வுண்டிடவே தேகந்தானும்
நந்தூரஞ் செவ்வலறிப் போலேயாகுந்
நலமாகப் பச்சைநரம் பிருக்கும்பாரு
வந்தூரும் விந்தூறும் வடிவாம்மெத்த
வகையாக யெல்லாமுஞ் சித்தியாமே. 43

சித்தாவ தேதென்றால் சொல்லக்கேளு
செயமாக வுப்பிலே கோடிவித்தை
முத்தியாய் உப்பென்றால் எளிதோ மக்காள்
மோகமுறும் உப்புக்கு காரமேற்றி
நத்தியே நவலோகந் தன்னிலீய
நலமாக யெல்லாமுஞ் சித்தியாகும்
பத்தியே வுப்பைமுந்தி கட்டிப்பாரு
பாலகனே வித்தையெல்லாஞ் சித்தியாமே. 44

## கெந்தி தைலம்

சித்தியாம் யின்னமொரு சேதிகேளு
செப்புகிறேன் சித்தரெல்லாஞ் செப்பாதெல்லாம்
புத்தியாய் கெந்தகத்தின் தைலங்கேளு
புகலறிய கெந்தகந்தான் சேருவொன்று
நத்தியே யண்டமது அன்பத்தொன்று
நலமாகச் சட்டிதனில் தண்ணீரூற்றி
முந்தியே யவித்திட்டுப் பின்புகேளு
முடிவான அண்டமெல்லாம் எடுத்துக் கொள்ளே. 45

எடுத்துமே அண்டத்தை யுடைத்துநீயு
மிதமாக வெண்கருவைத் தள்ளிப்போடு
அடுத்துமே மஞ்சளென்ற கருவைவாங்கு
அடவாகச் சேரொன்று கெந்தியிட்டு
பத்துமே யிதுரெண்டுங் கல்வத்திட்டு
பதிவாக யிருசாம மாட்டிநன்றாய்
விடுத்துமே பெரியதொரு யடையாய்த் தட்டி
விதமாகச் செய்கின்ற நேர்மைகேளே. 46

கேளுநீ குப்பிக்குள் நிறையத்தானே
கெடியாக யடைத்துநீ பின்புகேளு
வாறுநீகுப்பிவாய் தன்னிலேதான்
வடமாக மயிர்துருத்துப் பின்புநீதான்
வாளுநீ தொட்டியைதா னடுவில்பொத்தி
வடிவாக குப்பியைத்தான் வைத்துநன்றாய்
கேளுநீ மண்ணிலிட்டு நேராய்த்தானும்
கெடியாக யடுப்பேற்றி மேலேதானே. 47

## கெந்தகத் தையிலப்பெருமை

மேலேதான் புடமிட்டு எரிக்கும்போது
மேன்மைபெற யடுப்புக்குள் பீங்கானிட்டு
காலேதான் புடமாறி யெடுத்தாயானால்
கனிவாகத் தயிலமது மஞ்சள்போலாம்
மாலேதான் மஞ்சளென்ற தைலந்தன்னை
மயமாக மண்டலந்தான் கொண்டாயானால்
காலேதான் குஷ்டமெல்லா மோடிப்போகுங்
கைமுறையாங் கெந்தகத்தின் தயிலந்தானே. 48

## துருசுசெம்பு

தானென்ற கெந்தகத்தின் தையிலத்தாலே
தாஷ்டிகமாய் நவலோகம் பழுக்கும்வேதை
வூனென்ற யிந்தநூல் தன்னிலேதான்
வுறுதியாய்ச் சொல்லுகிறேன் செம்புவேதை
வானென்ற துருசதுதான் பலந்தாநாலு
வடிவான சட்டிதனி லிட்டுக்கேளு
நானென்ற தீயெரித்து சாமம்நாலு
நலமாகப் பார்த்திடவே வெள்ளையாமே. 49

வெள்ளையாம் துருசுநீர் பலந்தான்ரெண்டு
விதமாக கெந்தியது மூவரையுமாகும்
சள்ளையாம் சூடனது பலமும்ரெண்டு
சார்வான வீரமது பலமுங்கால்தான்
வெள்ளையாமிது நாலுங் கல்வத்திட்டு
கொடிதான பழச்சாற்றில் சாமம்நாலு
உள்ளையாந் தானரைத்து வுண்டைசெய்து
யுறுதிபெறக் காயவைத்து வுண்டைகேளே. 50

கேளப்பாவதின் மேலே கவசங்கேளு
கெடியான சுண்ணாம்பும் உப்பும்நேராய்
ஆளப்பா யரைத்ததின் மேல் கவசம்பண்ணு
அதின்மேலே மண்ணரைத்து கவசம்பண்ணு
மாளப்பா புடமிட்டுப் பார்த்தாயானால்
மாசற்ற செந்தூர மாகும்பாரு
தேளப்பா கொட்டுதல்போ விந்தமார்க்கம்
தெகிட்டாது துருசினிட மார்க்கப்போக்கே 51

மார்க்கமென்ன பின்புநீ செய்யக்கேளு
மதிமயங்கிப் பேரகாதே யப்பாகேளு
தீர்க்கமென்ன வெடியுப்பு திராவகத்தை
தளறவேயிட்டு நன்றாய் வைத்துக்கொண்டு
யேர்க்கமென்ன யரப்பொடியும் பலமுமொன்று
யெலுமிச்சம் பழச்சாற்றா லூறவைத்து
கார்க்கமென்ன தெளிவிறுத்து வைத்துக்கொண்டு
கனிவாக முன்மருந்தை யரைத்திடாயே 52

அறைத்துமே பில்லைதட்டி காய்ந்தபின்பு
யகலிலிட்டு மேலகலால் மூடிக்கேளு
முறைத்துமே மூன்றெருவில் புடத்தைப்போடு
முக்கியமா யாறவிட் டெடுத்துக்கொண்டு
குறைத்துமே குகையிலிட்டு வுருக்கித்தீரு
குணமான செம்பாகுங் கூர்ந்துபாரு
வறைத்துநீ செம்பெடுத்துக் கரியில்வைத்து
வகையாக வூதிநன்றாய் வைத்துக்கொள்ளே 53

## இரும்புருக்கு

கொள்ளவே யரப்பொடியும் பலந்தாநாலு
கொள்கியதோர் கெந்தியது பலமும்நாலு
மள்ளவேயிது ரெண்டுங் கல்வத்திட்டு
மயனமா யிருசாம மறைத்துத்தீரு
கள்ளவே குகையிலிட்டு வுருக்குநன்றாய்
கனமான மணியாகுங் கண்டுகொள்ளு
தெள்ளவே மணியெடுத்து வைத்துக்கொண்டு
திரமாகச் செய்தொழிலை சொல்லக்கேளே. 54

கேளுநீ முன்செம்பு பலமும்நாலு
கெடியாக பலமொன்று வுருக்கிரும்பு
தாளுநீ தங்கமது பலமுமொன்று
தாஷ்டிகமாய் மூன்றுமொன்றா யுருகிக்கொண்டு
பாளு நீ போகாமல் களங்கமாகும்
பகரரிது களங்கினுட பெருமைமெத்த
சாறுநீ வெள்ளியது பலந்தானொன்று
சமர்த்தாக காரீயஞ் சமமாய்க்கூட்டே. 55

கூட்டியே யோட்டிலிட்டு யூதிப்போடு
குணமாக கசடகற்றி தகடுதட்டி
வாட்டியே வுப்புரெண்டு செங்கல்லொன்று
வடிவாக கல்வத்தி லிட்டரைத்து
நாட்டியே வட்டதனில் புடத்தைப்போடு
நலமாக வெள்ளியதை மேலேவைத்து
பூட்டியே மூவஞ்சுப் புடத்தைப்போடு
முக்கியமா யெடுத்துப்பார் முறையதாமே 56

## களங்கின் வேதை

முறமையாய் சேர்க்கிற பாகங்கேளு
முற்றிபெற வெள்ளிதா நாலுமாகு
மருமையாங் களங்கமது வொன்றுமாகும்
அடவாக யிதுமூன்று முருக்கித்தானும்
தருமையாய் பார்த்திடவே பத்துமாற்று
திறமாக வுப்புக்குங் காவிக்கேகா
நிறமையாய் தாயைவிட்ட பாவத்தாலே
நிஷ்டூர மாகுமிது வாதந்தானே. 57

வாதமது நிலைக்கவே சொல்லக்கேளு
வடிவான தங்கமது சாகவேணும்
சூதமது தங்கத்தில் சேர்க்கவேணும்
சுகமான தங்கமது யெளிதிலாகுங்
காதமது நடந்தானோர் வழியுந்தானுங்
காதலாய் துலையுமது கருதிப்பாரு
வேதமது படித்தாலே ஞானமாகும்
விதமாக யெல்லாமுஞ் சித்தியாமே. 58

சித்தியாந் தங்கத்தால் வேதைகோடி
செப்பரிய சூதத்தால் வேதைகோடி
புத்தியினால் வாதசித்தி யுடனேயாகும்
புகலரிய தைலத்தால் வேதைகோடி
நத்தியே கெந்தியினால் வித்தைக்கோடி
நாடாத வாதவித்தை நளினமாகுஞ்
சத்தியமாய் சொல்லிவிட்டேன் முன்னூர் தன்னில்
சகலசித்தி நிலைக்குமது தாக்கிப்பாரே 59

## செம்பு வேதை

தாக்கிடவே யின்னமொன்று சாற்றக்கேளு
சாதகமாய்ச் சொல்லுகிறேன் கையின்பாகம்
வாக்கிடவே செம்பதுவுஞ் சேறுமொன்று
வடிவாகத் தகடாகத் தட்டிக்கொண்டு
நோக்கிடவே கல்லுப்பு சேருயெட்டு
நுருதியாய் செங்கல்மா னாலுசேறு
யாக்கிடவே ரெண்டுமொன்றாய் நெகிழரைத்து
யடவாக வரட்டிதனில் பரப்பிவையே. 60

பரப்பியே செம்பென்ற தகடுவைத்து
பதிவாக யெருவடுக்கிப் புடமும்போடு
கரப்பியே புடமாறி யெடுத்துத்தானே
கனிவாக வெங்கலத்தின் சட்டிதன்னில்
பரப்பியே தண்ணீரை நிறையவிட்டு
பாங்காகப் புரட்டியெடு பண்பதாக
உரப்பியே யலசியெடு யதிரைத்தானும்
உண்மையாய் மண்ணில்லா தெடுத்திடாயே. 61

எடுத்துநீ யதுவெல்லாங் காயப்போடு
யிதமாகக் காய்ந்தபின்பு யின்னங்கேளு
அடுத்துமே கெந்தியென்ற தைலந்தன்னை
வடிவாக யதிலே யிட்டுமேதான்
கடுத்துமே மூன்றுநா ளூரவைத்து
கனிவாகவே யரைத்து பில்லைசெய்து
நடுத்துமே காயவைத்து புடத்தைப்போடு
நன்மையாய் சிவந்துநிற்குஞ் செம்புதானே. 62

தானென்ற சிவந்துநின்ற செந்தூரத்தை
தாஷ்டிகமாய் நேராகக் காரங்கூட்டி
வானென்ற யிதையரைத்து குகையில்வைத்து
வடிவாக யுருக்கிடவே செம்புமாகும்
நானென்ற செம்புதனில் நாலுக்கொன்று
நலமாகத் தங்கமது சேர்த்துருக்கி
கானென்ற தகடாகத் தட்டிக்கொண்டுக்
கனிவாக கெந்தியது முக்கால்சேரே. 63

சேர்த்துநீ வீரமது காலுங்கூட்டிச்
சிறப்பாகத் தகடுக்கு மேலும்பூசி
பார்த்துநீ புடம்போடு நுறுங்குமட்டும்
பரிவாகப் போட்டுயெடு கறுத்துப்போகுங்
கார்த்துமே மயங்காதே வெள்ளிதன்னில்
கனிவாக நாலுக்கு வொன்றுகூட்டி
நார்த்துமே யுருக்கிப்பார் மாத்துகாணும்
நலமாகப் பத்தாகும் நயந்துபாரே. 64

## செம்பு செந்தூர வேதை

நயந்துபார் செந்தூரஞ் செய்யக்கேளு
நலமாகத் திராவகத்தா லரைத்தரைத்து
பயந்துமே போகாதே புடத்தைப்போடு
பதிவாக யிப்படிக்கிப் பத்துமுறைபோடு
கயந்துமே செந்தூரம் முருக்கன் பூப்போல்
காரியமாய் தானிருக்குஞ் செந்தூரந்தான்
முயந்துமே செந்தூரம் நூற்றுக்கொன்று
மூட்டுவாய் நவலோகந் தன்னில்கேளே. 65

கேளுமே யிருபத்தியஞ்சு மாத்து
கெடியாக வர்ணமது பச்சையாகும்
ஆளுமே யிதுதனையே தணிக்கக்கேளு
அடவாக செம்புதனை வைத்துருக்கி
நாளுமே பார்த்திடவே மாத்துதானும்
நலமாகத் தணியுமது தங்கமாகும்
வாளுமே தங்கத்தை வைத்துக்கொண்டு
வளமாக ஜீவனத்தைப் பண்ணிடாயே. 66

பண்ணிடவே யோகமொடு ஞானம்பாரு
பதிவாகச் சுழிமுனையில் நாட்டம்பாரு
உண்ணிடவே மண்டலத்தில் காயசித்தி
யுறவான வாதமது யெண்பதுந்தான்
தண்ணிடவே யோடுமது கடலேபுக்கும்
தாஷ்டிகமாய் சிலேத்பனங்க ளோடிப்போகுங்
கண்ணிடவே கள்ளிப்பால் கறந்தாப்போல்
கனிவாகச் சித்திதருங் கண்டுபாரே. 67

கண்டுபாரயச் செம்பைக் கண்டபோதே
கனிவாக யெல்லாமுஞ் சித்தியாகும்
உண்டிடவே மனமது மகிக்ஷியாகும்
முறுதியிது நல்லவித்தை யுற்றுப்பாரு
கொண்டிடவே சித்தரிடங் கூடிவாழ்வீற்
குணமாக யெல்லாமுஞ் சித்திமெத்த
பண்டிடவே சித்தியெல்லாம் பண்புமாகும்
பார்ப்பவர்க்கு வெகுசுளுவு பண்புதானே. 68

பண்பாக யின்னமொரு சேதிகேளு
பதிவாக ஞானகர்ப்ப யோகமாகுங்
கண்பாக நாகரச தைலந்தன்னைக்
கனிவாகச் செய்திடவே யுலகத்தோர்க்கு
நண்பாக நவலோகம் பழுக்கும்வேதை
நாட்டியே கைபாகவ ரிசைநேர்மை
உண்பாரை யுடுப்பாரைப் பார்த்துயேங்கி
உறவழிந்து போகாதே வாதம்பாரே. 69

வாதமென்றால் கொஞ்சத்தில் கிடைக்குமோசொல்
மகத்தான யோகிமுதல் ரிஷிகள் சித்தர்
நீதமென்ற பஞ்சகர்த்தா ளிவர்கட்கெல்லாம்
நிரைநிரையாய்ப் பார்த்திடினும் தப்பிப்போகும்
வேதமென்ற யஞ்சாம் வேதத்துக்கொக்கும்
விரைந்து மனோன்மணித்தாயார் சொல்லக்கேட்டு
பாதமென்ற பாதத்தை சிரசில்வைத்துப்
பரிவாக நாகரச கெந்திப்பாரே. 70

## நாகரச கெந்தி தைலம்

நாகரச கெந்தியென்ற குருவைத்தானும்
நாதாக்க ளொளித்திட்ட குருவைக்கேளு
தாகமதாய் கைபாக வரிசைகேளு
தாஷ்டிகமாய் நாகமது பலமுமொன்று
யோகமாய் நாகத்தின் சுத்திகேளு
யொத்துமே யிலுப்பநெய் தன்னிலப்பா
பாகமாய் பத்துவிசை யுருக்கிச்சாய்க்கப்
பண்பாக வூரலற்றுக் கட்டும்பாரே. 71

கட்டியதோர் நாகத்தைக் கரண்டியிட்டு
கனலிலிட்டு யுருக்கியே கருணையாகத்
திட்டமுடன் ரசந்தன்னை யதிலேவாரு
தாஷ்டிகமாய் ரசத்தையுமே நாகமுண்ணும்
பட்டிகமாய் தவளையும் பாம்புந்தானும்
பதிவாக முழுங்கினதுபோல் முழுங்கும்
அட்டியில்லை மய்யர்சொன்ன கைபாகத்தை
அன்பாகச் சொல்லுகிறே னறிந்துக்காணே. 72

அறிந்துமே யிந்தயெடை கெந்திசேர்த்து
அப்பனே யதையிட்டு சாமமூன்று
கறிந்துமே யரைத்ததனை வில்லைசெய்து
கனமான ரவிதனிலே யுலரப்போடு
பறிந்துமே யுலர்ந்தபின்புச் சொல்லக்கேளு
பண்பாக யெருவடிக்கி புடத்தைப்போடு
நறிந்துமே தைலமது யெறங்கும்பாரு
நலமாகத் தைலத்தை யெடுத்துக்கொள்ளே. 73

## மாற்றுயர

தைலத்தை யெடுத்துமே சொல்லக்கேளு
தயவாக மதிதனிலே யீந்தால்கேளு
அகிலமெல்லாங் குடுத்தாலுந் தைலவேலை
ஆச்சரியங் கெந்தகத்தின் போக்குமெத்த
தைலமதில் தணிந்தபொன்னை தையிலத்தில்தோய்த்து
தாஷ்டிகமாய்ப் புடம்போட்டு வுருக்கிப்பாரு
வயிலமாய் மாத்துதான் பத்துமாகும்
வடிவாகக் கைபாக்மாகச் செய்யே. 74

## கருவங்கச் செந்தூரம்

செய்யவே யின்னமொரு களங்குகேளு
செப்புகிறேன் உலகத்தில் சொல்லாநீதி
நையவே காரியஞ் சேர்தானொன்று
நலமாகச் சித்திபண்ணி குகையிலிட்டு
மெய்யவே யுருகையிலே யிடைதான் கேளு
மேன்மைபெறக் கெவுரிதனை யீய்ந்திட்டாக்கால்
பையவே நொறுங்கியது தூளுமாகும்
பதிவாக வயசட்டி தன்னிலிட்டே 75

இட்டுமே கல்லுப்புச் சேர்தானொன்று
இதமாகக் குடுத்து வறுபயமில்லாமல்
கட்டுமே யிருசாமம் வறுத்தபின்பு
கருவாகக் கற்றாழைப் பாலாலாட்டி
வட்டுமே பெரியபுடம் போட்டுத்திரு
வடிவாகச் செந்தூர முருக்கம்பூபோல்
நட்டுமே யிருந்துவிடும் நாலத்தொன்று
நலமாக வங்க செந்தூரந்தானே. 76

தானென்ற செந்தூரந் தன்னிலேதான்
தாஷ்டிகமாய் தாளகமுஞ் சூதஞ்சேரு
வானென்ற புகைநீரா லரைத்துக்கொண்டு
வடிவாகக் காயவைத்து வண்மையாக
நானென்ற அகலிலிட்டுப் புடத்தைப்போடு
நலமாகச் செந்தூர முருக்கம் பூப்போல்
கானென்று யிருக்குமது செம்புநூற்றில்
கனிவாக யொன்றிடவே கனகமாமே. 77

கனகமாம் வங்கத்தைக் கண்டபோதே
காதலுடன் செல்வங்கள் மெத்தவுண்டு
வனகமாம் வங்கமென்ற ராஜாவாலே
வடிவான சகலகுரு வழியுமாகும்
உனகமாம் வாதமெல்லா மேதினாலே
உறுதிமிக யுண்டாகும் வுற்றுப்பாறு
தனகமாம் வழலையெல்லாம் வங்கத்தாலே
தாஷ்டிகமா. யெல்லாமுஞ் சித்திகாணே. 78

## உப்பின் பெருமை

காணவே யுப்பை முந்தி கட்டிப்பாரு
கனகமா யாவதற்குக் கருத்துவேணும்
பூணவே உப்பாலே யெல்லாமாச்சு
புகலறிய வுப்புக்குக் காரமேத்தி
தோணவே யுப்பென்றால் பெரிதேயல்லால்
துரிதமுட நுப்பதுவுங் கட்டிற்றானால்
பாணவே வங்கத்தை முந்திக்கட்டு
பகலிரவு தோற்றுமந்த வாட்டமாமே 79

வாட்டமாய் கைபாகமாகச் செய்தால்
வடிவாகுங் களங்காகுங் குருவுமாகும்
பூட்டறிய பூட்டெல்லாம் உப்பினாலே
புகலரிய கட்டுவகை உப்பினாலே
தேட்டமா யுப்பைவிட்டோர் கெட்டாரப்பா
செகச்சால மாவதற்கு யுப்பைகட்டு
நாட்டவே யுப்பெல்லாங் கருமத்தாலே
நாடினால் சித்திக்கும் உப்புதானே. 80

தானென்ற வுப்புக்கு காரமேற்று
தாஷ்டிகமாய் வயற்றுவலி குன்மம்போகும்
வானென்ற வறிசையாய் செய்துகொண்டு
வடிவ்வாக சரக்கொல்லா மிறிகிக்கட்டுங்
கானென்ற பூதத்தைக் கண்டு தானுங்
கனிவாகப் பார்த்தல்லோ செய்துகொண்டு
நானென்ற வாணுவத்தை தள்ளிப்போடு
நலமாக வாதவித்தைக் கண்டுதேரே. 81

கண்டுகண்டு தேறியே மனதைக்கட்டு
கனிவாக யெல்லாமுஞ் சித்தியாகும்
பண்டுவிட்ட குருவாலே வருவதாகும்
பதிவாக வாதமென்றால் எளிதிலாமோ
முண்டுவிட்டு கைபாகமாகச் செய்து
முனைந்துநீ பார்த்தாக்கால் தெரியுமப்பா
வண்டுபோ லலையாதே நூலைப்பாரு
மயங்காதே யறிவுகுருவாகும் பாரே. 82

## தங்கவுரம்

ஆகுமே தங்கவுறஞ் சொல்லக்கேளு
வாச்சரியம் இதுவேகு முன்னேபாரு
வாருபெறத் தங்கவுறங் கண்டபோதே
வலுவான நோய்களெல்லா மாண்டுபோகும்
பாகுபெற நோயெல்லாம் தவிடுபொடியாகப்
பண்பாகச் சொல்லுகிறே னுற்றுக்கேளு
தாகுபெறத் தங்கம்போல் வைத்துக்கொள்ளு
தாஷ்டிகமா யிம்முறையை வைத்திடாயே. 83

வைத்திடவே யின்னமொரு சேதிகேளு
வடிவாக வெள்ளீயஞ் சுத்திசெய்ய
கைத்திடவே கரண்டிதனி லுறுக்கிக்கொண்டு
கனிவாக வெள்ளாட்டு யமுறிதன்னில்
நைத்திடவே யேழுதிறமுறிக்கிச் சாய்க்க
நல்லசுத்தி யாயிருக்கும் நயந்துபாரு
பைத்திடவே சுத்திசெய்த யீயந்தன்னை
பதிவாகப் பலமாறு நிறுத்துக்கொள்ளே. 84

கொள்ளவே கரண்டிதனி லுருகும்போது
குணமாக யெண்ணைகுத்தி குளகுளக்க
துள்ளவே சூதமது பலமுமாறு
துடிவாக யுருகும்போ திரதம்வாறு
விள்ளவே ரெண்டுமொன்றா யுருகிநிற்கும்
விதமாக யாறவிட் டெடுத்துக்கொள்ளு
தள்ளாமல் கல்வத்தி லிட்டுடைத்து
தாஷ்டிகமாய் பிட்டாகுஞ் சார்ந்துபாரே. 85

பாருநீ கெந்தகந்தான் பலமுமாறு
பதிவாகச் சீனமது பலமுமாறு
காருநீ சாரமது பலமுமாறு
கனிவாக யிதுவஞ்சும் நிறுத்துக்கொண்டு
தாருநீ வாய்நீரை விட்டுக்கொண்டு
சாதகமாய்ச் சாமமது வரைத்து நீயுஞ்
சாருநீ காயவைத்து பின்புதானுஞ்
சரியான கைபாக வரிசைகேளே. 86

வரிசையா மறைபுட் டிகுப்பிதன்னில்
வாகாக வடைத்துநீ பின்புகேளு
வரிசையாய் கோணிதான் சவுக்கமாக
வுகந்துமே வலுவாகச் சீலைசெய்து
நரிசையாய் காயவைத்து சட்டியொன்று
நலமாக நடுவிலே பொதிந்துகொண்டு
கரிசையாய் குப்பிதனை நடுவிலிட்டு
கனிவாக நாலுவிர லடியில்தானே. 87

தானென்ற வடிதனிலே தெரியச் செய்து
தாஷ்டிகமா யுள்ளேதான் மணலையிட்டு
வானென்ற குப்பிவாய் தெரியவிட்டு
வடிவாக நால்சாமம் கமலம்போலே

கானென்ற தீயிட்டு சிலாக்கையாலே
கனிவாகக் குத்தியே யெரித்துப்பாரு
நானென்ற வடுப்பாற்றி பிரித்துத்தானும்
நலமாக மெள்ளவே யெடுத்திடாயே. 88

### வெள்ளிவுரம்

எடுத்திடவே குப்பிதா னொறுங்கிப்போகும்
ஏழைமதி போகாதே யெடுத்துப்பாரு
அடுத்துமே தங்கம்போல் நிறமுமாகு
மன்பாகதங்க வரப்பொடிபோல் காணுந்
தடுத்துநீ சீனத்தை தள்ளிமைந்தா
சரக்குத்தா நாலுநீ சேர்த்தரைத்து
விடுத்துநீ முன்போலே யெரித்துப்பார்த்தால்
விதமாக வெள்ளியரப் பொடிபோலாமே. 89

### தாதுவுறு லேகியம்

ஆமேதான் தாதுவுட குணத்தைக்கேளு
யன்பாக சாதிக்காய் லேகியத்தை
வாமேதான் சாதிக்காய் பலமுமொன்று
வடிவான பத்திரியுங் கிறாம்புயேலங்
காமேதான் கோஷ்டமொடு வால்மிளகு
கனிவான கசகசா மதுரந்தானும்
நாமேதான் வகைக்கொன்று பலம்நிறுத்து
நலமாக யிளவருப்புச் செய்திடாயே. 90

செய்திட்டு பின்புதான் சொல்லக்கேளு
ஜெயமாக பசுவின்பால் படிதானொன்றில்
பைதிட்டு சட்டியில்விட் டடுப்பிலேற்றி
பண்பாகத் தீயெரிப்பாய் கமலமாக
நைதிட்டு யெரித்திடவே சர்க்கரையைவிட்டு
நலமாகப் பதமாகக் காச்சிக்கொண்டு
வைதிடவே முன்மருந்தை தூவிக்கொண்டு
வளமாக யாவிநெய் யதனிலூற்றே. 91

ஊற்றியே லேகியமாய்ப் பண்ணிக்கொண்டு
யுண்மையாய் பாக்களவு யந்திசந்தி
நாற்றிசையு மெய்க்கவே சொல்லக்கேளு
நலமாக தங்கவுறம் பணந்தான்வீதஞ்

சாத்தியே மண்டலந்தா னுண்ணும்போது
சரீரத்திலுள்ள நோய் தவறுண்டேபோம்
மாற்றியே மன்மதன்போல் தேகமாகும்
மயமான விந்துருக்கும் வடிவதாமே. 92

ஆமேதா னனுபோகஞ் செய்யும்போது
யடவான விந்துதான் கீழ்நாடாது
தாமேதான் பெண்களெல்லாம் மயங்கிப்போவார்
தயவாகத் தங்கவுற முண்டதாலே
வாமேதான் பத்தியத்தை சொல்லக்கேளு
வடிவாகப் பாலன்னம் புசித்துத்தீரு
காமேதான் பச்சைநரம் பிறிகிக்காணுங்
கனிவாக நோய்களெல்லா மோடிப்போமே. 93

ஓடுமே தங்கவுறங் கண்டபோதே
யோதறிய குஷ்டமுதல் கருங்குஷ்டந்தான்
நாடுமே யிதைவைத்து ஜீவனத்தை
நலமாகச் செய்திடவே சகலசித்தி
கூடுமே கைபாகமாகச் செய்து
கூடுதற்கு முன்னேதான் குணமாய்வைத்து
தேடுநீ நவலோகந் தன்னீலீய
திடமாக மாத்தென்ன பத்துமாமே. 94

ஆமேதான் தங்கவுறந் தன்னைக்கண்டா
லடைவான நோயெல்லா மோடிப்போகும்
வாமேதான் தங்கவுறம் வைத்தப்பின்பு
வாதாடும் வையித்தியத்தில் வலுமைமெத்த
தாமேதான் பார்த்திடவே ஜீவனத்தை
தாஷ்டிகமாய் செய்திடவே பின்புநீயுங்
காமேதான் பஞ்சபூதத்தைக் காணு
கனிவாகப் பார்த்திடவே சித்தியாமே. 95

## பஞ்சலோகச் செந்தூரம்

ஆமேதான் பஞ்ச பூதத்தைத்தானும்
அன்பாகக் கைவரிசையாகச் சொல்வேன்
தாமேதான் மாத்தெல்லாம் பஞ்சபூதந்
தாஷ்டிகமா யிதைவைத்து நவலோகத்தில்

காமேதான் கொடுத்திடவே மாற்றுமாகுங்
கனிவாக பூதத்தி லொன்றுதப்பில்
வாமேதான் பலபலவாம் வாதங்காணும்
வடிவான வாதமது பிசகுந்தானே. 96

தானென்ற வாதத்தை விட்டாயானால்
தாற்குரும்ப னாய்த்திரிவாய் பெண்ணைச்சேர்ந்து
யூனென்ற காயமது நிற்காதப்பா
யுருதியாய்க் காயமது நிற்கவேண்டில்
வானென்ற பஞ்ச பூதத்தைச்செய்து
வடிவாகச் செந்தூரம் வைத்துக்கொண்டு
கானென்று வுண்டிடவே காயந்தானுங்
கனிவாக யுகவரைத்தா னிருத்துந்தானே. 97

## தங்கம்

இருத்துமே பஞ்ச லோகத்தைக்கேளு
இதமாகத் தங்கமது பலமுமொன்று
கருத்துமே காச்சியே தகடுதட்டி
கனிவாகக் கல்காவி பழச்சார்விட்டு
நருத்துமே யரைத்துநீ தகட்டின்மேலே
நலமாகக் காச்சிமுன்னே தடவியேதான்
உருத்தியே யேழுதிரந் தோய்த்திட்டாக்கால்
உறவாகச் சுத்தியாந் தங்கந்தானே. 98

## காரீயம்

தூங்கமாந் தங்கத்தை சுத்தி செய்து
தாஷ்டிகமாய் விபரமினி சாத்தக்கேளு
துங்கமாங் காரீயம் பலமுமொன்று
துடியாகக் சுத்தாழம் பாலால்சுத்தி
பங்கமா யேழுதிர முரிக்கிச்சாய்த்துப்
பதிவாகச் சுத்திபண்ணி பின்புகேளு
சங்கமாய் கரண்டிதனில் வைத்துருக்கி
சத்தியமாஞ் சூதமதை யதனிலூற்றே. 99

ஊற்றியே நல்லெண்ணை கொஞ்சங்குத்தி
யுருதியா யாறவைத்துப் பின்புகேளு
நாற்றிசையு மெய்க்கவே யாறவிட்டு
நலமாக யெடுத்துநீ கழுவிப்போட்டு

வாற்றியே கல்வத்தி லிட்டுக்கேளு
வளமான கெந்தியரை பலமேயிட்டு
காற்றியே புகைநீரா லரைத்துசாமங்
கனிவாக வில்லைதட்டி காயப்போடே. 100

## செம்பு

காயவே வைத்தபின்பு பாகங்கேளு
கனிவாக யகலிலிட்டு மேலே மூடி
நாயகமாய் மண்ணரைத்துச் சீலைசெய்து
நலமாகப் பத்தெருவில் புடத்தைப்போடு
மாயவே யெடுத்துநீ தூரவைத்து
மயமாகப் பின்பொன்று சொல்லக்கேளு
சாயவே செம்பதுவும் பலமுமொன்று
தான்காச்சித் தகடாகத் தட்டிக் கொள்ளே. 101

தட்டியே ராவி யதைக்கல்வத்திட்டு
தாஷ்டிகமாய் லிங்கமரைப் பலந்தான்கூட்டி
வட்டியே புகைநீரால் சாமமாட்டி
வடிவாக வில்லை தட்டிக் காயப்போடு
நட்டியே யகலிலிட்டுப் புடமுந்தீரு
நலமாகச் சிறுசாகப் போட்டுத்தானுங்
கட்டியே யெடுத்துநீ தூரவைத்து
கருத்தாகப் பின்புதான் கருதக்கேளே. 102

## இரும்பு

கருதவே யிரும்பதுவும் பலமுமொன்று
கனிவாகக் கெவுரியது பலமுமொன்று
வருதவே ரெண்டும் நீ நிறுத்துக்கொண்டு
வடிவாக கல்வத்திலிட்டுக் கொண்டு
நருதுமே புகைநீரை விட்டுயாட்டி
நலமாகக் குகையிலிட்டு வுருக்கினாக்கால்
நருதவே யுருகியே மணிபோலாகும்
நலமான வெள்ளிமணி போலேயாமே. 103

## நாகம்

ஆமேதா னுருகினதோ ரயத்தைத்தானும்
நலமாக தூரவைத்துப் பின்புகேளு
காமேதா னாகமது பலந்தானொன்று
கலங்காம விலுப்பெண்ணை தன்னில் தானும்
நாமேதா னுருக்கியே கரண்டிதன்னில்
நலமாகச் சூதத்தைப் பாதிவிட்டு
வாமேதா நல்லெண்ணைக் கொஞ்சங்குத்த
வளமாகப் புட்டாகு மெடுத்துக்கொள்ளே. 104

## துருசி செந்தூரச் செம்பு

எடுத்துமே தாளகமும் பாதி சேர்த்து
இதமாகப் புகைநீரை விட்டரைத்து
நடுத்துமே வில்லைதட்டிக் காயப்போடு
நலமாகக் காய்ந்தபின்பு நாட்டக்கேளு
யடுத்துமே யகலிலிட்டுப் புடத்தைப்போடு
யடவாக வாறினபின் எடுத்துப்பாரு
கடுத்துமே சேர்க்குகிற வரிசைகேளு
கனிவாகத் துரிசியது சேறுவொன்றே. 105

ஒன்றாகச் சீனமது சேருவொன்று
யுருதியா யண்டோடு சேருவொன்று
நன்றாகக் கல்வத்திலிட்டுத் தானும்
நலமாக வெண்கருவா லரைத்துமைபோல்
வன்றாக வரைத்துநீ வில்லைதட்டி
வளமாகப் பெரியபுடம் போட்டுத் தீரு
கன்றாகக் கல்வத்திலிட்டுத் தானுங்
கனிவாக யரைத்துநீ துரிசிமேலே. 106

மேலாகக் கட்டியே பின்புகேளு
மேன்மைபெற மேல்கவசம் கட்டித்தானுங்
காலான பெரியபுடம் போட்டுத்தீரு
கனிவாகவதைப் பிரித்துப் பார்த்தாயானால்
நாலான செந்தூரம் போலிருக்கும்
நலமான குகைதனிலே வைத்துருக்கச்
சேலாக வுருகியது நல்ல செம்பாஞ்
செகச்சால வித்தைக்குத் திரமாம்பாரே. 107

## பஞ்சலோகக் களங்கும் வேதையும்

பாருநீ செம்புதான் பலமும்நாலு
பதிவாகத் தங்கமொன்று முன்னே தாக்கு
சாறுநீ பின்னேதான் காரீயத்தைச்
சாதகமா யுருகையிலே கிறாசமிட்டு
ஏறுநீ பின்னேதான் லிங்கம் தாக்கு
இதமாக யதன்பின்னே யயத்தைத்தாக்கு
வாறுநீ யதன்பின்னே நாகந்தாக்கு
வடிவாக யஞ்சுதர முருக்கிப்பாரே. 108

உருகுமே யஞ்சுந்தான் உருக்கிப்பாரு
முருதிமிகக் குருவாகும் வெள்ளிதன்னில்
நருகுமே யெட்டுக்கு ரெண்டுதாக்கு
நலமாக வூதிவிட் டெடுத்துக்கேளு
பெருகுமே யெட்டேகால் மாத்துக்காணும்
பிசகாது யுப்புக்குங் காவிக்கப்பா
கருதியே போகாது கைபாகத்தைக்
கருவாகச் சொல்லுகிறேன் கண்டுபாரே. 109

பாருமே யிதைவைத்து ஜீவனத்தைப்
பக்குவமாய்ப் பார்த்துநீ பின்புகேளு
வாருமே வாசி யோகத்தைப்பாரு
வடிவாக ஞானவழி யெடுத்துக் காட்டும்
ஏருமே வுழுதாலே வாதமாகும்
ஏரில்லா நுகத்தடிக் கதைபோலாகுஞ்
சாருமே யென்றைவிட் டொன்றுசெய்தால்
சரியில்லா தலைவார்கள் வாதிதானே. 110

தானென்ற களங்கத்தைச் செந்தூரிக்க
தாஷ்டிகமா யிதுலகுவு முன்னேபாரு
வானென்ற களங்கமதைப் பலம்நிறத்து
வடிவாக கெந்தியது நாலத்தொன்று
தானென்ற வீரமது நாலத்தொன்று
கனிவாகக் கல்வத்தி விதனையிட்டு
நானென்ற புகைநீரால் ஜாமமாட்டி
நலமாக வில்லைகட்டி காயப்போடே. 111

போட்டுநீ யகலிலிட்டுப் புடத்தைப்போடு
பொலிவாகத் தீயாற்றி யெடுத்துப்பாரு
காட்டுநீ செந்தூர முறுக்கம்பூபோல்
கனிவாக யிருக்குமது நவலோகத்தில்
நாட்டுமே நூற்றுக்கு வொன்றுதாக்கு
நலமாகப் பத்தரைதான் மாற்றுகாணும்
வாட்டுமே வுப்புக்குங் காவிக்கேகா
வளமாக வுண்டிடவே நாட்டங்கேளே. 112

### பஞ்சலோகச் செந்தூரத்திற்கு தீரும் வியாதி

நாட்டமா யந்திசந்தி யுண்ணும்போது
நலமாக நரைதிறைக ளற்றுப்போகும்
வாட்டமாய் நோயெல்லாந் தவிடுபொடியாகும்
வடிவாக வாதமது தீர்ந்துபோகுங்
கூட்டவே பித்தமது போகுமப்பா
கூர்ந்துப்பார் பலபிணியுங் குடிகெட்டோடும்
மூட்டுமே மகோதரமு மோடிப்போகும்
மூதண்டக் கூடமெல்லாம் முடிவுதானே. 113

தானென்ற நூல்தனிலே நாதாக்கள் சொன்னார்
தாஷ்டிகமாய் நவலோகம் வேதையாக
வானென்ற முந்நூற்றில் வெளியாய்ச் சொன்னேன்
வடிவாக யிந்தநூல் தன்னைப்பாரு
கானென்ற கைபாகம் வெளியாய்ச் சொன்னேன்
கடினமென்று போகாதே கருதிப்பாரு.
நானென்ற வாணவத்தால் வெளியாய்ச் சொன்னேன்
நலமாகச் சொன்னதெல்லாம் சித்தியாமே. 114

சித்தியாம் நாதாக்களேது செய்வார்
சிறப்பாக கைபாகமாகச் செய்வார்
புத்தியாய் கைபாக யினமறிந்து
புனிதமாய் செந்தூரஞ் செய்துக் கொள்வார்
நத்தியே பாகமதைக் கண்டபோதே
நலமாக நூல்மரமந் தெரியலாகும்
பக்தியுடந் நூல்மரமந் தெரிந்தபோதே
பகலிறவாய் ஞானம்வந்து நிலைக்கும்பாரே. 115 .

## சூதக்கட்டு

பாருநீ சூதத்தைக் கட்டில்வேதை
பகறியப் பொன்னாகும் வேதையாகுங்
காருநீ செம்புதனைக் களிம்பெடுக்க
கனிவாகக் களிம்புதான் போகுமப்பா
வாருநீ கட்டாகும் மெழு குமாகும்
வடிவாக யெல்லாமுஞ் சித்தியாகுஞ்
சேருநீ சூதத்தைக் கட்டக்கேளு
சிறப்பாகக் கட்டுதற்கு வகையைக்கேளே. 116

கேளுமே சூதமது கட்டக்கேளு
கெடியாகத் துருசதுவும் பலமும்ரெண்டு
வாளுமே லச்சையென்று மயங்க வேண்டாம்
வடிவாகத் துருசதுவும் சூதத்தைக் கொல்லும்
நாளுமே யக்கரண்டி தன்னைத்தானே
நன்றாகத்தான் வெளுக்கத் தேய்த்தலம்பி
சாளுமே வெள்ளையாய்த் தேய்த்துத்தேய்த்துச்
சரியாக யலம்பியே சொல்லக்கேளே. 117

சொல்லக்கேள் துரிசதனைப் பொடித்துக்கொண்டு
சருக்காரைப் பழச்சாறு நிறையவிட்டு
கல்லவே சூதமது பலமுமொன்று
கனிவாகக் கரண்டிதனில் விட்டுப்பின்பு
நல்லவே மூன்றுநா ளூரத்தானும்
நலமாக வைத்துப் பின்னெடுத்துக்கொண்டு
மல்லவே கல்வத்திலிட்டு நீயும்
மயமாகக் கழுவியே தண்ணீர்வாரே. 118

வார்த்துடனே நன்றாகக் கழுவிக்கொண்டு
வடிவாக யட்டைபோ லிருக்கும்பாரு
காத்துமே துணியிலிட்டுப் பிழிந்திட்டாக்கால்
கனிவாகக் கட்டியா யிருக்குமப்பா
நாத்துமே கட்டியே யிறுகினத்தை
நலமாக வுண்டையா யுருட்டித்தானும்
பார்த்துமே குளிர்ந்ததண்ணீர்க் குள்ளேயிட்டு
பறிவாக மூன்றுமே போட் டுவையே. 119

## சூதக்கட்டுப்பு மார்க்கம்

போட்டுமே மூன்றுநாள் கழிந்தபின்பு
புகழாக யெடுத்துநீ சொல்லக்கேளு
நாட்டுமே கல்லுப்பு பலமும்நாலு
நலமாகக் கல்வத்தி லிட்டரைத்து
வாட்டுமே யுண்டைக்கி கவசங்கட்டி
வடிவாகக் காயவைத்துப் பின்புகேளு
மூட்டவே கடல்நுரைதான் சேருவொன்று
முனிவாக மேனியிலைக் கால்தானாமே. 120

ஆமேதா னிதையரைத்து வுண்டைமேலே
யடைவாகக் கட்டியே காயவைத்து
நாமேதான் பத்தெருவில் புடத்தைப்போடு
நலமாக யாறினபின் னெடுத்துநீயும்
வாமேதான் கவசத்தைப் பிரித்துப்பாரு
வளமாகக் கடல்நுரையைத் தள்ளிப்போட்டு
தாமேதா னுப்புரச மெடுத்துக்கொண்டு
தயவாக வைத்திடவே நல்லதாகும். 121

## சூதக்கட்டுப்புவேதை

நல்லதுதான் செம்புதனில் பத்துக்கொன்று
நலமாகக் கொடுத்துருக்கி யெடுத்துக்கொண்டு
கல்லைதான தையுடைத்து வெள்ளியெட்டில்
கனிவாக வொன்றுதான் குடுத்துருக்க
வல்லதான் பார்த்திடவே மாத்துயெட்டு
வாகாக வுப்புக்குங் காவிக்கோடா
சல்லாப மாகவே புடமிறங்குஞ்
சரியாக யிதைமுன்னே வைத்திடாயே. 122

வைத்துநீ யிந்தயுப்பைத் தின்றாயானால்
வடிவான நரைதிரைக ளோடிப்போகுங்
கைத்துநீ போகாதே யுப்பைத்தின்றால்
கனிவாக யெல்லாமுஞ் சித்திமெத்த
வித்திலே விளைந்ததொரு பாகமாகும்
விதமாகும் நவலோகம் மேன்மையாகுஞ்
சத்தியமாய் நோய்களறுங் காணாதோடுஞ்
சரியான பொருளாகுஞ் சார்ந்துபாரே. 123

பாருநீ முன்னேதா னுப்பைப்பாரு
பதிவான வுப்பதுதா நெளிதோமக்காள்
யாருமே சொல்லார்க ளுப்புமார்க்கம்
அடவான கைபாகம் நேர்மைமெத்த
கோருமே கருவைத்தா னறியவேணுங்
குணமான யுப்பிலே யெல்லாமாகும்
வாருமே வுப்பில்லாக் கருமமெல்லாம்
வழும்பாச் சியாதியுப்பு வாண்மைகேளே. 124

ஆண்மையாம் உப்படங்கிக் கட்டினாக்கால்
அறுபத்து நாலுசித்தி யாடலாகும்
வண்மையாம் வாதமது யேவல்கேழ்க்கும்
வடிவாக யோகமது சித்தியாகுந்
தண்மையாம் வுப்பிலே யெல்லாமாச்சு
தாஷ்டிக மாயுப்பைவிட்டா லெல்லாம்போச்சு
பொன்மையா மாத்தெல்லா முப்பினாலே
புரண்டோடுங் கெவுனமது உப்பாலாச்சே. 125

ஆச்சப்பா வுப்பைவிட்டால் ருசியோபோச்சு
யோடுகிற காலுக்கு வுறுதிபோச்சு
பாச்சப்பா யப்பைவிட்டு உப்பைக்கட்டி
யாடலா மொருகோடி வித்தைதானும்
வுப்பைவிட்டி லுப்பதுவுஞ் சிவந்து தானால்
ஆடலா மொருகோடி வித்தையப்பா
தப்பிதமாய்ச் சொல்லவில்லை யுப்பின்போக்கு
சாக்ஷியா யெல்லாமு மறிந்திடாயே! 126

## அயச்செம்பு

அறிந்திடவே யின்னமொரு சேதிகேளு
ஆதியா மயச்செம்பு சொல்லக்கேளு
பரிந்திடவே அயப்பொடியும் பலமோபத்து
பேரான பழச்சாற்றி லூறவைத்து
நரிந்திடவே மூன்றுநாள் சென்றபின்பு
நலமாக வதையலும்பி நாட்டக்கேளு
வரிந்திடவே துரிசியது சேர்தானொன்று
வடிவாக கெந்தியது முக்கால்சேரே. 127

சேர்த்துநீ மூன்றுமொன்றா யரைத்துக்கொண்டு
சிறப்பான பழச்சாறு கூடவிட்டு
பார்த்துமே யரைத்து வுண்டைபண்ணிநீயும்
பதிவாகக் காயவைத்துப் பின்புகேளு
கார்த்துநீ வுப்புடனே சுன்னமிட்டு
கனிவாக வுண்டைக்கிக் கவசங்கட்டி
வார்த்துமே மண்கவச மேலேகட்டி
வளமாகப் பத்தெருவில் புடத்தைப்போடே. 128

போட்டுமே யெடுத்துப்பார் கறுப்பாய்நிற்கும்
புகலாதே குகையிலிட்டு காரங்கூட்டி
காட்டுநீ யுருக்கிடவே சத்துமாகும்
காரணமாய் சத்தெடுத்து காரங்கூட்டி
வாட்டுநீ காரத்தைப் பாதிகூட்டி
வடிவாக யிருசாம மரைத்துப்பில்லை
நாட்டியே காயவைத்துப் புடத்தைப்போடு
நலமாகக் குகையிலிட் டுருக்கிடாயே. 129

உருக்கிடவே சத்தாகுஞ் சத்துதன்னை
யுருதியாய் வெண்காரம் பாதிசேர்த்து
நரிக்கிடவே பழச்சாற்றா லரைநால்சாமம்
நலமாக வில்லைதட்டிக் காயப்போடு
பெரிக்கிடவே பெரியபுடம் போட்டுத்தீரு
பேசாதே குகையிலிட்டு வுருக்குநன்றாய்
நெரிக்கிடவே யிப்பிடிக்கித் திரமுமஞ்சி
நேராக வுருக்கிடவே சத்துமாமே. 130

ஆமேதான் சத்துதான் வெள்ளையாகும்
அடவான சத்துதனை பிரிக்கக்கேளு
நாமேதான் வீரமது ஒன்றுகூட்டி
நலமாகப் பழச்சாற்றா லரைத்து நன்றாய்
சாமேதான் பார்த்திடவே மஞ்சள்போலாஞ்
சரியாகக் கிடத்திலிட்டு யெரித்துப்போடு
வாமேதான் வீரமது வுயரயேரும்
வடிவாக யடியில்நிற்கும் மருந்துதானே. 131

## அயச்செம்பு வேதை

மருந்தெடுத்துக் காரத்தைக் கூட்டிநீயும்
வடிவாக குகையிலிட்டு வுருக்கித்தீரு
கருந்தாதே சிகப்பாகுஞ் சிகப்புமெத்த
காசினியி லிச்செம்பு நல்லதாகும்
வருந்தாதே வெள்ளிதனில் கொடுத்தாயானால்
வடிவாக மாத்தேழு காணுங்காணும்
அருந்தவே வுப்புக்குங் காவிக்கேகா
ஆண்மையா யிதைவிற்று ஜீவனமே செய்யே. 132

## அயச்செம்பு களங்குவேதை

செய்யவே அயச்செம்பு வெள்ளி தன்னில்
திறமாகக் கொடுத்திடவே மாத்துயெட்டு
பையவே அயச்செம்பைக் கண்டபோதே
பதிவாகக் கலியெல்லாம் பறந்துபோகும்
மெய்யவே அயச்செம்பு பலமும் நாலு
மேன்மையாந் தங்கமது பலமும்நாலு
நைய்யவே ரெண்டுமொன்றா யுருக்கிநல்ல
நலமாகத் தகடு தட்டி நாட்டக்கேளே. 133

நாட்டமாய் நாலுக்கு ஒன்றுகெந்தி
நலமாக வீரமது காலதாகுங்
கூட்டமா யிதுரெண்டு மரைத்துமேலே
குணமாகத் தடவியே புடத்தைப்போடு
வாட்டவே தகடதுவும் நொறுங்கிப்போகும்
வடிவாக வெள்ளிதனில் நாலுக்கொன்று
ஊட்டவே கொடுத்துறுக்கு மாத்துப்பத்து
உறுதியாய் வாதமிதில் ஒழுங்குமாமே. 134

ஒழுங்காகும் அயச்செம்பைக் கண்டபோதே
உறுதியாய் வாசி யோகத்தைப்பாரு
அழுங்கவே முன்னேதான் அயத்தைப்பாரு
யடவாகச் செந்தூரம் பண்ணியுண்ணு
நழுங்கவே அயத்தினிட மேனியாகும்
நலமான கருவாகும் நாடிப்பாரு
வழுங்கவே மனமொன்றாய்க் கூடும்பாரு
வளமாக பொருளாகும் நாடிப்பாரே. 135

நாடிப்பார் முன்னேதா நயத்தின் செம்பை
நலமாக வைத்துநீ வேலைசெய்து
கூடிப்பார் கூட்டுமுறை கண்டவாதி
குணமாக யெல்லாமுஞ் செயமுமாகும்
வாட்டியே கெந்தகத்தால் வரணமெத்த
வடிவாகத் தாளகத்தால் வர்ணமெத்த
கூட்டியே கூட்டறிந்து குடுத்துப்பாரு
குணமாக யெல்லாந்தான் கூர்ந்துபாரே. 136

கூர்ந்துமே பஞ்சபூதத்தைக்கண்டு
குறிப்பான நேர்மைகண்டு சேர்வைகண்டு
ஆர்ந்துமே தங்கமில்லா வாதமில்லை
அரிதரிது தங்கத்தை யறியாவிட்டால்
வார்ந்துமே கெந்தியில்லாச் செந்தூரந்தான்
வடிவுமிக யாகாது வலுச்செய்யாது
மரந்துநீ பாயில்லாக் கப்பல்போலே
மயமாக வோடாது மார்க்கமாமே. 137

மார்க்கமாம் யோகமுத்தர் வாக்கியத்தால்
வடிவாக வாதங்கள் உருகும்பாரு
தீர்க்கமில்லாப் படுபாவி தனக்குத்தானுந்
திடமாக வொன்றுமில்லை திட்டம்பாரு
ஏர்க்கவே சுடுவாதி தனக்குமில்லை
இதமான பண்டிதமு மில்லைகண்டாய்
கார்க்கவே கைபாகந் தனையுங்கண்டோர்க்
கருணையுள்ள புத்தியுள்ளோர்க் காண்பார்பாரே. 138

## நாகக்கட்டு

கருதியே நாகமது கட்டக்கேளு
கனிவாக நாகமது பலமுமெட்டு
நருதியே நாகமது சுத்திகேளு
நலமாக யிலுப்பெண்ணை தனிலுருக்கி
வருதியே யேழுதிரஞ் சாய்த்துப்பின்பு
வடிவாகச் சுத்தியாம் வர்ணமெத்த
பருதியே தானுருக்கி வட்டாய்சாய்த்து
வடிவாகப் புகைநீரை யொன்றுகேளே. 139

## புகைநீர்

கேளுமே வெடியுப்பு பலமும்பத்து
கெடியான சீனமது யிருபத்தஞ்சி
வாளுமே ரெண்டுமொன்றா யிடித்துப்பின்பு
வடிவாக வாலையென்ற சட்டியிட்டு
நாளுமே தீயெரிக்க வெள்ளை நீராம்
நலமாக வெள்ளையைத்தான் தள்ளிப்போடு
காளுமே மஞ்சளைத்தான் பிடித்துக்கொண்டு
நலமான சீசாவி லடைத்துக் கொள்ளே. 140

## வெடியுப்புச்சுன்னம்

அடைத்துமே பின்பதுவும் ஒன்றுகேளு
அடவாக வெடியுப்பு சுன்னங்கேளு
நடைத்துமே வெடியுப்புப் பலமும்பத்து
நலமாகப் பழம்புளியும் பலமுமைந்து
படைத்துமே ரெண்டுமொன்றா யிடித்துக்கொண்டு
பதிவாகப் புதுச்சட்டி தன்னிலிட்டு
முடைத்துமே தீயெரிக்கச் சுன்னமாகு
முணர்வாகச் சுன்மது பலமுமொன்றே. 141

ஒன்றாக நிறுத்துமே புகைநீர் தன்னில்
உறுதியாய் பொட்டிடவே புகைந்துபத்தும்
நன்றாகப் பத்தினதோர் புகைநீர்தன்னில்
நலமாகச் சிவந்து சிலமாகும்பாரு
கண்டாத யிச்சிலத்தில் வீரம்போட்டு
கனிவாகப் பாத்திடவே காரம்ரொம்ப
நன்றாகப் பிங்கானி லிறுத்துக்கொண்டு
நலமாக முன்னாகந் தன்னில்தானே. 142

தானென்ற நாகத்தை யுருக்கிச்சாய்க்க
தாஷ்டிகமாய்ப் புகையடக்கிக் கட்டிப்போக்கும்
வானென்ற நாகத்தை வில்லைவார்த்து
வடிவாக வதின்மேலே கவசங்கேளு
கோனென்ற வளகிலுப்பை யரைத்துக்கட்டி
குணமாகக் காயவைத்துப் பின்புகேளு
நானென்ற மண்சிலை வலுவாய்ச்செய்து
நாடியே பெரியபுடம் போட்டிடாயே. 143

போட்டுநீ யெடுத்துப்பார் தந்தம்போலே
பொலிவாகக் கண்ணடங்கி நிற்கும்பாரு
காட்டுமே நல்லகட்டு முழுக்கட்டப்பா
நாடியே கட்டெல்லா முப்பினாலே
நாட்டுமே உப்பைவிட்டால் வர்ணம்போச்சி
நலமாக வுப்பை முந்திக்கட்டிப்பாரு
மூட்டுமே உப்பில்லாக் கட்டுயெல்லாம்
முதலாகப் பார்த்திடவே சித்தியாமே. 144

## நாகக்களங்கு வேதை

சித்தியாம் நாகத்தை யுருக்கிக்கொண்டு
சிறப்பாகத் தங்கமது யிடையேசேர்த்து
புத்தியா யுருக்கியே தகடுதட்டி
போக்கோடே யிரதமது யிடையேசேர்த்து
நத்தியே யரைத்திடவே சூதந்தானும்
நலமாக மயினம் போலாகும்பாரு
பத்தியா யிருசாம மாட்டிப்பின்பு
பதிவாகக் காயவைத்துப் பின்புகேளே. 145

கேளுநீ கிடத்திலிட்டு மேலேமூடி
கெட்டியாகச் சீலைமண் வலுக்கச்செய்து
ஆளுநீ வாலையென்ற வடுப்பிலிட்டு
யடவாக யிருசாம மெரித்துப்பாரு
நாளுமே செந்தூர முருக்கம் பூப்போல்
நலமாக யிருந்துவிடுஞ் செந்தூரந்தான்
பாளுமே போகாது செந்தூரந்தான்
பதிவாக நவலோகம் நூற்றுக்கொன்றே. 146

ஒன்றாக நூற்றுக்கு யொன்றுதானே
போக்கோடே விட்டிடவே மாத்துப்பத்து
நன்றாக உப்புடனே யிரங்கிப்போகும்
நாட்டிலே செந்தூரங் கிட்டாதப்பா
வன்றாகச் செந்தூரங் குன்றியுண்ண
வடிவாக வாத மெண்பதுதானப்பா
கன்றாகப் பித்தமது யெல்லாம்போகுங்
கனிவாகச் சித்தருங் கணக்குமாமே. 147

## நாகச்செந்தூரத்தால் தீரும் வியாதி

ஆமேதான் மகோதரமும் மாலைபோகும்
அடைவான காயமது கல்தானாகும்
நாமேதான் பவுத்திரங்க ளண்டவாதம்
நலமாக விரைவாத மெல்லாம்போகும்
பாமேதான் குடல் வாதம் நீர்கள்போகும்
பதிவாகப் பயித்தியமு மயக்கம்போகும்
தாமேதான் பவுத்திரங்கள் காமாலைபோகும்
சாக்ஷியா யிவையெல்லாஞ் சித்தியாமே. 148

சித்தியாங் காமாலை பித்தவெட்டை
கெடியாச் சூலை பதினெட்டும்போகும்
புத்தியாய்ப் பொல்லாத நோய்களெல்லாம்
புகலறிய புண்புரைகள் லிங்கப்புத்தும்
நத்தியே மதுமேகம் ஆம்பல்கட்டி
நலமான நீர்க்கட்டு நாடாதோடும்
சத்தியமாய்ச் சொல்லிவிட்டேன் கைபாகத்தை
தாஷ்டிகமாய்ப் பார்த்திடவே தருணமாமே. 149

தருணமாம் ரசவாதம் யோகவாதம்
தாஷ்டிகமாய்ப் பார்த்தரிந்தால் தண்மையாகும்
வருணமாம் நூலறிந்தால் வாதமாச்சு
வடிவாக யறியாட்டால் வாதம்போச்சு
கருணமாய் ஞானமெல்லா மேதாலாச்சு
கருத்தறிந்த பெரியோ ரைக் கண்டுபாரு
வருணமாய் நம்பியே பார்த்தாயானால்
வடிவாகுஞ் சித்திதரும் வண்மைதானே. 150

## நீலகண்ட செந்தூரம்

தானென்ற நீலகண்ட செந்தூரத்தை
தாஷ்டிகமாய்ச் சொல்லுகிறேன் இறக்கமாக
வானென்ற நவலோக மெல்லாம்யேமம்
வடிவாக யறிந்தவனே சித்தயோகி
நானென்ற யாணவத்தை விட்டோன்வாதி
நலமாக நூலறிந்தோன் நல்லசித்தன்
கோனென்ற குருவறிந்தோன் ஞானியாவான்
குணமாக யறியாதான் குணமில்லானே. 151

குணமாக நீலகண்ட வாலை தன்னைக்
கொடிதாகச் சொல்லுகிறேன் கூர்ந்துகேளு
பண்பாகக் கைபாக வரிசைகேளு
பார்த்தறியச் சொல்லுகிறேன் பாரின்மீது
இனமாக வுப்பாலே யெல்லாமாச்சு
ஓகேகோ வுப்பைவிட்டார் லுத்தமாண்பர்
கனமாக முப்பூவா மிந்தப்போக்குக்
காதலா யறிந்தவனே வாதியென்னே. 152

## திராவகம்

வாதியாஞ் சொல்லுகிறே யுற்றுக்கேளு
வடிவாக வெடியுப்பு அஞ்சாங்காச்சல்
நீதியாம் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
நேரான சீனமது யிருபத்தஞ்சி
கோதியாம் ரெண்டுமொன்றா யிடித்துக்கொண்டு
குணமாக வாலையென்ற சட்டியிலிட்டு
நீதியா யெரித்திடவே வெள்ளை நீரை
நேராகத் தள்ளியே பின்னீர்வாங்கே. 153

## ரசபற்பம்

வாங்கியே மஞ்சள்நிறம் வருகுமக்காள்
வடிவான மஞ்சளென்ற நீருதன்னை
தாங்கியே பிடித்துநீ வைத்துக்கொண்டு
தாஷ்டிகமாய் வாலைரசஞ் சேருவொன்று
பாங்கியே கல்வத்தி லிட்டுநீயும்
பதிவாகப் புகைநீரை யதிலேவாரு
தூங்கியே திரியாதே ரவியில்வைத்தால்
துப்புறவாய்ப் பூத்திருக்குந் நேர்மைதானே. 154

தானென்ற பூவெடுத்து வைத்துக்கொண்டு
தாஷ்டிகமாய் சூதத்தில் புகைநீர்குத்தி
வானென்று வைத்திடவே பூத்திருக்கும்
வடிவாக யிப்படிக்கி யெல்லாப்பூவை
கானென்று யெடுத்துடனே வைத்துக்கொண்டு
கனிவாகப் பாகமாய்க் கண்டுபாரு
தேனென்ற சிவகாமி சொல்லக்கேட்டு
திடமாக முப்பூவைச் சொல்வேன்பாரே. 155

## துருசுநீறு

பாருநீ துருசதுவுஞ் சேர்தானொன்று
பதிவாகவதைப் பொடித்துச் சட்டியி..ட்டு
காருமே தீயெரிக்கச் சாமம்நாலு
கனிவாகக் கொக்குநிறம் போலேயாகுஞ்
சாறுமே யதையெடுத்துத் தூரவைத்துச்
சரியாக யறப்பொடிதான் சேர்தானொன்று
வாருமே கல்வத்திலிட்டுக் கேளு
வடிவான வீரமது பாதிசேரே. 156

சேர்த்துநீ புகைநீரால் நெகிழவாட்டிச்
செம்மையுடன் வில்லைதட்டி காயப்போட்டு
பார்த்துநீ யகலிலிட்டுப் புடத்தைப்போடு
பதிவாகத் தீயாற்றி யெடுத்துப்பாரு
வார்த்துநீ சிவந்திருக்கும் முருக்கம்பூப்போல்
வடிவாகப் பலம்நாலு நிறுத்துக்கொண்டு
சாத்துவேன் பூத்திருக்குஞ் சூதந்தானுஞ்
சரியாகச் சேர்த்துநீ துருசுநீரே 157

நீறாக மூன்றுமொன்றா யிடையே சேர்த்து
நேராகப் புகைநீரை விட்டுயாட்டி.
ஆறாக யரைத்துப்பார் சிவந்துநிற்கும்
அடைவாகப் பசுக்காது முருக்கம்பூவாம்
காரமா யிருசாம மரைத்து நன்றாய்
கனிவாக வில்லை தட்டிக் காயப்போடு
நாறாகக் க்ர்ய்ந்தபின்பு கிடத்திலிட்டு
நலமாக மேல்மூடிச் சீலைசெய்யே. 158

சீலைசெய்து காயவைத்துச் சொல்லக்கேளு
செயமாகச் சட்டிதான் பெரிசாய்வாங்கி
ஆலையாம் நடுவிலே பொதிந்துத்தானே
அடவாகக் கிடமதுவை யிட்டுவுள்ளே
வாலையா யுள்ளேதான் மணலையிட்டு
வடிவாகத் தியெரிப்பாய்ச் சாமம்பத்து
காலையா யெரியிட்டுப் பிரித்துப் பார்த்தால்
கண்கொள்ளாச் செந்தூர மாகுந்தானே. 159

தானாகக் கொஞ்சமது வுயரயேறி
தனியாக யிருந்திடுமே சார்ந்துபாரு
வானாக யதைவழித்து அடியில்நிற்கும்
வடிவான செந்தூரந் தனைச்சேர்த்து
நானாகப் புகைநீரை விட்டுயாட்டி
நலமாக முன்போலே வில்லை தட்டி
தேனாக ரவிதனிலே காயவைத்து
திடமாக முன்போலே கிடத்திலிட்டே. 160

இட்டுமே தீயெரிப்பாய் பத்துசாமம்
இதமாக வாறியபின் நெடுத்திடாய்நீ
கட்டுநீ பார்த்தாலே கனங்கொள்ளாது
கனிவான செந்தூர முருக்கன்பூவாம்
பட்டுநீ கைபாக மிந்தப்போக்கு
பதிவான விதியாளிக் கெய்துமப்பா
நட்டிநீ வைத்தாலே யிந்தப்போக்கு
நலமாக விளையுமது நாடிப்பாரே. 161

நாடியே வயிரவர்க்குப் பூசைசெய்து
நலமாகச் செந்தூரந் தனையெடுத்து
கூடியே கும்மிதனில் தைலச்செம்பு
கூறினேன் முன்னூற்றுக் கொன்றுதாக்கு
வாடியே மாத்தென்ன பத்துமாகும்
வடிவான மகரகுண்டலங்கள் பண்ணி
தேடியே யிதைக்காணப் போற்றாமாண்பர்
செகத்திலே கிடையாது செந்தூரந்தானே. 162

## நீலகண்ட செந்தூரவேதை

தானென்ற செந்தூரம் நவலோகத்தில்
தாஷ்டிகமாய் பார்த்திடவே மாத்துப்பத்து
வானென்று சாஸ்திரத்தில் நாதாக்கள் சொன்ன
மறைப்பெல்லாம் பாடிவிட்டே னுலகுதன்னில்
நானென்ற வாணவத்தால் செந்தூரத்தை
நாடியே சொல்லிவிட்டேன் நல்லவர்க்காம்
கோனென்ற குருவருளைப் போற்றிதானே
குணமான சித்திதருங் கூர்ந்துபாரே. 163

## நீலகண்ட செந்தூரந் தீரும் வியாதி

பாருநீ அந்திசந்தி வெல்லந்தன்னில்
பண்பாக வுண்டிடவே மண்டலத்தில்
காருநீ நரைதிரைக ளற்றுப்போகுங்
கனிவான பித்தமறுங் கண்டுபாரு
சேருநீ வாதமது யெண்பத்துநாலுஞ்
சிறப்பாக வோடிவிடுந் திறமைமெத்த
வாருநீ பித்தத்தா லெடுத்தரோகம்
வடிவாக வோடிவிடும் வண்மைதானே. 164

தானென்ற சிலேற்பனங்கள் தொண்ணூத்தாறுந்
தாஷ்டிகமா யோடிவிடுந் தாக்கிப்பாரு
வானென்ற மூலமுதல் கிராணியெல்லாம்
வடிவாக யோடிவிடும் வழக்கமப்பா
தேனென்ற க்ஷயத்திலெழும் வியாதியெல்லாந்
திறமாகுங் குணமாகுஞ் சிறப்புமெத்த
நானென்ற விந்திறுகும் பசுமைமெத்த
நாடாது யென்வசனம் பொய்ப்போகாதே. 165

போகுமே பொல்லாத கர்மமெல்லாம்
புகழ்பெரிய ஞானமது மிகவுண்டாகும்
வாகாகப் பெரியோரைத் தொண்டுபண்ணி
வடிவாக யெல்லாமுஞ் சித்தியாகும்
ஆகாத கர்மமெல்லா மோடிப்போகும்
ஆச்சரியந் தேகமது காந்தியாகும்
தாகமாய்ச் செந்தூர முன்னேசெய்து
தயவாக வுண்டுநீ தாக்கிப்பாரே. 166

பாருநீ சித்தரெல்லாங் கூட்டங்கூடி
பதிவாக வழலையென்றும் பூநீரென்றுந்
தாருநீ சவுக்காரச் சுன்னமென்றுந்
தடைபடவே முப்பூவை மறைத்தாரப்பா
சாருநீ மறைப்பையெல்லா முன்னூர்தன்னில்
சாக்ஷியாய்ச் செந்தூர வடிவுசொன்னேன்
தாருநீ யிந்நூலை யாராய்ந்துபார்த்து
கருத்துறவே பார்த்தாக்கால் சித்தியாமே. 167

சித்திபெற வேண்டுமென்றால் செந்தூரம் பண்ணு
செப்பரிய சூதத்தைப் பூர்க்கப்பண்ணு
முத்தியாய் அயத்தைநீ செந்தூரித்து
முடிவாக சேர்த்தாக்கால் செந்தூரமாகும்
பத்தியாய் நவலோக மெட்டுக்கோடும்
பகலிரவாய் ஞானவழி யெடுத்துக்கூறு
நத்தியே திரிந்துநீ சாஸ்திரத்தை
நலமாகப் பார்த்தாக்கால் சித்தனாமே. 168

சித்தரா யாவதற்கு முறமைகேளு
சித்ததிலே புத்தியால் முப்புபாரு
நத்தியே மோக்ஷத்துக் கிடமேபாரு
நலமாக யெல்லாமுஞ் சித்தியாகும்
வித்திலே விளைந்தாப்போல் ஞானமாகும்
வேதாந்தஞ் சித்தாந்தம் ரெண்டுமொன்று
சத்தியமாய்ச் சொல்லிவிட்டேன் செந்தூரத்தை
சரியாக வைத்துநீ சார்வுபாரே. 169

## உபரி பாண்டுச் சுண்ணம்

சார்வாக உபரிபாண்டுச் சுன்னங்கேளு
சமுசயங்க ளெண்ணாதே சார்ந்துபாரு
பார்வாகக் கடலினுரை சேர்தானொன்று
பதிவாகச் சுத்திமுறை பண்புகேளு
வேறாகச் சொல்லுகிறேன் சுண்ணாம்பாகும்
விதமாக வுவர்மண்ணைக் கரைத்துக்கொண்டு
சார்வாகத் தண்ணீரை விட்டுத்தானே
சமர்த்தாகக் கடல் நுரையைப் போட்டிடாயே. 170

போட்டுநீ குமுறயெரி வொட்டக்காச்சிப்
புகழாக யதையலம்பிக் கல்வத்திலிட்டு
கூட்டியே கல்லுப்பு யிடையேசேர்த்து
குணமாக வரைத்துமே பொடியதாக்கி
மூட்டியே யடுப்பிலிட்டுத் தீயைமூட்டி
முனையாக நாயுருவிக் கொழுந்தினாலே
நாட்டிநீ விருசாமம் வறுத்தாயானால்
நலமாகச் சுன்னமது வாகும்பாரே. 171

## உபரிபாண்டு சுன்ன செயநீர்

ஆகுமே கல்லுப்புச் சுன்னந்தானும்
அடைவாகக் கடுஞ்சுண்ண மாகும்பாரு
வாருமே கல்லுப்புக் கொடியசுன்னம்
வடிவாக யிச்சுன்னங் காலன்காலன்
பாகுபெறச் சுன்னத்துக் கிதுவேயாதி
பதிவாகச் சுன்னமிடை சாரஞ்சேர்த்து
சாகுமே யிருசாம மரைத்தபின்பு
சாக்ஷியா யடையிடித்து வைத்திடாயே. 172

வைத்துமே புடம்போட்டு யெடுத்துப்பாரு
வடிவாகப் பனியில்வைக்க செயநீராகுங்
கைத்துமே செயநீரை யிறுத்துக்கொண்டு
கனிவாக பூரமொடு பச்சைரெண்டும்
பைத்துநீ பலம்ரெண்டு நிறுத்துக்கொண்டு
பதிவாகச் செயநீரில் அரைத்துவில்லை
மைத்துமோ ரவியிலே காயப்போடு
மயமாக அஞ்சுசுன்னக் குகையிலிட்டே. 173

இட்டுநீ மூடியே புடத்தைப்போடு
இதமாக யாறவிட்டுப் புடத்தைப்போடு
கட்டுமே கடுஞ்சுன்னம் பூரச்சுன்னம்
கனிவாக யிச்சுன்னங் காலர்க்கொக்கும்
பட்டுநீ சாரத்தை யிடையேசேர்த்து
பதிவாக வைத்திடவே பனியில்தானும்
நட்டுமே பலபலெனச் செயநீராகும்
நலமாக யிந்நீரில் வீரம்போடே. 174.

## தூரிசிச் சுன்னம்

போட்டுமே பார்த்திடவே சிவந்துநீராம்
புகலவே யிந்நீரில் துரிசிதோய்த்து
நாட்டவே யெட்டுநாள் ரவியில்போடு
நலமாகக் கொக்கிறகு போலேயாகும்
நாட்டுமே பத்தெருவில் புடத்தைப்போடு
வடிவாகக் கடுஞ்சுன்னந் துரிசிசுன்னம்
ஆட்டுமே யிதநாட்டு காலனுக்கொக்கும்
அரியப்பா சுன்னத்தின் போக்கைக்கேளே. 175

### சாறு வர

போக்கான விராலியிலை யிடித்துமேதான்
புகலறிய சுன்னமது களஞ்சியிட்டு
வாக்காகப் பிசைந்திடவே சாருதானும்
வந்துமே கொப்பளிக்குந் தண்ணீர்போலே
தாக்கான தண்ணீரை யிறுத்துக்கொண்டு
தாஷ்டிகமாய் லிங்கமது சேர்தானொன்று
பாக்காக வோட்டிலிட்டு சுறுக்குதாக்கு
பதிவாகச் சாமமது சுருக்குப்போடே. 176

### லிங்க கட்டுவேதை

போடவே லிங்கமது யுருகிக்கட்டும்
பொன்போலே கரியில்நின்று வாடும்பாரு
ஆடவே தங்குந்தா னிடைகொடுத்து
அடவாக ரெண்டுமொன்றா யுருக்கிக்கொண்டு
நாடவே செம்புதனில் பத்துக்கொன்று
நாட்டினால் தங்கமது பத்துமாத்து
ஆடவே யிதைவைத்து ஜீவனத்தை
அடவாகச் செய்துநீ யடவுபாரே. 177

### கெவுரிகட்டு அயக்களங்கு

அடவாக கெவுரியது பலந்தானொன்று
அன்பாகக் கரண்டிதனி லிட்டுக்கொண்டு
திடமாக விராலியிலைச் சாற்றினாலே
திறமாக யிருசாமஞ் சுறுக்குப்போடு
நடமாக கெவுரிகட்டி மணியுமாகும்
நலமாக அரப்பொடிதான் பாதிசேர்த்து
விடமாகச் சேர்த்தரைத்து யுருக்கிப்போடு
வெகுசுறுக்கா யுருகியது மணியுமாமே. 178

ஆமேதான் அயம்நின்று வுருகும்போது
அடவாக நாலுக்கு ஒன்றுதங்கந்
தாமேதான் தங்கமிடை நாகம்போடு
சரியாக நாகமிடை லிங்கம்போடு
காமேதான் லிங்கமிடை வீரம்போடு
கனிவாக யுருகையிலே காரந்தாக்கு
வாமேதான் அயந்தானுங் களங்குமாகும்
வடிவான நவலோகம் நூற்றுக்கொன்று. 179

ஒன்றாக யிட்டுநீ யுருக்கிப்பாரு
ஓகோகோ மாத்துதான் பத்துமாகும்
நன்றாக ஆணிக்குப் பத்துமாகும்
நலமாக யிதைவைத்துச் சிலவுசெய்து
பண்டாக வாசியோகத்தைப் பாரு
பதைபதைத்து திரியாதே நூலைப்பாரு
நன்றாக வுப்பினுட சுன்னம்பாரு
கருவான வாதமாங் கண்டுபாரே 180

கண்டுபார் இரும்புதனைக் கண்டபோதே
கனிவாகத் தங்கமது யிறங்கும்பாரு
உண்டுபார் இக்களங்கைச் செந்தூரித்து
முறையாக வுண்டிடவே மோடிமெத்த
வண்டுபார் வடிவான கோபமுற்றால்
வாராது யென்னபட்டும் வாதியோரே
நண்டுபார் இக்களங்கைச் செந்தூரித்து
நலமாக வுண்டிடவே நாடிப்பாரே. 181

பாருநீ சரக்கைத்தான் கட்டியாடு
பதிவாக யெல்லாமும் பதங்கமாகும்
காருநீ கொட்டினால் தேளேயாகும்
கனிவாக கொட்டாவிட்டால் பிள்ளைப்பூச்சி
சேருநீ பெண்ணோடே சேரவேண்டாஞ்
சிறுவயதில் நாளையொடு யிளைப்புண்டாகும்
தாருநீ சகலமுந்தான் சித்தியில்லை
தாஷ்டிகமா யுப்பைமுந்தி கட்டியாடே. 182

## அயக்களங்கு செந்தூரம்

ஆட்டியே களங்குசெந்தூரஞ் செய்ய
அடவாகச் சொல்லுகிறே னறிந்துப்பாரு
கூட்டியே யிரும்பான களங்குவொன்று
குணமான கெந்தகந்தா னொன்றுகூட்டி
தேடியே பொற்றலையின் சாற்றாலாட்டி
திடமாக வில்லைதட்டிக் காயப்போடு
வாட்டியே யகலிலிட்டுச் சீலைசெய்து
வடிவாகப் பத்தெருவில் புடத்தைப்போடே 183

போட்டுநீ தீயாற்றி யெடுத்துப்பாரு
புகலறிய செந்தூர முருக்கம்பூப்போல்
நாட்டியே நவலோக மெட்டுமோடும்
நலமாகப் பலபிணிக ளோடிப்போகும்
வாட்டிநீ மயங்காதே நல்லவித்தை
வடிவாக செந்தூரம் அந்திசந்தி
காட்டுமே செந்தூரங் குன்றியுண்ணு
கனிவாக வயிரம்போல் மேனியாமே. 184

ஆமேதான் செந்தூரம் பாலிலுண்ணு
அறிவழிந்து போகாதே கைபாகத்தை
நாமேதான் பாகமாய்ப் பண்ணித்தேறு
நலமாகக் கேசரியை நாடியூது
வாமேதான் ஊதிடவே வாசியோகம்
வண்மையா யுண்டாகும் நடத்தைப்பாரு
தாமேதான் சொல்லிவிட்டேன் முன்னூர்தன்னில்
தாஷ்டிகமா யெல்லாமுஞ் சித்தியாமே. 185

## வெள்ளிவித்தை

சித்தியா மின்னமொரு வெள்ளிமார்க்கம்
செப்புகிறேன் இதுலெகுவு முன்னேபாரு
புத்தியாய்ப் பார்த்திடவே பாகமாகும்
போக்கோடே சொல்லுகிறேன் பூண்டுகேளு
நத்தியே வெள்ளைப் பாஷாணந்தானும்
நலமாகப் பலமொன்று நிறுத்துநீயும்
சத்தியமாய் நிலையறிந்து புத்தியாகச்
சரியாகக் கரண்டிதனில் வைத்திடாயே. 186

வைத்திடவே விராலியிலைச் சாற்றினாலே
வகையாகச் சுருக்குகொடு ஜாமம்நாலு
பைத்திடவே சுருக்கிட்டு ஆனபின்பு
பதிவாக வண்டோடு சுன்னம்பண்ணு
கைத்திடவே யதின்மேலே யரைத்துக்கட்டி
கனிவாகக் காயவைத்து ஆனபின்பு
புத்தியாய்க் காடையென்ற புடத்தைப்போடு
புகலரிய யெல்லாமுஞ் சித்தியாமே. 187

ஆமேதான் கட்டிநின்ற பாஷாணத்தை
அடவாக வெள்ளிதனி லிடையேயீய
நாமேதா னொறுங்கியது தூளாய்நிற்கும்
நலமாக அந்தயிடை சூதஞ்சேர்த்து
வாமேதான் முன்நீரா லரைத்துமைபோல்
வடிவாக வில்லைதட்டி காயப்போடு
சாமேதான் பத்தெருவில் புடத்தைப்போடு
சரியாக யெடுத்துப்பார் தவளமாமே. 188

தவளமாம் வெள்ளீயம் நூற்றுக்கொன்று
தாஷ்டிகமாய் கொடுத்துருக்க வெள்ளீயந்தான்
கவளமாய் வெள்ளியது பத்துமாத்து
கனிவாக யிதைவைத்து ஜீவனத்தை
பவளமாய் செய்துகொண்டு ஞானம்பாரு
பாக்கியங்கள் மிகவாகும் பருதியுள்ளே
தவளமாம் வாழ்வீர்கள் வெள்ளிவித்தைத்
தப்பாது நிச்சயமாந் தண்மைபாரே. 189

பாருநீ முன்னேதான் வெள்ளிவித்தை
பக்குவமாய்ச் செய்துநீ ஜீவனத்தை
காரேநீ பண்ணியிடு ராஜயோகம்
கனமாகச் செய்திடவே கருத்துநல்லாய்
வேறுநீ யடிதொடுத்து யேறவேணும்
வேதாந் நூல்களை விரைந்துபாரு
சாருநீ சலியாதே இன்னம்பாரு
சாக்ஷியா யெல்லாமுஞ் சித்தியாமே. 190

ஆமேதான் வாதமது எளிதிலாமோ
அடைவாக முன்செய்த தவத்திலாகும்
தாமேதான் சாஸ்திரத்தைப் பூண்டுபாரு
சரியாகச் செய்தாலே லாபமாகும்
வாமேதா னறிவழிந்து போகாதேதான்
வடிவாக யென்னூலும் சித்திமெத்த
பாமேதான் விருந்திட்டுப் பகைகள் செய்தால்
பதிவாக யெல்லாமும் பகர்ந்துபாரே. 191

பகர்ந்துபார் வெள்ளிவித்தை செய்துக்கொண்டு
பதிபாச மாகவே செய்துப்பாரு
வகர்ந்துபார் வித்தைதா னறியாமூடர்
வழக்கமாம் வேதமுக மறிந்துகொண்டு

தகர்ந்துபார் வேதமுகந் தெரியாவர்தி
தாஷ்டிகமா யெல்லாமுஞ் சேர்ந்துகண்டு
உகர்ந்து பாரெல்லாமும் பாகமெல்லாம்
அடவாகச் சித்தியா மறிந்துபாரே. 192

## தாளகக்குரு

அறிந்துபார் இன்னமொருசேதி கேளு
ஆடலா மண்டரண்ட மனைத்துமோட
பிரித்துபார் தாளகமும் பலமுவாங்கிப்
பேசாதே சுத்திமுறை பேசக்கேளு
நரிந்துமே தாளகத்தை சுன்னந்தன்னில்
நலமாக வைத்துமே சுத்திசெய்து
விரித்துநீ விராலியிலைச் சாற்றாலாட்டி
வடிவாக வில்லைசெய்து காயப்போட்டே. 193

போடவே காயவைத்து அகலில்மூடி
போக்கோடே சொல்லுகிறோம் புடத்தைப்போடு
ஆடவே வெள்ளையாய்க் குருவுமாகும்
அன்பாக செம்புதனில் நூற்றுக்கொன்று
நாடவே கொடுத்துப்பார் மாத்தெட்டேகால்
நலமாக யிருக்குமது வழியுமாகும்
கூட்வே வழியறிந்து கூடவேணும்
குணமாகும் மனமாகும் குருவைக்காரே. 194

காருமே குருக்காண வேணுமென்றால்
கருவாகச் சாஸ்திரத்தை நம்பிப்பாரு
பாருமே சாஸ்திரத்தைப் பார்த்தால்சித்தி
பாராட்டால் பலனில்லைப் பாருபாரு
காருமே நம்பினால் வாதமாகுங்
கருவரியா மாந்தருக்குங் காணுமோசொல்
சாருமே வழியறிந்து துறையறிந்துச்
சரியாகச் செய்தவனே சித்தன் தானே. 195

சித்தனா யாவதற்கு வழியைக்கேளு
சிவவிந்தைக் கட்டியதோர் முறமையாலே
முத்தனா யாவதற்கு வழியுஞ்சொன்னேன்
மோகமுற்ற வாதியென்றா லொன்றுமில்லை

சத்தியமாய் ஜெயநீரை வைத்துக்கொண்டு
சரியாக யெல்லாமுஞ் க்ஷணத்தில்கண்டு
யுத்தியாய் செய்துநீ வாதந்தன்னைப்
போக்கோடே சகலசித்தியாகும் பாரே. 196

ஆகுமே மனக்குரங்கு செய்யொட்டாது
ஆதியாய் நின்றுமே அலைவாரப்பா
வேகமர் யலையாதே நூலைப்பாரு
வேதாந்தத் தாய் தன்னை நித்தம்பூசி
சாடுமே பெண்டீரைச் சேர்ந்திடாதே
சரியான தேகமது மிஞ்சிப்போகும்
கோருமே யிதையறிந்து வல்லோரெல்லாம்
குறிப்பறிந்து யிருந்தார்கள் குணமாய்த்தானே. 197

## கெந்தி நீரு

குணமாகக் கெந்தகந்தான் பலமும் நாலு
கூத்தாடும் பச்சிலையில் துருசியிட்டு
பண்பாக யிலைச்சாரு பிழிந்துகொண்டு
பதிவாகக் கெந்தகத்தை ஜாமமாட்டி
உணவாக வில்லை தட்டி ரவியில்போடு
உற்றுமே காய்ந்தபின்பு அகலிலிட்டு
வணக்கமாய் காயவைத்துநீ காடைபுடம்போடு
வழியாகக் கெந்தகந்தா னீறுமாமே. 198

ஆமேதான் கெந்தகத்தி னீறுதன்னால்
ஆடலாம் நவலோக மெட்டுமோடும்
தாமேதான் மாற்றென்ன பதினாறாகும்
நாடியே விக்கிரகங் குண்டலங்கள்
வாமேதான் பண்ணியே போட்டுக்கொண்டு
வடிவாக வாசியோகத்தைப் பாரு
தாமேதான் சுழிமுனையில் நாட்டம்பாரு
தாஷ்டிகமாய்ச் சகலசித்து மாகுந்தானே. 199

தானென்ற தங்கம்விட்டால் வர்ணம்போச்சு
தாஷ்டிகமாய் கெந்திவிட்டால் செந்தூரம்போச்சு
கோனென்ற லிங்கம்விட்டால் வித்தைபோச்சு
கூட்டியே விந்தைவிட்டா லுயிரும்போச்சு

வானென்ற சாஸ்திரத்தை படியாமூடர்
வடிவாகச் சித்தியில்லை மாண்பர்மெத்த
கானென்ற கைபாகம் விட்டால்கேளு
கனமாக வாதவித்தை யில்லைப்பாரே. 200

பாரேநீ வுப்பைவிட்டால் வர்ணம்போச்சு
பதிவாக ஞானம்விட்டால் வாதம்போச்சு
காருமே அயச்செம்பை முன்னேவைத்து
கனிவாகும் வாதிகளே யெல்லாம்பாரு
சேருமே எனவிட்டாலெல்லாம் போச்சு
செம்மையா யிருந்தாலே அதீதமாச்சு
வாருமே யினத்தோடே செய்துபாரு
வடிவாக யெல்லாமும் வண்மையாமே. 201

ஆமேதான் பொருளறியார் வாதங்காணார்
அடவாக வெள்ளிவித்தை மார்க்கந்தானும்
நாமேதான் சொல்லிவைத்தே னிந்தவித்தை
நாதாக்கள் சொல்லாத சொல்லைத்தானும்
பாமேதா னிவ்வுலகில் ஞானயோகம்
பகலிரவாய்ப் பார்த்தவனே பரமயோகி
பூமேதான் வாதசித்தி யாகவென்றால்
புகலரிய யின்னூலைப் பேணிப்பாரே. 202

பேணியே சொல்லுகிறே நின்னங்கேளு
பேசாதே யொருவருக்கும் புறஞ்சொல்லாதே
ஆணியாம் வயித்தியத்தில் வளைந்துபாரு
அடவான சித்தியெல்லாம் மிதற்குள்ளாச்சு
காணியாம் வல்லோர்கள் செய்வாரப்பா
காரணமாய் விதியதனைக் கண்டுகொண்டு
தோணி மேலேறினவன் போலேயாகுந்
துடியான வாதத்தின் செய்கைதானே. 203

## நாகபற்பம்

செய்கையாம் நாகபற்பச் செயலைக்கேளு
செயமாக பற்பத்தைச் செய்துபாரு
பைகையாம் நாகமது பலந்தான் பத்து
பதிவாக யிலுப்பெண்ணை தனிலுருக்கி

வைகையாம் வடிவாகக் கரண்டியிட்டு
வளமாக வுருக்கியே சோமனாதி
பைகையா முகத்திலே தூவிப்பாரு
பதிவாக நீறியது சுன்னமாமே. 204

சுன்னமாம் நாகத்தில் வீரஞ்சேர்த்து
சுருக்காக யரைத்துநீ சொல்லக்கேளு
நன்மையாய் நால்ஜாமம் அரைத்துமைபோல்
நாடியே வில்லை தட்டிக் காயப்போடு
சொன்னபடி காய்ந்தவுட நின்னங்கேளு
சூக்ஷமாய்க் கவசமது கட்டிப்பின்பு
கன்னல்போல் கவசமது கட்டிப்பின்புக்
கனமாகப் புடமிடவே கண்டுபாரே. 205

கண்டுபார் நாகமது பூத்தப்பூவை
கனிவாகப் பலம்நாலு நிறுத்துக்கொண்டு
பண்டுப்பார் பூத்தரச மிடையேசேர்த்து
பதிவாகப் புகைநீரா லரைத்துச்சாமம்
விண்டுபா ரரைத்துமே வில்லை தட்டி
விதமாகக் காயவைத்துப் பின்புகேளு
முண்டுபார் காயவைத்துக் கிடத்திலிட்டு
வேகமாய் மூடியதைச் சீலைசெய்யே. 206

## நாகபற்பவேதை

சீலைசெய்து காயவைத்து அடுப்பிலேற்றி
.செயமாகத் தீயெரிப்பாய் எட்டுசாமம்
வாலிசெய்து யெரித்திடுவாய் செந்தூரமாகும்
வடிவான செந்தூரம் முருக்கம்பூப்போல்
காலைசெய்து யிருக்குமது பின்புநீயும்
கனிவாக செம்புதனில் நூற்றுக்கொன்று
சாலையா மாத்தென்ன பன்னிரண்டு
சரியாக யெல்லாமுஞ் சித்தியாமே. 207

## நாகபற்பம் தீரும்வியாதி

ஆமேதா நாகத்தின் சுன்னந் தன்னை
யடவாகச் சொல்லிவிட்டே னுலகு தன்னில்
வாமேதா னந்திசந்தி வெல்லந்தன்னில்
வடிவாக மண்டலந்தா னுண்டாயானால்

காமேதான் வாதமது எண்பத்துநாலுங்
கனிவாகப் பித்தமது நாற்பத்தஞ்சுஞ்
சாமேதா னோடிவிடுஞ் சிலேத்ம ரோகஞ்
சரியான மகோ தரமுஞ் சாடிப்போமே. 208

சாடிப்போம் ரத்தபித்த பெரும்பாடெல்லாஞ்
சாதித்து யோடுமடா சலிப்போயில்லை
வாடிப்போம் வாந்திமுதல் ரோகமெல்லாம்
வடிவாக வோடுமடா சித்தியாகுங்
கூடிப்போம் நீராம்பல் வெட்டைபோகுங்
குணமாகும் யெல்லாமுங் கூர்ந்துபாரு
சூடிப்போஞ் சகலகலைக் கியானமெல்லாஞ்
சுகமாகும் யெல்லாமுஞ் சூக்ஷம்பாரே. 209

பாருமே ஆம்பலொடு தந்தவாயு
பதிவாகப் போகுமடா பண்புள்ளோர்க்கு
காருமே நவலோகம் ஏமயமாகுங்
கனிவாக யேமத்தால் கெர்விக்காதே
நாருமே செயலறிந்தால் பவுத்திரம் நீங்கும்
நலமாகும் பிலமாகும் நாட்டம்பாரு
சாருமே யிவையாலே யெல்லாமாச்சு
சாக்ஷியாய்க் கண்டவனே சித்தனாமே. 210

ஆமேதான் கண்டவர்கள் சொல்லுவாரோ
அலையாதே நாய்போலே யிருந்துபாரு
காமேதா னலைந்தாலே யென்னலாபங்
கருத்துறவே பார்த்தாலே யுலகுதன்னில்
சாமேதா னிம்மருந்தைப் பண்ணிக்கொண்டு
சரியாகப் பலபிணிகள் தனக்குத் தானும்
நாமேதான் குடுத்திட்டுப் பணத்தைவாங்கி
நலமாக வாதவித்தைப் பார்த்திடாயே. 211

பார்த்திடவே சூதத்தை முன்னேபாரு
பதிவாக யெல்லாமுஞ் சிணத்தில்சித்தி
ஏர்த்திடவே சூதமது யெளிதோவல்ல
இதமான கெவனமது வெளிதிலாகும்
கார்த்திடவே நிழல்போலே காத்திருந்தால்
கனிவாகுஞ் சகலசித்தி கருதிப்பாரு
நார்த்திடவே நெல்முளைக்கும் வாதம்போக்கு
நலமாகச் சித்திக்கும் நாடிப்பாரே. 212

நாடியே வயித்தியத்தைப் பொய்யென்றாக்கால்
நலமில்லாப் புழுப்போலே யழிந்துபோவான்
கூடியே பெண்புருடர் கூடிவாழ்ந்தால்
குணமாகச் சொல்லுவரோ உலகநீதி
பாடியதோர் பயனறிந்தால் வாதியாவான்
பதிவாகச் சொல்லிவிட்டே னறிவுள்ளோர்க்கு
வாடியே திரியாதே நூலைப்பாரு
வடிவாகக் காரசாரத்தைப் பாரே. 213

பாருமே சகலகலைக் கியானமெல்லாம்
பண்பாகப் பார்த்துமே கருவையுன்னி
காருமே முன்னூற்றில் சொல்லிப்போட்டேன்
கவனமாய் காயசித்தி யோகசித்தி
வாருமே வாதசித்தி யாகுமப்பா
வடிவான நூலெல்லாஞ் சித்தியாகும்
தீரமா யறிந்தவனே சித்தன் சித்தன்
திடமாக யெல்லாமுங் காரமாமே. 214

**காந்தச் சத்து**

ஆமேதான் இன்னமொரு கருமானங்கேள்
அறிந்திடவே சொல்கிறேன் யன்பாய்க்கேளு
நாமேதான் காந்தமது பலமும்பத்து
நலமாக வுடைத்துமே கல்வத்திலிட்டு
சாமேதா னிட்டுமே துரிசிகேளு
சரியாக வெள்ளையாய் நீத்திப்போடு
பர்மேதான் கெந்தியது முக்கால் போடு
பருவமாய் வெண்காரஞ் சேருரெண்டே. 215

ரெண்டாக யிதுவெல்லாம் நெகிழவாட்டி
நேராக வில்லை தட்டி காயப்போடு
பண்டாக வுப்புடனே சுன்னங்கூட்டி
பதிவாக யிருசாம மரைத்துக்கொண்டு
நன்றாகக் கவசமிட்டுக் காயவைத்து
நலமாகப் பத்தெருவில் புடத்தைப்போடு
வண்டதுபோல் கருப்பாகும் பின்புகேளு
வடிவாகக் குகையிலிட்டு வுரிக்கிடாயே. 216

உருக்கியே கருவத்தி லிதனையிட்டு
வுணர்வாகப் பாதியாய்க் காரமிட்டு
நெருக்கியே பழச்சாறு விட்டரைத்து
நேமமாய் முன்போலே வில்லை தட்டி
அரிக்கியே யகலிலிட்டு புடத்தைப்போடு
அடவாகக் குகையிலிட்டு வுருக்கித்தீரு
பெருக்கவே வெள்ளிபோல் கண்விட்டாடும்
பிசகாமல் முன்போலே செய்திடாயே. 217

முன்போலே யரைத்துநீ புடத்தைப்போடு
முறையாக யிப்படிக்கி மூன்று புடம்போடு
தன்போலே யுருகியல்லோ சத்துமாகுந்
தாஷ்டிகமாய் சத்தெடுத்து கரியில்வைத்து
வன்போலே யுருக்கிடவே வெள்ளிபொன்போல்
வடிவாக ஆடிவிடுங் காந்தசத்து
அன்பாகக் காயசித்தி யுடனேயாகும்
ஆடலா மொருகோடி வித்தைதானே. 218

வித்தையை மெழுகுகட்டி கிண்ணிவார்த்து
விதமாகக் கிண்ணிக்குள் பாலைவிட்டு
நத்தியே யந்திசந்தி யுண்டாயானால்
நமனுமே வந்தணுகான் பாலைபோலாஞ்
சித்தியாம் நரைதிரைக ளற்றுப்போகுஞ்
சிறப்பான வாதமெல்லாங் காந்தத்தாட்டு
புத்தியினால் கண்டவனே வாதியாவான்
புகலரிய வாதியவன் கண்டுபாரே. 219

## காந்தக்களங்கு

பாருநீ காந்தசத்து வுருகும்போது
பரிவாக நாலுக்கு ஒன்று தங்கஞ்
சாருநீ தங்கமிடை நாகம்போடு
சலியாதே களங்காகுஞ் செம்புதன்னில்
வாருமே நூற்றுக்கு ஒன்றுபோடு
வடிவாகச் செம்புதான் பழுத்தநேர்மை
கோருமே பத்தரையும் காணுமாத்து
குணமாகக் குருவருளைக் கூர்ந்துபாரே. 220

## காந்தச்செந்தூரம்

பாருமே செந்தூரஞ் செய்யக்கேளு
பதிவாகச் சத்ததுவும் பலமும் நாலு
சாருமே கெந்தியொன்று சேர்த்துக்கொண்டு
சமத்தாகப் பொற்றலையின் சாற்றாலாட்டி
கூருமே வில்லைதட்டி காயப்போடு
குணமாகக் காய்ந்தபின்பு மொழியக்கேளு
தாருமே யோட்டிலிட்டு வோடுமூடி
தயவாகப் பத்தெருவில் புடத்தைப் போடே. 221

போடவே தீயாற்றி யெடுத்துப்பாரு
போக்கோடே செந்தூர முருக்கம்பூப்போல்
நாடவே யிருக்குமது செந்தூரந்தான்
நலமாகச் செந்தூரம் நூற்றுக்கொன்று
வாடவே குடுத்திடவே மாத்துக்கேளு
வடிவாக யிருபத்தி யஞ்சுமாத்துக்
காடவே ஆபரணம் விக்கிரத்தை
கனிவாகச் செய்திடவே சித்தியாமே. 222

ஆமேதான் செந்தூரங் குன்றியுண்ணு
அடவாக நோயெல்லாந் தவுடுபொடியாகுஞ்
சாமேதா நாள்பட்ட வியாதியெல்லாந்
தானாக வோடிவிடுஞ் சார்ந்துபாரு
வாமேதான் சீவனத்தை செய்துகொண்டு
மாகூஷிமை யாயிருந்தவனே யோகசித்தன்
தர்மேதான் சொல்லிவிட்டேன் காந்தப்போக்கு
தப்பாம லெல்லாமுந் தண்மைபாரே. 223

பாருமே செந்தூரத் தாலேயோகம்
பண்பாகச் சித்திக்கும் பரிந்துபாரு
காருமேசிவ சொத்தை வறுமைபோலுண்ணு
கனிவாகக் கும்முயெழு நூறுதன்னில்
தாறுமே சொல்லிவிட்டேன் செந்தூரத்தை
நன்மையுடன் நீவைத்து வுண்டுதேறு
கூறுமே தனையறிந்தால் குணமுயாகுங்
குடுத்துறுக்க மாத்ததுவும் பத்துமாமே. 224

## கெந்தகச்செம்பு விவரம்

ஆமேதான் கெந்தகத்தின் செம்புசொல்வேன்
ஆச்சரியம் வெகுலெகுவு முன்னேபாரு
நாமேதான் கெந்தியது பலமும்பத்து
நலமாகப் பசுவின் பால் படியுமொன்று
காமேதான் சட்டிதனி லிட்டுப்பாதி
கனிவாக மேலேதான் சீலைகட்டி
சாமேதான் கெந்தகத்தைப் பரப்பிமேலே
சரியாக மேல்சட்டி மூடிடாயே. 225

மூட்டியே அடிசட்டிப் புதைத்துபோடு
முனையாக மேலேதான் புடத்தைப்போடு
கூடியே தீயாறி யெடுத்துப்பாரு
குணமாக மணிமணியா யிறங்கிப்போகும்
வாடியே யிப்படியே அஞ்சிதிரம்போடு
வடிவாகப் பொன்நிறம் போல் நிற்கும்பாரு
சாடியே மணியெல்லா மெடுத்துக்கொண்டு
சரியாகச் சேர்க்குகிற தண்மைகேளே 226

தண்மையாங் கெந்திக்கி யிடையேநீலன்
தாஷ்டிகமாய்ச் சேர்த்துநீ காரம்பாதி
உண்மையாய் சேர்த்துநீ பழச்சார்விட்டு
வுறுதியா யிருசாமந் தானரைத்து
வண்மையா யுண்டை பண்ணிக் காயவைத்து
வடிவாக அதின் மேலே கவசங்கேளு
பண்மையா யுப்பிட்டுச் சுன்னமிட்டு
பரிவாக நன்றாய்நீ யரைத்துக் கொள்ளே. 227

அரைத்துநீ யுண்டைக்கிக் கவசங்கட்டி
அடவாக வதின்மேலே மண்ணுந்தானும்
பரைத்துநீ கவசமது கட்டிப்பின்பு
பண்பாகப் பத்தெருவில் புடத்தைப்போடு
நரைத்துமே யெடுத்துப்பார் கரியாய்நிற்கும்
நான் கண்டபடி சொன்னேன் நன்மைமெத்த
வரைத்துநீ மயங்காதே குகையிலிட்டு
மாளவே யுருக்கிடவே சத்துமாமே. 228

சத்தாகுந் தானெடுத்துப் பார்க்கும்போது
சரியாக வெள்ளிமணி போலேயாகும்
முத்தான குருவாகும் மேன்மைமெத்த
மூவுலகுக் கதிகமடா முறைகண்டோர்க்கு
சித்தான சித்தியெல்லா மிதனாலாச்சு
சிறப்பான வாதமென்ன வசியமென்ன
நத்தியே பார்த்தாலே யெல்லாஞ்சித்தி
நாமறிந்தபடி சொன்னோம் நயந்துபாரே. 229

## கெந்தகச்செம்பு காந்தசேர்மானம்

நயமாகச் சொல்லுகிறோ மின்னங்கேளு
நாமுறைத்த படிப்பாரு கைபாகத்தை
பயமாகக் கெந்தகத்தின் சத்துவொன்று
பதிவான காந்தசத்து பலமுமொன்று
தயவாக ரெண்டுமொன்றா யுருக்கித்தீரு
தடையறவே யுருகியே சத்துமாகுங்
கயப்பான சத்துத்தான் கடியசத்தாங்
கனிவாக யெல்லாமுஞ் சித்திபாரே. 230

பாருநீ ரெண்டுமொன்றா யுருக்கிக் கொண்டு
பதிவாகச் செம்பாகும் பருவங்கேளு
நாறுமே புகைநீரை விட்டுஆட்டி
நலமாக வில்லைதட்டி காயப்போடு
சாருமே காய்ந்தபின்பு அகலிலிட்டு
சார்வாகப் புடமொன்று போட்டுத்தீரு
கார்வுமே போட்டெடுத்து காரங்கூட்டிக்
கனிவாக யுருக்கிப்பார் செம்புதாமே. 231

## கெந்தகச்செம்பு மகிமை

செம்பாகுங் கெந்தகத்தின் செம்பாகுஞ்
செப்பரிய கெந்தகத்தின் செம்பினாலே
வம்பாக நடேசர்தான் வார்த்தசெம்பு
வடிவாக முன்னூறில் வழுத்திப்போட்டேன்
நம்பான பெரியோர்கள் சொல்லுமார்க்கம்
நானறிந்த படியாகுஞ் செம்பில்வேதை
பம்பரமா யாட்டிவைக்கும் வெள்ளிதனில்
பழுக்குமே நவலோகம் பழுத்தவாறே. 232

வாறுகேள் கெந்தகத்தின் செம்பினாலே
வடிவான நடராஜர் வந்துதித்தார்
தேறுகேள் நடேசரைத்தான் வார்க்கும்போது
திடமாக யில்லாத சேதிகேட்டு
கூறுகேள் சிற்பரைத்தான் கோபங்கொண்டு
கொடிதாகத் தானுரைத்தார் அரனாரப்போ
பாருகேள் மூலர் வந்துதானும்
பாகமாய் வார்த்திட்டார் பரிசுதானே. 233

தானென்ற கெந்தகத்தின் செம்புமார்க்கந்
தாஷ்டிகமாய் முன்னூற்றில் தன்மைசொன்னேன்
வானென்ற அதைமுடிக்கும் பாகஞ்சொன்னேன்
வடிவான காயசித்தி யோகஞ்சொன்னேன்
கானென்ற நூல்தனிலே யில்லையில்லை
கனிவாக யிந்தநூல் கைபாகத்தை
நானென்ற ஆணவத்தால் சொல்லிப்போட்டேன்
நாய்போலே யலையாதே நூலைப்பாரே. 234

## கெந்தகசெம்பு களங்கு

பாருமே கெந்தகத்தின் செம்புதன்னை
பதிவாகச் செந்தூரம் பண்ணக்கேளு
நாருகேள் கெந்தியுட செம்புநாலு
நலமாகத் தங்கமொன்று நாகமொன்று
கூறுகே ளிதையுருக்கக் களங்குமாகுங்
குணமாக நவலோகம் நூற்றுக்கொன்று
காருமே யிட்டிடவே மாத்துப்பத்து
கனிவாக உப்புக்குங் காவிக்குந்தானே. 235

தானென்ற உப்புக்குங் காவிக்கோடா
தனியாகப் புடத்துக்கு யிறங்கும்பாரு
வானென்ற விதைவிற்று செலவுசெய்து
வடிவாக வுண்டுடுத்தி வழியத்தேடு
தேனென்ற சிவகாமி சொல்லக்கேட்டு
சித்தாகப் புத்திதான் செழுமைகூர்ந்து
ஆணவத்தால் சொல்லிப் போட்டேன்
ஆதியென்ற கெந்தியுட ஆண்மைதானே. 236

ஆண்மையாங் கெந்தகத்தின் செம்பினாலே
ஆடலா மொருகோடி வித்தையப்பா
தாண்மையா முலகத்தோர் செய்யமாட்டார்
தறுகுறும்பன் சொல்லுவான் யெய்யாவாறு
வாண்மையாஞ் சிவநிறைந்த யோகிக்கப்பா
வழியோடே கைபாக மருவிக்காணும்
ஏண்மையாய்ப் போகாமல் கெந்திமார்க்கம்
இயல்பாகச் செய்துநீ யிருந்திடாயே. 237

இருந்திட்ட பஞ்சபூதத்தைச் சொன்னேன்
இயல்பான முப்பூவி நிணக்கஞ்சொன்னேன்
கறந்திட்டபால் போலே கருத்துசொன்னேன்
காரணமாய் நல்விபரங் கருதிச்சொன்னேன்
நிறந்திட்ட ஆத்தாளைக் கேட்டுக்கேட்டு
நலமாகச் சொல்லிவிட்டேன் நல்லபாகங்
கறந்திட்டமாகவே யுலகின் வாழ்க்கைக்
காரணமாய்ச் சொல்லுகிறேன் கருத்துதானே. 238

தானென்ற வுலகத்தில் வாதமேதான்
தாஷ்டிகமா யுட்கருவும்புறக் கருவுஞ்சொன்னேன்
ஊனென்ற வுட்கருவை விட்டாயானால்
உலகத்தில் மானிடராய்ப் பிறப்பார்மட்டை
வானென்ற அவசரத்தில் செய்தாலப்பா
வடிவாக ஒன்றுந்தான் சித்திக்காது
நானென்ற ஆணவத்தால் கெட்டோமென்று
நாய்போலே திரிந்தலைந்து மாளுவாரே. 239

மாளம விருக்கவல்லோ செந்தூரஞ்சொன்னேன்
மயமாகச் செந்தூர மார்க்கந்தன்னை
தேளான பசியடங்கும் வாறுசொன்னேன்
க்ஷிணத்திலே ஞானசித்தித் திறமாய்ச்சொன்னேன்
கேளான குடும்பத்தில் நில்லாதென்று
கொடூரமாய் வந்திட்ட குணமுஞ்சொன்னேன்
பாளான வுடலையிட்டு வுயிருபோன
பண்பானக் கதையாகும் பரிவதாமே. 240

ஆமேதா னின்னமொரு சேதிகேளு
ஆச்சரியங் கெந்தியுடச் செம்பைச்சொன்னேன்
பாமேதா னதுகொடுக்கும் பாகஞ்சொன்னேன்
பதிவாக களங்கு செந்தூரஞ்சொன்னேன்

தாமேதான் சுன்னமது மார்க்கஞ்சொன்னேன்
தயவாக வாதமது வலுக்கச் சொன்னேன்
காமேதான் சாவுக்கார குருவைத்தானுங்
கண்டரிந்தபடி சொல்வேன் கருதிப்பாரே. 241

## சவுக்காரம்

கருதியே சித்திரை வைகாசிக்குள்ளே
கனலெழுந்து பூத்துநிற்கும் மண்ணைவாரி
நருதியே நாலாறு படியெடுத்து
நலமாகப் பாணிபடி ரெட்டிப்பூத்தி
வருதியே கலக்கியதை பின்புகேளு
வடிவாகக் கடல்நுரைச் சுன்னந்தானுங்
கருதியே படிநாலு அளந்துவிட்டு
குணமாகக் கல்லுப்பு படிதான்ரெண்டே. 242

ரெண்டாகத் தானளந்து பாண்டத்திலிட்டு
நேர்மையாய் கலக்கியே தெளிவிறுத்து
கண்டாகப் புதுச்சட்டி தன்னிலிட்டு
காரணமா ஒட்டயெரி குழம்புபோலப்
பண்டாக அகப்பையினா லெடுத்துத்தானே
பக்குவமாய்ச் சாம்பலால் பாத்திகட்டி
வண்டாகப் பாத்திதனில் துணியைப்போட்டு
வடிவாக வதின்மேலே குழம்பைவாரே. 243

வார்த்துநீ மூடிவைக்கச் சாம்பல்தானும்
வடிவாக நீரிழுக்கும் வண்மையாக
காத்துநீ மயங்காதே யின்னங்கேளு
கருவான விளாங்காய் போலேயப்பா
சாத்துநீ உண்டைபண்ணிக் காயப்போடு
தாஷ்டிகமா யெண்ணைகக்கும் முறையைக்கேளு
ஏத்துமே வெடியுப்புச் செயநீர் தன்னை
யியம்புகிறேன் கைபாக வரிசைகேளே. 244

## வெடியுப்புச்செயனீர்

கேளுநீ வெடியுப்பு பலமுமெட்டு
கெடியாகச் சீனமொன்று சாரமொன்று
ஆளுநீ புளியெட்டுக் கூடக்கூட்டி
யடவாகக் கல்லுரலில் போட்டுத்தானே

வாளுமேநீ யிடித்துயதை நையத்தானே
வளமாகத் தீயெரிப்பாய் சுன்னமாச்சு
சாளுமே சுன்னத்தைப் பனியில்வைக்கச்
சரியாகப் பலபலெனச் செயநீராமே. 245

ஆமேதான் செயநீரி லுண்டை தன்னை
யடவாகத் தோய்த்திட்டு ரவியில்போடு
வாமேதான் சவுக்காரந் தானுமாச்சு
வடிவாக யெண்ணையெல்லாங் கக்கும்பாரு
நாமேதான் யெண்ணையது கக்கிப்போனால்
நலமான வழலையென்ற சுன்னமாச்சு
காமேதான் இச்சுன்னங் கொடியகாரங்
கனிவாக யச்சுன்னங் குகையில்தானே. 246

தானேதான் அஞ்சுசுன்னக் குகையிலிட்டு
தாஷ்டிகமாய் மூடியே கோழியாக
நானேதான் புடமிட்டு யெடுத்துப்பார்த்தால்
நலமாகச் சவுக்கார சுன்னமாச்சு
வானேதான் சவுக்கார சுன்னந்தானும்
வடிவான வழலையென்ற சுன்னமாச்சு
கானென்ற வாதமது ஏவல்கேழ்க்குங்
கனிவாகச் சிறுபிள்ளை யாடுந்தானே. 247

தானென்ற சவுக்காரஞ் சொன்னபாகந்
தாஷ்டிகமாய் சித்தரெல்லா மென்மேல்கோபம்
வானென்ற சாஸ்திரத்தைப் பிடுங்கித்தானே
வடிவாகக் குகைதனிலே வைத்தாரப்பா
ஊனென்ற அதையடுத்து வுலகத்தோர்க்கு
யுறுதியாய்க் கொடுத்துவிட்டே னின்னூல்தன்னில்
கானென்ற சவுக்காரத்தாலே மைந்தா
கனிவாக வங்கமது சுன்னமாமே. 248

## வெள்ளீயச் சுன்னம்

ஆமேதான் வெள்ளீயச் சுன்னத்தாலே
யடவாகத் துரிசியது சுன்னமாகும்
காமேதான் சவுக்காரம் பலமுமொன்று
கனிவாகக் கல்வத்தி லிட்டுதானுந்

தாமேதான் வாய்நீரா லரைத்துநன்றாய்
தளமாக வெள்ளீயந் தன்னில்கூட்டி
பாமேதா னஞ்சுகன்ன மேலேகாட்டி
பதிவாகக் காயவைத்துப் பின்புகேளே. 249

## துருசிச் சுன்னம்

பண்பாகப் பத்தெருவில் புடத்தைப்போடு
பதிவாகப் புடமாறி யெடுத்துப்பார்த்தால்
நண்பாக வெள்ளீயஞ் சுன்னமாகும்
நலமாகச் சுன்னத்தை யெடுத்துக்கல்வம்
வண்பாக யிட்டுநீ நாலத்தொன்று
வடிவாக வீரமது சேர்த்துக்கொண்டு
கண்பார்வை யாகவே யுமினீர்விட்டு
கனிவாக யரைத்துநீ துரிசிமேலே. 250

மேலாகக் கட்டியே காயப்போடு
மேன்மையாய் பத்தெருவில் புடத்தைப்போடு
காலாகப் புடமாறி யெடுத்துப்பார்த்தால்
கனிவாகத் துரிசியது சுன்னமாகும்
வாலாகத் துரிசியென்ற சுன்னத்தாலே
வடிவாகச் சரக்கெல்லாங் கட்டிப்போகும்
பாலாகத் துரிசியென்ற சுன்னந்தானும்
பதிவாகக் களஞ்செடுத்து சொல்லக்கேளே. 251

## ரசக்கட்டு

கேளுநீ விராலியிலைத் தன்னிலிட்டால்
கெடியாகச் சாருவருங் கண்டுகொள்ளு
வாளுமே யிட்டுநீ சூதந்தன்னை
வடிவாக யிட்டுநீ பின்புகேளு
தாளுநீ கரியோட்டில் குமுறக்காச்சி
தாஷ்டிகமாய்ப் பார்த்திடவே கட்டிப்போகும்
பாளுநீ யுருட்டியே வைத்துக்கொண்டு
பதிவாக யிறுகும்வகை பண்புகேளே. 252

## ரசக்குளிகை மகிமை

பண்பாகக் கருவென்ற வூமத்தங்காயில்
பதிவாகவுள் வைத்துப் புடத்தைபோடு
நண்பாகக் காடையென்ற புடத்தைப்போடு
நலமாக யிப்படியே நூறுபுடம்போடு
தண்பாகப் புடம் போட்டு யெடுத்துப்பார்த்தால்
தவளம் போல் நிறமதுதான் வெள்ளையாகும்
வன்பாகக் குளிகைதனை வாயில்போட்டால்
வடிவான கீதமது மருவுந்தானே. 253

தானென்ற குளிகைதனை வைத்துக்கொண்டு
தாஷ்டிகமாய்க் கெவுனவெளி சுறுக்கிலோடும்
வானென்ற சொரூபமாங் குளிகையாகும்
வடிவாக ஆகாசந் தனிலெழும்பும்
கானென்ற விந்துதான் கீழோடாது
கனிவாகப் பசுமாடு கறக்கும்போது
மானென்ற முதுகுதனில் வைத்திட்டாக்கால்
மயமாகப் பாலுதான் கறக்கவாறே. 254

வாறுகேள் கறக்காது மாடுதானும்
வடிவாகத் தேகமது கல்தூர்ணாகுங்
கூறுகே ளிப்படிக்கிக் குளிகைபண்ணி
குணமாக அஞ்சுமணிக் குளிகையாகுந்
தானுமே யிதைச் செய்து தாவடமாய்க்கொத்து
தாஷ்டிகமாய்க் கழுத்திலே போட்டுக்கொள்ளு
பாறுமே யஞ்செழுத்து மெட்டெழுத்தும்
பதிவாக வோதிடவே பின்புகேளே. 255

கேளுநீ அஷ்டகர்ம மாடலாகுங்
கெடியாக விந்துதான் மிகவுண்டாகுந்
தாளுநீ ஆகாசகெவுன மோடும்
தாஷ்டிகமாய்க் கெவுனசித்தி க்ஷணத்திலாகும்
வாளுநீ மோடிதம் பணங்கள் செய்யும்
வடிவான ஆக்ருஷ்ண மிகவுண்டாகும்
காளுநீ மகாவேக முண்டாமப்பா
கனிவாக சித்திதருங் கண்டுபாரே. 256

## வாலைரச பதங்கம்

கண்டுபா ரின்னமொரு சேதிகேளு
கனிவான வைத்தியர்க்கு ஆதிபீடம்
பண்டுபார் வாலைரச மெடுத்துக்கொண்டு
பதிவாக யிதைப் பதங்குஞ்சொல்வேனப்பா
குண்டுபார் வாலைரசம் பலமுமொன்று
குணாகச் சிங்கியது பலமுமொன்று
துண்டுமே ரெண்டுமொன்றாய்ப் புகைநீர்விட்டு
துடியாக யிருசாம மரைத்திடாயே. 257

அரைத்துநீ வில்லைதட்டி காயப்போடு
அடவாகச்சிறு சட்டி ரெண்டெடுத்து
வரைத்துநீ வாயதனை தேச்சுப்போடு
வடிவாக யுள்ளிட்டு மேலேமூடி
அரைத்துமே சீலைமண் வலுக்கச்செய்து
யடவாக வுலையில்வைத்து வூதுமெள்ள
பரைத்துமே நன்றாக வூதிப்பின்பு
பதிவாகச் சாமமது வொன்றுதானே. 258

தானேதா னூற்றுக்கு மெல்லத்தானுந்
தடையறவே கவசமதைப் பிரித்துப்பாரு
வானேதான் வாலைரச முயரமேறி
வடிவாக யிருத்துவிடும் வண்மையாக
கானேதா னுயரத்தா னேறிநின்ற
கனிவான பதங்கமதை வழித்துக்கொண்டு
மனேநீ வழித்தெடுத்த பதங்க்ம்வெள்ளை
மயமான பற்பத்தை யெடுத்துக்கொள்ளே. 259

எடுத்துமே சீனத்தை யூதிநன்றாய்
இன்பமாய்ப் பதங்கமிடை சேர்த்துக்கொண்டு
அடுத்துமே வெண்கருவா லரைத்துக்கொண்டு
அடவாக வில்லை தட்டிக் காயவைத்து
நடுத்துமே கிடத்திலிட்டு மேலுமூடி
நலமாகச் சீலை மண் வலுக்கச் செய்து
வடுத்துமே வாலையென்ற யடுப்பிலிட்டு
வழியாகச் சாமமது யெரித்திடாயே. 260

## ரசக்குளிகை மகிமை

பண்பாகக் கருவென்ற வூமத்தங்காயில்
பதிவாகவுள் வைத்துப் புடத்தைபோடு
நண்பாகக் காடையென்ற புடத்தைப்போடு
நலமாக யிப்படியே நூறுபுடம்போடு
தண்பாகப் புடம் போட்டு யெடுத்துப்பார்த்தால்
தவளம் போல் நிறமதுதான் வெள்ளையாகும்
வன்பாகக் குளிகைதனை வாயில்போட்டால்
வடிவான கீதமது மருவுந்தானே. 253

தானென்ற குளிகைதனை வைத்துக்கொண்டு
தாஷ்டிகமாய்க் கெவுனவெளி சுறுக்கிலோடும்
வானென்ற சொரூபமாங் குளிகையாகும்
வடிவாக ஆகாசந் தனிலெழும்பும்
கானென்ற விந்துதான் கீழோடாது
கனிவாகப் பசுமாடு கறக்கும்போது
மானென்ற முதுகுதனில் வைத்திட்டாக்கால்
மயமாகப் பாலுதான் கறக்கவாறே. 254

வாறுகேள் கறக்காது மாடுதானும்
வடிவாகத் தேகமது கல்தூணாகுங்
கூறுகே ளிப்படிக்கிக் குளிகைபண்ணி
குணமாக அஞ்சுமணிக் குளிகையாகுந்
தானுமே யிதைச் செய்து தாவடமாய்க்கொத்து
தாஷ்டிகமாய்க் கழுத்திலே போட்டுக்கொள்ளு
பாறுமே யஞ்செழுத்து மெட்டெழுத்தும்
பதிவாக வோதிடவே பின்புகேளே. 255

கேளுநீ அஷ்டகர்ம மாடலாகுங்
கெடியாக விந்துதான் மிகவுண்டாகுந்
தாளுநீ ஆகாசகெவுன மோடும்
தாஷ்டிகமாய்க் கெவுனசித்தி க்ஷணத்திலாகும்
வாளுநீ மோடிதம் பணங்கள் செய்யும்
வடிவான ஆக்ருஷ்ண மிகவுண்டாகும்
காளுநீ மகாவேக முண்டாமப்பா
கனிவாக சித்திதருங் கண்டுபாரே. 256

## வாலைரச பதங்கம்

கண்டுபா ரின்னமொரு சேதிகேளு
கனிவான வைத்தியர்க்கு ஆதிபீடம்
பண்டுபார் வாலைரச மெடுத்துக்கொண்டு
பதிவாக யிதைப் பதங்கஞ்சொல்வேனப்பா
குண்டுபார் வாலைரசம் பலமுமொன்று
குணாகச் சிங்கியது பலமுமொன்று
துண்டுமே ரெண்டுமொன்றாய்ப் புகைநீர்விட்டு
துடியாக யிருசாம மரைத்திடாயே. 257

அரைத்துநீ வில்லைதட்டி காயப்போடு
அடவாகச்சிறு சட்டி ரெண்டெடுத்து
வரைத்துநீ வாயதனை தேச்சுப்போடு
வடிவாக யுள்ளிட்டு மேலேமூடி
அரைத்துமே சீலைமண் வலுக்கச்செய்து
யடவாக வுலையில்வைத்து வூதுமெள்ள
பரைத்துமே நன்றாக வூதிப்பின்பு
பதிவாகச் சாமமது வொன்றுதானே. 258

தானேதா னூற்றுக்கு மெல்லத்தானுந்
தடையறவே கவசமதைப் பிரித்துப்பாரு
வானேதான் வாலைரச முயரமேறி
வடிவாக யிருத்துவிடும் வண்மையாக
கானேதா னுயரத்தா னேறிநின்ற
கனிவான பதங்கமதை வழித்துக்கொண்டு
மனேநீ வழித்தெடுத்த பதங்க்ம்வெள்ளை
மயமான பற்பத்தை யெடுத்துக்கொள்ளே. 259

எடுத்துமே சீனத்தை யூதிநன்றாய்
இன்பமாய்ப் பதங்கமிடை சேர்த்துக்கொண்டு
அடுத்துமே வெண்கருவா லரைத்துக்கொண்டு
அடவாக வில்லை தட்டிக் காயவைத்து
நடுத்துமே கிடத்திலிட்டு மேலுமூடி
நலமாகச் சீலை மண் வலுக்கச் செய்து
வடுத்துமே வாலையென்ற யடுப்பிலிட்டு
வழியாகச் சாமமது யெரித்திடாயே. 260

எரித்திடவே யடுப்பாற்றிப் பிரித்துப்பாரு
இதமாக யடியிலே நிற்குமப்பா
வரித்திடவே நெருப்புக்கு யேகிடாது
வடிவாக நெருப்புதனில் போட்டுப்பாரு
கறுத்துமே யோடாது ஒளித்திடாது
கனிவாகச் செம்புதனில் பத்துக்கொன்று
பரித்துநீ செம்புதனில் குடுத்துப்பாரு
பதிவாக மாத்தென்ன எட்டுமாமே. 261

### வாலைரச பதங்கந்தீரும் வியாதி

ஆமேதா னந்திசந்தி பணங்கால்வீதம்
அடவாக வுண்டுவரப் பிணிகள் போகும்
நாமேதான் வாதமெண்பத்து நாலும்
நலமான வண்டத்தின் வாதமோடு
தாமேதான் விரைவாதம் சூலைபோகுந்
தண்மையாய் முடக்கென்ற சூலைபோகுந்
தாமேதான் பித்தமுதல் சிலேத்மம்போகுந்
தாஷ்டிகமாய் லிங்கத்தின் புத்துபோமே. 262

புத்துடனே யரையாப்பு கண்டமாலை
புகலறிய பிணிகளெல்லா மாண்டுபோகும்
நித்துடனே மேனியது சொர்ணமாகும்
நிலத்துடனே காயமது அழிந்திடாது
வித்துடனே வித்தாகும் விருப்பமெத்த
விதமாக மகோதரங்கள் முப்பத்திரண்டும்
நித்தியமாய்ப் போகுமது குஷ்டரோகம்
நிலையாகப் போகுமது கருங்குஷ்டந்தானே. 263

தானேதான் க்ஷய ரோகமேகம்போகுந்
தாஷ்டிகமாய் விந்திருகும் வடிவாம்மேனி
வானென்ற.பச்சையென்ற நரம்புதானும்
வடிவாக யிறுகுமது வண்டுபோலாம்
கானென்ற ஜெலரோகம் லவணமேகங்
கருத்துடனே போகமது கண்டுபாரு
நானென்ற யாணவமு மிகவுண்டாகும்
நலமாக சகலகலை சித்திபாரே. 264

பாருநீ பத்தியத்தை சொல்லக்கேளு
பரிவான வுப்போடு நல்லெண்ணையாகா
சாருநீ யுண்ணுவது சொல்லக்கேளு
சாக்ஷியாய்ப் பாலோடு வன்னமாகுந்
தாருநீ வன்னமது சம்பாநெல்லு
தாஷ்டிகமா யரிசியல்லால் வேறுமாகா
கூறுநீ யன்னத்தைச் சமைத்துவுண்ணு
கூட்டோடே நோயெல்லா மோடிப்போமே. 265

போக்கோடே ரசபற்பந் தன்னைக்கண்டால்
போகுமே வண்டரண்ட முரிகிப்போகும்
வாகுமே சகலநோய்த் தீர்ந்துபோகும்
வடிவான யாட்டெல்லாங் சூதத்தாட்டு
தாகுபெறக் கட்டினால் பொன்னுமுண்டு
தாஷ்டிகமா யெல்லாமுஞ் சித்திமெத்த
ஏகுமே யெனையாண்ட சித்தர்தாமும்
இதமாகச் சொல்லினா ரின்பமாமே. 266

இன்பமாம் வெடியுப்பு செயநீர்வைத்து
இதமாக வுண்டிடவே காயஞ்சித்தி
அன்பாக யெல்லாமுஞ் சித்தியாகும்
அடவான யோகசித்தி'யாகுமப்பா
நண்பாகக் கற்றுணர்ந்த பெரியோருக்கு
நலமாக யெல்லாமுஞ் சித்தியாகும்
அன்பாக யெல்லாமுஞ் சித்திமெத்த
யளவாக யோகிக்கி யன்புமாமே. 267

## கல்லுப்புக் கட்டு

ஆமேதா னின்னமொன்று சொல்லக்கேளு
யடவாக வுலகத்தில் வாதிக்கித்தான்
வாமேதான் கல்லுப்புக் கட்டுக்கேளு
வடிவாகச் சொல்லுகிறேன் வழக்கமாக
நாமேதான் கல்லுப்பைக் கட்டிக்கொள்ளு
நாட்டியே யெல்லாமுஞ் சித்தியாகும்
பாமேதான் சித்தியெல்லா மேதாலாச்சு
பதிவாகச் சித்திதரும் பண்புமாமே. 268

ஆமேதான் கல்லுப்புக் கரியிலாட
யடவாகச் சொல்லுகிறே னருமையாக
நாமேதான் கடல்நுரையும் பலமுமொன்று
நலமாகக் கல்லுப்புப் பலமுமெட்டு
வாமேதான் ரெண்டுமொன்றா யுருக்கிக்கொண்டு
வடிவாக வதையுடைத்து கலசத்திலிட்டு
தாமேதான் சுத்தகெங்கை தன்னைவிட்டு
தாஷ்டிகமா யொன்றுக்குப் படியைக்கேளே. 269

படிதானே யெட்டுவிட்டு பாகங்கேளு
பதிவாக யடிகனத்த சட்டியிட்டு
நொடியாகக் கொதிக்கவைத்து யிறக்கயுப்பாம்
நொடிக்குள்ளே காச்சிநீயும் பாயக்காச்சி
குடியாகச் சீலைதனி லகப்பையாலே
குணமாக விட்டுநீ யுண்டையாக
பிடியாகக் கட்டியே யுண்டையானால்
பிலக்கவே பண்ணியே காயப்போடே. 270

## கல்லுப்பு வேதை

போடவே யதின்மேலே கவசங்கேளு
பொருமியே கடல் நுரைதான் ஒட்டிரெட்டி
வாடவே மேல்கவசங் கூட்டிக்கொள்ளு
வடிவாகக் காயவைத்து வழக்கமாக
நாடவே யிதைவைத்து சீவனத்தை
நலமாகச் செய்துநீ பின்புகேளு
கூடவே செம்புதா னுறுக்கித்தானுங்
குணமாகக் குடுத்துப்பார் வொன்றுதானே. 271

குடுத்துமே பார்த்திடவே செம்புதானுங்
கொடிதான மாத்துத்தா னெட்டுமாகும்
விடுத்துமே உப்புக்கே காவிக்கேகா
விதமான ஞானசித்தி யோகமெய்தும்
தடுத்துமே யெல்லாமுஞ் சித்தியாகுந்
தனியான வடிவுள்ள யோகியாகுங்
கடுத்துமே யாதார வழியிற்சென்று
கனிவாக யெல்லாமுங் கனித்துபாரே. 272

பாருமே பதினெட்டு சித்தர்தாமும்
பாகமாய் கைபாகம் சொல்லிப்போட்டார்
பாருமே யிந்நூலில் சொல்லிவைத்தேன்
பரிவாக யிதைவைத்துக் கண்டுதேரு
பாருமே யாத்தாளைப் பூசைப்பண்ணி
பண்பாக வாதமதைச் செய்துதானும்
பாருமே முன்னேதான் சிலவுசெய்து
பதிவாக யெல்லாமுஞ் சித்தியாமே. 273

## கிறாணிபேதிக் கட்ட

சித்தியா மின்னமொன்று சொல்லக்கேளு
சிறப்பாகக் கட்டுவகை தன்னைக்கேளு
புத்தியாங் கிறாணிவகை யெல்லாமுந்தான்
புகலாகப் போகவே சொல்லுவேன்பார்
நத்தியாங் கட்டுவகை சொல்லக்கேளு
நலமாக யபினியோடு கிறாம்புதானும்
வித்திலே விளைந்தெழுந்த பூரணத்தை
விதமாக யெல்லாமுஞ் சித்தியாமே. 274

ஆமேதான் பேதிதான் கட்டும்வாய்மை
யடவாக யந்திசந்தி கொள்வீராகில்
வாமேதான் கிறாணியெல்லா மோடிப்போகும்
வடிவாக யெல்லாமுஞ் சித்தியாகும்
தாமேதான் சித்திதர வேணுமென்றால்
தாஷ்டிகமா யெல்லாமுஞ் சித்தியாகும்
பாமேதான் பாகமது யெல்லாமாச்சு
பதிவாகச் சித்திதரும் பண்புமாமே. 275

பண்புள்ள யெனையழைத்து பாகஞ்சொன்னார்
பதிவாகக் கைமுறைதான் பார்த்துச்சொன்னேன்
நண்புள்ளோர் மனதுவைத்துப் பார்க்கக்கேளு
நலமாகக் கைபாக மார்க்கந்தானும்
உண்பாக யெனையாண்ட அகத்தியமூர்த்தி
உறுதியாய் போகமது வுண்மைபாரு
தண்மையா முனக்கேத்த புத்திசொன்னேன்
தாஷ்டிகமா யெல்லாமும் பண்புமாமே. 276

பண்புள்ள யுலகத்தில் மாண்பர்க்காகப்
பதிவாக வாதமுதல் வைத்தியஞ் சொன்னேன்
நண்பாகப் பண்டிதத்தைக் கண்டுபோத்தி
நலமாக யெல்லாமுஞ் சித்தியாகும்
வண்பாக வாதமெல்லா முப்பாலாச்சு
வளமாக உப்பைமுந்தி கட்டிப்பாரு
தண்பாக யெல்லாமுஞ் சித்தியாகுந்
தாஷ்டிகமாய் நல்லபுத்தி நலமதாமே. 277

நலமாக வாதமொடு வைத்தியந்தானும்
நலமறியான் பண்டிதத்தின் பெருமைகாணார்
பிலமாக யெல்லாமுஞ் சித்திமெத்த
பிசகாமல் வாதவித்தை பேணிப்பாரு
கனமான வாதிமக னறிவானப்பா
கருத்தழிந்து போகாதே யுலகுதன்னில்
வலமாக யெல்லாமும் வந்துதோற்றும்
வடிவாக வயித்தியந்தான் சித்தியாமே. 278

சித்திதரவே தென்றால் சொல்லக்கேளு
செகத்திலே வாழ்வதற்கு வாதமார்க்கம்
புத்தியாய் வாதமொடு வசியமாகும்
புகலாதே யெல்லாமு மனேகவித்தை
நத்தியே யவர்களுடன் வருத்துமாகும்
நலமாக யெல்லாமும் சித்தியாகுஞ்
சத்தியமாய்ப் பிழைக்கவே யுலகோர்காகச்
சாதகமாய்ச் சொல்லிவிட்டே னுலகில்தானே. 279

தானென்ற யுலகத்தோர் சுட்டுக்கெட்டு
தாஷ்டிகமாயஞ் செழுத்து மெட்டெழுத்தும்
வானென்ற வுலகத்தோர் சிரிப்பாரப்பா
வடிவான காயசித்தி யோகசித்தியாகும்
நானென்ற வாணுவத்தால் கெட்டோமென்று
நலமாகத் திரிந்தலைந்து மாளுவார்கள்
கானென்ற குருக்கிடையுங் கருங்கிடையும்வேணும்
கனிவாகப் பார்த்தறிந்தால் சித்தியாமே. 280

ஆமேதான் பார்த்தரிய வேணுமென்றால்
அடவாக யெல்லாமுஞ் சித்தியாகும்
காமேதான் சித்திதா னறிந்தபேர்கள்
கனிவாக வறிவார்கள் யெல்லாந்தானும்
நாமேதான் சித்திபெற்றா லெல்லமாச்சு
நலமாக சித்திதரும் நட்புமாகும்
வாமேதான் சித்திக்க வேணுமென்றால்
வடிவான யோகமது மருவிப்பாரே. 281

மருவியே யின்னமொன்று வண்மைகேளு
வடிவான பெண்ணுடனே ஆணுஞ்சேர்ந்து
உருவியே வுருவதுவுந் தரித்தாப்போலே
உண்மையா யிதைவைத்து முன்னேசெய்து
நருவியே வுடல்குறிப்புக் கண்டுதேறு
நலமாகப் பொன்னாகுங் கண்டுதேறு
யுருதியாய்ச் செய்தாலே யெல்லாஞ்சித்தி
யொருவருடன் பேசாதே பண்மைபாரே. 282

## தாளகபற்பம்

பாருநீ தாளகமும் பலமுமொன்று
பதிவாகக் கட்டியா யெடுத்துக்கொண்டு
தாருநீ வளையலுப்புப் பலமும்நாலு
தாஷ்டிகமாய்ப் பாணிவிட்டு அரைத்துநேராய்
ஊருமே தாளகத்தின் மேலேகட்டி
உற்றுமே கரிதனிலே வாட்டுவாட்டு
சாருமே நன்றாகக் குமுறவாட்டு
சரியாக அனலெழும்ப வாட்டிடாயே. 283

வாட்டியே தண்ணீரில் தூக்கிப்போடு
வடிவாகவுப் பெல்லாங் கரைத்து போகுங்
கூட்டியே யெடுத்துப்பார் சிவந்து நிற்குங்
குணமாகச் சிவந்திருந்த செந்தூரத்தை
நீட்டியே யதையெடுத்து வைத்துக்கொண்டு
நிலையாக கிளிஞ்சிநீறு வுவர்மண் நேராய்
மூட்டியே கலந்துநீ சட்டியிட்டு
மோகமா மாகுமினி சொல்லக்கேளே. 284

சொல்லவே தாளகச் செந்தூரங்கட்டி
செப்பவே வைத்துநீ மேலேதானும்
நல்லவே மூடியே யழுத்திவைத்து
நலமாக மேலேநீ சட்டிமூடி
கல்லவே சீலைமண் வலுக்கச்செய்து
கனிவாக யடுப்புதனி லேத்திநன்றாய்
மல்லவே யிருசாம மெரித்துப்பாரு
மயமாகத் தள்ளியே யெடுத்திடாயே. 285

எடுத்திட்டு வெய்யல்தனி லெட்டுநாள்தான்
இதமாக வைத்திட்டுப் பார்க்கும்போது
அடுத்திட்டு வெள்ளையாய்ப் பூத்துறந்து
யடவாகப் பற்பமது வாகும்பாரு
வடுத்துமே பற்பத்தை யெடுத்துக்கொண்டு
வடிவாக வீரமதுக் கிடையேசேர்த்து
நடுத்துமே யிருசாமங் கல்வத்தாட்டி
நலமாக வில்லைபண்ணிக் காயவையே. 286

காயவைத்துப் பின்புதான் சொல்லக்கேளு
கனிவாகக் கிடத்திலிட்டு மேலேமூடி
மாயவே சீலைசெய்து யெரித்தாயானால்
மயமாக வில்லைதா னடியில்நின்று
நயவாக யேறாது யிருக்குமப்போ
நலமாக யிருந்திடவே நன்றாய்க்கேளு
சாயவே யந்திசந்தி தேனில் கொள்ளச்
சரியாகப் பத்தியத்தைத் தாக்கிடாயே. 287

## தாளகபற்பந் தீரும் வியாதி

தாக்கிடவே யெலிகடிகள் போகும்பாரு
தாஷ்டிகமாய் வாய்வுகளும் போகும்பாரு
வாக்கிடவே ருத்திரமாம் வாய்வும் போகும்
வடிவான முசல்வலிப்பு மேகவாய்வு
பாக்கிடவே காசமுதல் பறந்துபோகும்
பதிவாக யெல்லாமுஞ் சித்தியாகும்.
ஆக்கிடவே சோறு பாலுண்ணலாகும்
அடவாக யெல்லாமுஞ் சித்திகாணே. 288

காணவே மகோதரங்க ளெல்லாம்போகுங்
கனிவாகச் சித்திதருங் கருத்துள்ளோர்க்கு
ஊணவே வொருவருடன் பேசவேண்டாம்
உத்துமே மகோதரமு மோடிப்போகும்
நாணவே நாலான கண்டமாலை
நாட்டிலே நில்லாது நயந்துபாரு
வாணவே வல்லமையாந் தேகந்தானும்
வடிவான பொருளாகும் வண்மைபா 289

பாருமே சரக்கைமுந்தி கட்டிப்பாரு
பதிவாக யுலகுதனில் பண்டிதங்கள்
காருமே முன்னேதான் பார்த்துத்தேறு
கனிவாக ரசபற்பம் லிங்கபற்பஞ்
சாருமே கைபாத மாகவைத்து
சரியாக வுண்டிடவே நோய்கள் போகும்
வாருமே கைபாக மாகச்செய்து
வடிவாகத் தின்றிடவே வண்மையாமே. 290

ஆமேதா னுலகத்தில் பண்டிதங்கள்
அடவான் கைபாக மார்க்கத்தாலே
வாமேதா னறிந்திடவே சித்திமெத்த
வடிவாக வறியாட்டால் சங்கமாண்டி
நாமேதா னறிந்தவனே சித்தன்சித்தன்
நலமாக வறியாட்டால் யோகியல்ல
சாமேதா னறிந்தவனே புத்திமானாஞ்
சரியாக யின்னதென்று சாத்துறேனே. 291

சாத்துறேன் லோகத்து வாதிதானுஞ்
சரியாக வாதமொடு வசியந்தானும்
பாத்துமே பொய்பாடு மென்பார்லோகர்
பதிவாக வறிந்தவனே சித்தனாவான்
காத்துமே யிருந்தாலே யோகியோகி
கருணை பெறயறிந்தவனே கனக்வான்பார்
நாத்துநீ யறிந்துநட்ட நாட்டமபோல
நாடியே யெல்லாமும் நாடிப்பாரே. 292

### நாகரச செயனீர்

நாடியே யின்னமொரு கருவைக்கேளு
நாதாக்க ளாட்டெல்லாஞ் சொல்லக்கேளு
மூடவே சொல்லுகிறே னுற்றுக்கேளு
மூவுலகு சித்தரெல்லா மேன்மையாக
வாடவே நாகமது செயனீராக
வடிவாக நாகமது பலமுமொன்று
கூடவே சூதமது பலமுமொன்று
குணமாக நாகமது யுருக்கிடாயே. 293

உருக்கியே கரண்டிதனில் சூதத்துள்ளே
யுணர்வாக விட்டலல்லோ யெண்ணைக்குத்தி
நெருக்கியே யாறவிட்டு யெடுத்துப்பார்த்தால்
நலமாகப் புட்டாகுங் கல்வத்திட்டு
பெருக்கியே வீரமதை யிடையேயிட்டு
பேதமா வரைத்துநீ சாமம்நாலு
வருக்கியேநீ ராகுஞ் செயநீராகும்
வடிவாகு மின்னீரில் மார்க்கங்கேளே. 294

### துரிசுச்செந்தூரம்

கேளுநீ யிந்நீரிற் பூரமிட்டுக்
கெடியான பீங்கானி லிறுத்துக்கொண்டு
வாளுநீ துருசுதனைத் தோய்த்துத்தோய்த்து
வாடிவாகப் போடவே யெட்டுநாள்தான்
மாளுமே துரிசியது சிவந்துநிற்கும்
வடிவாக வதின்மேலே கவசங்கட்டுக்
காளுமே வண்டமது சுன்னம்பண்ணிக்
கனிவாக வரைத்துமே துரிசிமேலே. 295

மேலாகக் கட்டியே காயவைத்து
மெதுவாகக் காடையென்ற புடத்தில்வைத்து
காலாக வெடுத்துப்பார் செந்துரமாகுங்
கனமாக வருணன்போ லாகுமப்பா
நாலாக சூதமது பலமும்நாலு
நலமாகத் திராவகத்தால் பூர்க்கவிட்டு
சாலாத் துரிசு செந்தூரத்தோடே
சரியாகச் சேர்த்துநீ யரைத்திடாயே. 296

அரைத்துநீ கவசமதை வுண்டைபண்ணி
யடையாகக் காயவைத்து பின்புகேளு
பரைத்துமே கிடத்திலிட்டே யெரித்தாயானால்
பரிவான செந்தூர முருக்கம்பூப்போல்
கரைத்துநீ வெள்ளிதான் மூன்றுமாகும்
கனிவாகச் செந்தூரம் ரெண்டுமாகும்
முரைத்துநீ யுருக்கிப்பார் தங்கமாகும்
முறையாக யெல்லாமுஞ் ஜெயமுமாமே. 297

ஆமேதான் தங்கத்தை வித்துத்தானே
அடைவாகச் சிலவுபண்ணிப் பசியைத் தீர்த்து
வாமேதா னுண்டுடுத்தி வழியைத்தேடி
வடிவாக ஞானவழி யடுத்துக்கூடு
சாமேதான் சுழிமுனையை யடுத்துத்தேடு
சரியான லோகமது கண்டால்சேரும்
பாமேதான் யெல்லாமுஞ் சித்தியாகும்
பதிவாகச் சகலசித்தும் பண்புமாமே. 298

ஆமேதான் மண்டலத்தி லந்திசந்தி
யடவாக வுண்டிடவே நோய்கள் போகும்
நாமேதான் வாதத்தின் ரோகம்போகும்
நலமான பித்த சிலேத்மங்கள் போகும்
வாமேதான் வாதசித்தி யுடனேயாகும்
வடிவாகக் காயமுதல் வண்மையாகும்
சாமேதான் சொன்னபடி யெல்லாந்திருஞ்
சரியாகப் போகுமே தண்மைதானே. 299

தானாக நோயெல்லாந் தவுடுபொடியாகுந்
தாஷ்டிகமாய் நரைதிரைக ளற்றுப்போகும்
வானாக விதுலெகுவு முன்னேபாரு
வடிவாகச் சித்திதரும் மருந்துவைத்து
தானாக நோய்தீரும் வண்மைமெத்த
தாஷ்டிகமாய் உண்டிடவே நோய்கள்போகும்
வேனான குருவருளால் சொல்லிப்போட்டேன்
வேதாந்த சாஸ்திரத்தின் விபரந்தாமே. 300

தாமேதான் கும்மியை யெழுநூறும்பாடி
        தயவாக வைந்நூறும் பாடினேன்பார்
வாமேதான் விளங்கவில்லை யென்றுசொல்லி
        வடிவாக முந்நூறை வகுத்தேனப்பா
சாமேதான் சாஸ்திரஞ் சூஸ்த்திரமும்பாரு
        சரியாகப் பசகட்கு தோணுந்தோணும்
நாமே தான் உலகறியச் சொல்லிப்போட்டோம்
        நண்மை தரும் முந்நூறு நயமாமுற்றே. 301

## புலஸ்தியர் வாதசூத்திரம் 300

முற்றிற்று

உ

கடவுள் துணை

**புலஸ்தியர் விளக்கிய**

# ஞான கற்பம்

---

## கலிவிருத்தம்

சீருலாவியதென் பொதிகையில்வாழ்
மேருசூழகத்தீச ரருளினால்
பேருறும் புலத்தீசர் விளங்கிய
கார்மதம் பொழியானைப் பணிகுவாம் 1

சீரணிந்த செழுஞ்சடைமேவிய
நாரணிப் புலவனாம்பிகை பொற்பதம்
வாரணிந்த மதிமாமலர் சூடியக்
காரணிக்கமலந்தனைப் போற்றுவாம். 2

அண்டபிண்டமளாவிய ஐந்துரு
நின்றிலங்கும் நிராதாரத்துட்பொருள்
குண்டலித்தன்குகனைப் பணிந்துயான்
விண்டமாமதி விந்துவைப் போற்றுவாம். 3

விந்துநாதம் விளங்கியகந்தனி
லைந்துருப்படி யாதலாலைம்பொறி
செந்துவாழ் சிவயோகிகளுற்பதம்
நந்திமாமுகன் றாள்பணிந்தோதுவாம். 4

ஞானகற்ப நவின்றிரு நூறுமே
வானதாவிய மாமுனி தன்னருட்
பானமுண்ணப் பரகதிதந்தரு
ளானைமுகனை யெந்நாளுமறவனே. 5

வாலைகுண்டலி வல்லபையாதலால்
மூலைவாசி முனைச்சுழிமுன்னமே
ஆலமுண்டவரனருள் யான்துதி
காலைமாலைக்கதிர்மதி காப்பதாம் 6

கதிர்சூழும்மதி காரமுஞ்சாரமாய்
அதிவிதநாந்தவடி நடுமூலமும்
மதிவிந்துகோசம் வரும்வழிதாரையில்
நதியிருந்தபூவும் நாடியனாமமே. 7

அப்புமால் திருமைவகை நீரதாம்
செப்பவொண்ணாத் திருமாலுக்கடிமை
வொப்பனையப்புவால் கற்பமோராண்டினி
யிப்படியாகிலுஞ் செய்கற்பனையாவதே. 8

கற்பனைச்சொற்றவறாக் கருதிடி
லற்பமென்றேத் தகத்திடுவாமலுந்
தற்பரையாகிய சாரமமுரியா
லப்பனைக்கண்டருள் பெற்றுலாவுமே. 9

அருள்பெற்றிடும் விந்தமறியகாரமாய்ப்
பொருள் நிலவுப்பைப் புசிக்கப்புசிக்கவும்
யிருள்பத்திருந்த யெண்சானுடல் தேகமும்
மருள்விட்டகன்று மதிநிலவாகுமே. 10

மதிநிலவாகிய மாமதிச்சாரமே
நிதிமறைனூல்படிநேர் பிசகாமலும்
துதிசெய்தினஞ் சரமாறிதொடுத்திடும்
விதியின்படிவந்து விட்டகுறையிதே. 11

## முதல் திங்கள்

விட்டவிதிப்படி விந்ததிசாரமே
தொட்டிடும்விந்து தொடுத்தொரு திங்களில்
அட்டுப்பதுகுண மாறிடமாறிட
யெட்டியபானன் யெகிறியுதைப்பதே. 12

எட்டியபானன் யெகிரியுதைப்பதால்
முட்டிமூலாக்கினை மும்மலச்சூடுதான்
தட்டுமுட்டாகிச் சமான னுஞ்சீறிடில்
அட்டியில்லாமல் அதியுஷ்ணமாகுமே. 13

அல்லல்வெம்பலடிக்கடி பேதியால்
தொல்லைவாராத் தொடுத்திடுஞ்சாரமுங்
கொல்லும்வாயுவு கொடூரமதுவிட
நல்லதோரெருவேற் கொம்புநல்கிடே. 14

## இரண்டாந் திங்கள்

நல்குஞ்சாரம் நமனைக்கெடுத்திடு
மெல்கும்நோய் வினையேகிடுமாதலால்
ஒல்கும்வோரிரு திங்களிரண்டினில்
வெல்கும்பானன் விகற்பம் நினைப்பனே. 15

நினைப்பதென்ன மூலச்சுழிநாபியில்
வினைப்பயன் மிகவேதனை யாகிடும்
இணைப்பதிந்து துயில்வதமுரியால்
யனைப்பட்டதுந்தொந்த மடிக்கடிமாறுமே. 16

மாறமாற மதுபானச்சாரையி
லூறும்வாத மடக்கியஞ்சூட்டிடும்
வேறுவாதவினைப் பித்தமோடியே
தேருஞ்சாரைநீர் சித்தியதாகுமே. 17

## மூன்றாந் திங்கள்

சித்தியாதல் திரிமூன்று திங்களில்
எத்திவாயுவு யெகிரியுதைக்குமா
யுத்திசத்தி யுடலாதிநோயதும்
வற்றிதேகம் வயிறுபொருவலே. 18

பொரும்பலாதல்புகை விழிகூடதாம்
அரும்பமேகமுய் யாக்கையரிப்பதாய்
விரும்புவாரி விடாமலடிக்கடி
திரும்பத்திப்பிலி திரிமூன்றுங்கூட்டிடே. 19

கூட்டும்வாரி குடோரத்தின் வாய்மையா
லூட்டும்பித்தமு முஷ்ணமுமேகிடும்
வாட்டுங்கைகால் வலிக்குஞ்சலிக்குமாய்ச்
சூட்டினால்வயர் துர்ப்பலனாகுமே. 20

## ஆலகாலவிடம்

பாலனாவது பானமேயுண்டிடில்
காலனோடிக் கடல்புக்கிடும்மதால்
வாலைசஞ்சீவி வாருதியாற்சடம்
ஆலகால மமுரியதாகுமே. 21

## நாலாந் திங்கள்

தாவிநாலுஞ் சதுர்திங்கள் மாமதி
ஆவிசோர வமுரியடிக்கடி
மேவியுண்ண வினையதுமோடிடும்
பாவிநோய்கள் பகைத்திடும்பாருமே. 22

பகைக்கும்பானன் சமானன்றனஞ்செயன்
வகைக்குமூவரு மல்லுதியங்களால்
திகைக்குமெண்சாண் திசையெட்டுமோடியே.
நகைக்கும்வாதபித்த சேத்துமநாடியே. 23

சேத்துமநாடி செழுங்கனல்யீறியே
ஆத்துமவெல்லா மருந்தணலாகிடும்
மாத்திதுக்கில்லை மருந்தேயமுரிதான்
பாத்தெழுபத்தும் பகையதுமாறுமே. 24

யெழுபத்தீராயிரம் நரம்போடினால்
பழுவெலும்பிரு பக்கமுளைத்திடும்
அழுதல்துக்கம் மசைதலுளைந்திடும்
தழுதல்தேகம் தடித்துக்கடுக்குமே. 25

கடுக்குமே வயறு கைகாலுளைந்திடும்
வெடுக்கதால்சட மெய்வாய்வெளுத்திடும்
ஒடுக்கம்நாடி யுடலெங்குமுதலாய்
தொடுக்கும்புண்கட் டுயரம்வைப்பார்களே. 26

துயிரமேது தொடுத்திடுஞ்சாரையால்
வயிரமாகு மதுகடுக்காய்பொடி
சயிலவாரி வெண்சாரையேமேல்மருந்
துயிர்பெலக்கு முடன்கொள்வோர்களே. 27

கொண்டுமாறக் குணாகுணங்கூறிடில்
கண்டநோய்கள் கடல்புக்கியேகுமாஞ்
சண்டனேது சடத்தைவிட்டேபிரிந்
தண்டரண்டமு மக்கினிபிரவேசமே. 28

## அஞ்சாந் திங்கள்

அக்கினியாலழியாது பிராணாலயம்
விக்கிரமதஞ்சு விளங்கிய திங்களில்
உக்கிரதாது வுருகிநீராடும்
சக்ரவாளெனும் சாரைவெண்சாரையே. 29

சாரைநீரைச் சரமாறியேத்திடில்
தாரைகோசம் தடித்துப்புண்ணாகிடும்
மாரசாரனை மாமதிகொண்டிடில்
யேரத்தொந்த மெரிபந்தங்காணுமே. 30

யெரியுந்தேக மெண்சாணுடலாதீதம்
விரியுங்கண்ட மிகவும்புண்ணாகிடும்
துரியவே கஞ்சுரம் நளிர்கண்டிடும்
நெரியுமேதனு நீர் கடுப்பாகுமே. 31

நீர்கடுக்கும் நினைப்புவேறாகிடும்
துர்ப்பலபலமாகிய துக்கமதால்மனம்
வேர்ப்பபலபிணி வியானனுதானனுங்
கூர்மநாதன் குணாகுணங்காண்பதே. 32

காண்பதேது வியானன் கொடூரமே
சாண்வயர்விம்மி சடித்துபேதியாம்
வீண்பதரில் வெடித்துவுடம்பெலாம்
ஊணறுசுவையுதா னொழிக்குமே 33

ஒழிக்குங்கூர்ம னுடம்பூதிநித்திரை
விழிக்கும்விழி மெய்மறந்தாக்கையும்
கழிக்குமனாகன் கனலினால்மெய்களை
முழிக்குத் தேவதத்தன்முன்னமே. 34

தேவதத்தன் தியக்குமயக்கமாய்
யாவலாகிரியதீத முண்டாக்கிடும்
பாவபுண்ணியம் பற்றாமல் நடப்பதாம்
நாவதீசார னடிப்புண்டாகுமே. 35

உண்டவன்ன முடன் செரியாமலும்
கண்டதாரை கனத்துமேயூதிடும்
விண்டபானன் விளங்கிய நீரினில்
கண்டு திப்பிலிகையான் பொடியதே. 36

பண்டுதிப்பிலிகால் களஞ்சேபொடி
கொண்டிடுஞ்சமன் கோழையகத்திடும்
மண்டலமீது வாய்க்குமதுக்குப்பின்
விண்டபானன் வியாதிவிபரமே. 37

விபரமஞ்சு மேவிடுமேல்மருந்
தவறிடாமலுந் தாநஞ்சுபட்சமும்
புவியிலோர்க்குப் புகலொருதிங்களில்
நவிக்குமண்டலம் நற்குறியாவதே. 38

நற்குணமெனும் ரத்தினாதிகற்பமே
சற்குணமெனுஞ் சற்புத்திரனாகவுந்
துர்க்குணமயல் திரோதகையாசைவிட்
டேற்குணப்புத்தியோனி யாசைவிட்டிடே. 39

யோனியாசை யொழியாதபாவிகள்
மானி லத்தொருபயிர் மறந்துபிரிந்திடும்
தானணிமயல் தான் விட்டகற்றியே
நானி னிசெய்யுஞ் ஞானகற்பமிதே. 40

ஞானியாவதுநற் புத்திமாந்தரில்
யோனிக்கேணி யுற்பத்தியாவராய்
வானுதானும் மடைந்தையராசையில்
தானுழலத் தவரிடுங்கர்ப்பமே. 41

தானுழன்று தனியே தவிப்பர்கள்
பானமுண்டு பழக்கந்தவறிடில்
சோனையாய்வடிந் துர்ப்பலமாகிடு
மானேகேளுமாணாக்கள் மாள்வோர்களே. 42

## தேகசித்தி

மனிதராகி வடிவெடுத்தங்கனே
புனிதனாய்ச்சிவ போதனைப்பூண்டுபின்
தனியஞானத் தவம்பெற்றுலகில்வாழ்
யினியசாரை யியல்பினைக் கண்டோர்களே. 43

சாரைநாகந் தனையுருவாகிடில்
பேரையானருட் பேருலகந்தனில்
நீரையுண்ட நிரந்தரசொரூபமாய்
வேரையுண்ட விவேகியிவர்களே. 44

## வெண்சாரை

வேகமாகிய வெண்சாரைப்பாம்பிது
போகத்தாசைப் பொருந்தாதி தற்குமுன்
னாமகத்தோ ரமரியாலாத்துமந்
திரேகசித்தியால் சித்தர்களாவரே. 45

## ஆறாந்திங்கள்

தேகசித்தியாந் திங்களுமாறினில்
நாகப்பாம்பு நடுவெனுஞ்சாரையைத்
தோகைப்பாலெனுஞ் சோம்பால்வாரிதான்
காமப்பாலுண்ட கருத்தையழிக்குமே. 46

கருவியால்பானங் காலாகாலங்களும்
குருவாயனுதினங் கொண்டுடன் சாரணை
வருவதோர்பானம் மாறச்சரமாறி
கருவாயனலினால் சுரம்வந்தணுகுமே. 47

அணுகுமூலத்தி லனுசரிப்பதுவெனும்
குணமுந்திரிகரன் கூடப்பொரிந்திடில்
மணம்பொரிந்திமல மதிகமதாகும்
நிணமும்வைத்துநீர் நெஞ்சு புண்ணாகுமே. 48

## வேறு-கவி

நெஞ்சு முணர்ந்து நெறிதவறி
நீறாய்வெதுப்பும் வேர்மையுடன்
பஞ்சதுபோல் கைகாலும்
பதறிநடப்பதுங் குறையும்
வெஞ்சொல் தவறி மதிமயக்கும்
விக்கல் கக்கல் விதவிதமாய்
நஞ்சுணர்வோர் பரிட்சையெனும்
நளிர்வாய் குளிர்சுரமது கானே. 49

காணு மடிக்கடி பலபேதி
கடிதாய் சுரந்துவயறூதும்
வீணேமுன்னாள் வினைப்பயனும்
விதியா யெழும்புமதியதனால்
ஆணாப்பிறப் போரிக்குறிகள்
அமுரியத னாலதீதமுறுந்
தூணாய்தொடுக்கச் சாமாறி
சுகமாய் கொள்வீர் சாரணையே. 50

சுகமாய் கொள்வீர் பானமதில்
துரிதாய் மிளகுதிப்பிலியும்
அகமாய் வேர்க்கொம்பது மூன்றும்
வனலில் வெதுப்பிச் சரிசமனாய்
தருமே பொடியாய்ச் சூரணித்து
சாரநீரிலுடன் கொள்ள
புகையாய் பட்சமுடனறுத்து
ஓகோ பிணிகளோ டிடுமே. 51

பட்சமுணரப் பலநோய்கள்
பறந்தேயுடல் விட்டகன்றிடுமாம்
நச்சத்தரவின் பாலுணர
நமனாகிலுமே வினைநாடாது
நிச்சயமின்னூல் ரத்தினாதி
நிகழ்த்துமிரு னூறாய்ந்திடிலோ
யச்சமதுவாய் வாழ்வுபெறும்
ஆறுதிங்க ளதிசயமே. 52

## ஏழாந்திங்கள் வேறு

திங்களேழில் சாரணைதான்
திருத்தமா மதிசரமாறி
மங்கயர் மீதில் நினைப்பாகர்
மதிப்பா லுணர்ந்து மகிழ்வீராய்
அங்கமதனில் மூலாக்கினி
யனல் கொண்டெழுப்பி யாகாசம்
பங்கப்படுத்துந் தசவாயுவும்
படுக்கை முடக்கல் பலவினையே. 53

வினைநொய்ப் பிணிகள் மிகமீறி
வெடுக்கென்றனல் கொண்டருப்பாகி
சுனைநீரரிவி மதிபெருகித்
தொடுக்கச் சரமாறிக் கனைக்குஞ்
சயமுங் காசமூறும் கபமுங்
கோழைக் கருதிடுமாய்
தனக்குத் தெரிவசர்வாங்கந்
தணலாய் சுரமுந் தலைப்படுமே. 54

தலைநோய்க பாலஞ்சடாசடியாய்ச்
சரமாய்த் தொடுக்குமிடிமுழக்கம்
வலிவாய்மயக்கம் வயர்நோகும்
வாய்தா ளிரண்டுந்தான் பிடிக்கும்
கலையாமனதை யோருறுதி
கைகால் கடுக்குங்கண் கூசும்
நிலையாய்க்குலை நோயடிக்கடிதான்
நினைவா யிருந்து நிகழ்த்திடீரே. 55

நினைவா யமுரிதினந்தோறும்
நிலைப்பனை யதுவின் கிழங்குலர்த்தி
வினவாய் சுக்குமிளகுடனே
யிதுமூன்றுவகை சரிசமனாய்
வினவாய் சுக்குமிளகுடனே
யிதுமூன்று வகைசரிசமனாய்
இனமாயிடித்துச் சூரணித்து
யிச்சூரணந்தனிலே கழஞ்சிடையாய்
நினவாயமுரி தனிற் கொள்ள
கடவே புக்குமதுபிணியே. 56

பிணியாவதுவே தீவினைதான்
பிரியா துடலிற்பிறவியதாம்
சனியாவதுவுஞ் சடந்தனிலே
தனக்குத்தானாய் சஞ்சலங்கொண்
டணியா தகமாயவதரிக்கும்
அமுரியினா லலைகடல்புக்கும்
பணியாவதுமோ காரமேகம்
பறக்குமதுபோல் பாரீரே. 57

## எட்டாந்திங்கள்

பாரீரஷ்ட திங்களிலே
படுக்கு முடக்குமதாய்
வாரீர் வாய்வுவாத பித்தம்
வைராக்கியங் கொண்டது மூலம்
தேரீர் திடுக்கிட்டது விழிகள்
திசையுங் கலங்கியக்கமுறும்
கூரீர்மந்த நித்திரையால்
குறிப்பாய் மயக்கங்குணமிதுவே. 58

இதுவேயினி தானறிவாகும்
இளப்பாமச தியிஸமசக்கை
பதியேழ் பதிராயிரநரம்பும்
பசுமைநிறங்கொண்ட தீதமாதம்
மெதுவாய் நடக்குமிருப்புளைக்கும்
வெளிகொண்டவர் போல்விழலாகு
அதுவாய்குரல் மெதுவாகிவிடும்
அனல்கொண்டெரியு மறிவீரே. 59

## அதிமதுரமிளகரத்தையுடன் முறிகற்பம்

அனல்கொண்டது தானகலவுமே
யதிமதுரத்தோடு வோர்க்கொம்பும்.
கனலோடிடவு மிளகரத்தை
கருதியிடுஞ் சரிசமன் கூட்டி
புனல்சூழ்ந்திடவே வறுத்திடித்துப்
பொடியாய்ச் சூரணம்புகல்வீறா
லினமாயமுரி யின்னீரில்
எரித்துக்கால் கழஞ்சிடுவீரே. 60

இடுவாயமுரி தனிலுண்ண
விருவினையாலெய் திடுநோய்கள்
நடவனையா லன்னசித்தோடும்
நமனோகருதி நடுங்கிடுவான்
படும் பாட திசயவி தமறியப்
பகர்வாய் பாணஞ்சரமாறி
விடுவாய்மதி சரபாணமதால்
விதியைவெல்லு மிதாஸ்திரமே. 61

## அமிர்தசஞ்சிவி யாஸ்திரமெனல்

வெல்லுமமுரிபஞ் சாக்ஷரமே
மிகவுமேன் மருந்ததுவூட்டி
கொல்லுந்தானுமதைக் கொண்டால்
குணமாம் தோஷமுனக்கேது
அல்லும்பகலும் விடாமலுமே
யமுதசஞ்சீவி யஸ்திரத்தால்
மல்லுத்தியமாய் நடுவனையை
மாறிமாறிட ஜெயமாமே. 62

## அமுரியின் பெருமை

சயமாயமுரி தெளிந்திடலாம்
திரமாய்ஜடலஞ் சித்தியதாம்
க்ஷயமுங்காச வாதபித்தம்
தானேபறக்குஞ் சிலேத்பனமும்
மயகாமிய மதமாச்சரியம்
மதிநீரது சஞ்சீவியுணர்
பயமுங்கிலேசம் விட்டேகிடும்
பாரீர்மகத்துகள் பண்போரே. 63

## அறியார் தெளிந்தவர்போல் பேசுவதெனல்

பாராமலுமே பாடுபடா
பலவாய்மொழிகள் படித்துலகில்
தேராமலுமே சிலநூல்கள்
தெளிந்தாரதுபோல் தெளிந்தவர்போல்
தோராமலுமே வாய்ஞானம்
தொடுத்தே தொடுப்பார்சரமாறி
கூராததுநூல் குவலயத்தில்
குருநூல்போ லக்கூறாதே. 64

## குருநூலிருநூற்றின் மகிமையும் தீக்ஷைகெங்கை மதியால் அறிவதெனல்

குருநூலிரு நூறுகுவலயத்தில்
கொடுக்கார் பரிகோடி தனமீய்ந்தும்
அருள் பெற்றமிசையத விருந்தால்
அமைப்பாலமைக்கு மருட்பொருளும்

இருளும் விலகுமிராப்பகலா
யிறப்பும் பிறப்புமிதுபோச்சு
மருவும் தீக்ஷை கெங்கையதாம்
மதியாலறிந்து மகிழ்வீரே. 65

## மதிசந்திர புஷ்கரணி மறைந்ததெனல்

மதிசந்திர புஷ்கரணியதாம்
மறைத்தார் பெரியயோர் மகத்துகள்தான்
விதியாலது மதியறியாட்டால்
வேறொன்றறியார் புவிமீதில்
துதியால் ஞானச்சுகாதிதமே
சுயம்பிரகாசச்சுடர்மணியே
நிதியாய் விளங்கும் நதியறிந்து
நீந்திக்கரை யேறமாட்டாரே. 66

## விஷம்

அறியார ரவமதின் விடமே
யரனுண்ட முதமறியாமல்
பரியாசகமா யுலகோர்கள்
படிப்பார்வெகுநூல் பரிபாஷை
வெறியாய்ப் புராணம்வெகுவாஞ்சை
விதியாக விவரடியலைவதுவாய்
குறியார றிவரறியாமல்
குருநூலறிந்தால் குருவாமே. 67

## ஒன்பதாந் திங்கள்
## பிராணவாய் வெழுந்தோங்கு நிலமை

குருவாயமைத்திடு ஞானகற்பம்
கூறார்குவலயத் தோர்களுக்கு
ஒருவாயொன்பது திங்களினில்
உளைக்கும்வயிர் நோயுடல்பெருத்து
கருவாய்மலர்ந்து கனத்துடலும்
கமலமலர் பூதியல்பாகி
பெருவாய்மலர்ந்து யிடிபோலும்
பிராணவாயு வதைபேசுவமே. 68

பேசார்பெரி யோரிதன் பெருமை
பிராணவாயு மெழுந்தோங்கி
ஆசானது போலடிவயற்றில்
யா டுவுருண்டு கிடுகிடென
மாசாந்திர நொன்பதுமாச்சு
மார்நோய் காணுமதுவாந்தி
நேசாநேசம் பிராணனதும்
நெடியவுதைத்து நெகிழ்ந்திடுமே. 69

அபாயமெனும ணுகாதிடுலு
மனல்கொண்டக் கினிசிரமேவி
உபாயத்துட விருகன்னமதும்
உளைக்குமிடிக் குடுங்கடுக்குமென
சிவாய நமவெனு முயிராகி
செழித்துவலுத்துடன் பரமாகி
தவமாய்த் தவப்பனீடேற
சண்டனும் ணுகாவுடலாச்சே. 70

## வேறு

சண்டனுமணுகா துடலுயிர்காயந்தான்.
வலுத்துநமன ணுகா
தையலின்மாயை யோனியினாசை
தவறுண்டேது னதுபோச்சு
வண்டமீண்டகண்ட நெ சாணுடலுதித்த
மனத்துமே வலுத்துவச்சிரமாய்
அப்புவியாசையது விட்டொழித்து
யாண்டென்றிற் சிறுபிள்ளையாகி

எண்டிசையனைத்துங் கீர்த்தி
பெற்றியல்பா யெழுபத்தீராயிர நரம்பும்
இறுகியே யெழும் அயமதுக்கதித
மெண்கனுடல் தேகமும் வலுத்து
மண்டலந்தனிலே மானுகாள் வணங்க
மாற்றியதேகம் வேறாச்சு
மாய்கையும் போச்சு நிரந்தரசுரூபம்
மனிதரில் தேவனுமாச்சே 71

நிரந்தர ஞானம் தனையதாச்சு
நிரிவியின் கற்பத்தின் பெருமை
நேர்மையோ றாண்டில் பூருவக்கியானம்
நிலைத்துமே காயமும் வலுத்து
பரஞ்சோதிவாலை கிருபையினருளால்
பலபலபிணியதும் போச்சு
பசும்பொன்னிறமாய் சூட்சுமதேகம்
பாலனாய்ப் பிறந்து பாரதனில்

வரும்முத்தி யீசனருளில் நின்றிலங்கும்
மதியெனும் முரியாய் காயம்
வலுத்துமே வச்சிர ரவியதினொளிவாட்
வானமுண்டாகி மென்மேலாய்
இறப்பிறப்பதுவும் மிகழ்ந்துமேகாய
மீஸ்பரனெனும் பிறப்பாகி
யிருவினையொழிந்து யிறுக்கியெந்நாளு
மினியொரு பத்திய முணர்வாம். 72

இனிய பத்தியமாஞ் சிறுவர்கள்
முரியீரெட்டு பாண்டமின்னீர் விட்டதனி
இசைவதாய் பாண்டமின்னீர் விட்டதனி
லிணையிலாக் கல்சுன்ன நீறு
பனியெட்டுப்படி கொண்டு முரியில் தாக்கிச்
சங்கையில்லாமலும் கரைத்து
தனிய வைத்ததனை மூன்று நாள் ரவியில்
தரணி மானிடர்களு மறியா

பனிரவிகாற்றும் வனிதையர் நிழலும்
படாமலும் ரகசியமாகப்
பாகமாய் சதுர்நாள் பாண்டமாஞ்சில்லு
பதிவதாய் தெளிந்தநீர் வாங்கி
இனியொரு பாண்டமே தனினிற்றெளிவை
விபரமாய் விட்டுடனடுப்பில்
மிகவுடன் கனல்கொண்டக்கினிவீச
மிதமதாய்த் தீயெரிந்திடுமே. 73

எரித்திடு மணல்கொண்டிடை விடாதெரிக்க
யிரைச்சலிட்டது நுரையெழும்பும்
இனியநீர் சுண்ட யாவருமறியா
தெண்ணையை யெடுத்து விட்டினிகேள்

குரித்துடன் பதமாய் குருவைநீ பணிந்து
குருமுனிக் கிருபையினருளால்
குறையதும் வருகாச்சார நீர்க்கங்கை
குணாகுணமிதை யுரைத்திடவும்
துரிதமாய் முரிசல மெனுமயமாய்
சுடரதின் நாவினால்வலுத்து
துய்யவெண்ணிறமாய் நந்தியுப்பெனவும்
சொல்லவும் பலபேர்க ளறிந்திடாவண
மிந்துப்பின் மகிமை கற்பத்துக்கிதுவனுபானம்
காரமீனி கேள்கரியுப்பு ஆதிகருதியபிரவிமூன்றாமே 74

## பத்தியம்

பிரவியின் வாழ்க்கை வாருதியுப்பால்
பின்புதான் கரியுப்புண்டாச்சு
பிலத்துபின்னதனால் அமுரியுப்பாச்சு
பிசகிலாமலும் பாண்டமதனை
இரவியுப்பீந்து யிறக்கிவைத்
ரறியியல்பதாய் கும்பியிலிட்டு
இனியதோர் பாகமடிக் கடியினமா
யிந்நாள்முதலீரஞ்சு ஆண்டு
மறலிமாண்டிடலும் வினையதுமொழி
வலுத்திடுங்காயமும் வைரம்
மாய்கைவிட்டகல யிருவினைபிரிய
வகையிந்தப்படி யறிந்துணர்வோம்
பரையெனும்வாலை யேகவஸ்ததனால்
பத்தியமெனும் பகர்வதுகேள்
பாசியின் பருப்புகருக் குருவரிசி
பசுவதின் பாலுடன் நெய்யென்றேன். 75

என்னுடன் மிளகாம் இனியசீரகமா
மின்னமுங்கரிய வேம்பதுவாம்
இணையிலாக் கொடுக்கப்புளியது
மெனலாமிசைந்து பத்தியமதுநன்றாம்
இன்னமொன்றாகா யிறைச்சிமீன் கீரை
மிகழ்ச்சியாந் தாம்பூலம்சுன்னம்
இலைகறிகாய்கள் வஸ்து கெஞ்சாவும்
இலகியபனை யதின்பாலும்

வென்றிடுதேங்காய் விருக்ஷத்தின்
கள்ளுமிக நடைபனி மழைரவியும்
விளங்கு கூக்குரலு நித்திரை
கோபமேந்திழை யாசையுமகல
அன்றிநல்லெண்ணை யரவத்தின்விடமாம்
அணுகினால் மரணம் வந்தமைக்கும்
அகஸ்தியருரைத்த அனுபவமிது
தானடக்கமா யசடிவாதிருமே. 76

இருப்பதென்றாளு மிடமேவல்பொருளு
மிருப்பதுமொரு வேளையன்னம்
இரவுமே யாவின்பா லிலாவிட்டால்
எண்டிசை தனில் வெள்ளையாட்டின்
விருப்பமாய்காட்டு மிகவும் பாலதுவாம்
மேதினிதனில் கொடுக்காயின்
விவேகமாம் புளியுமிது கிடையாவிட்டால்
விசிதமாம் புளியிலைத் துளிராம்.

அருப்பதுமீறு மதீதமாம் பித்தம்
சடதாம் புகயிலை யகற்றும்
அதுள்ள வெனவு மெரிதலுண்டாக்கு
மநேகநோ யமைத்திடு மரிதல்
வருவதும் பிணிகள்
இறைச்சியுண் டுணர்ந்தால்
வாய்வினால் வதைவருங் கடுப்பாம்மச்ச முண்டுணர்ந்தால்
வயர்வலிகுன்மம் வருதலுஞ் சூலைபின்றியே. 77

## அபத்தியத்தால் வருந்துன்பம்

அரிப்பதுண்டாகு மதீதவூட்டினமாம்
தனலினால் விரிவிரிப்பதுவாம்
அகற்றிடுமிளகா யனுபவித்துணர்ந்தால்
யதீத வாதங்களாம் வயர்நோய்
வரிப்படும் பிராணன் வலிக்குஞ்சீதளமாம்
மருகிடுஞ் சுரமெனுந்
தோஷம் வஸ்துவு முணர்ந்தால்
மூலச்சூட தீ தமலத்தினில் கிராணியுண்டாக்கும்

பிரிந்திடுஞ்சேத்மம் பனையதில்பாலும்
பிணியதாங் கால்கரமுடக்கு
பேசுவோ மிரும்பல் யதீதமுண்டாக்கு
பிராணனை வதைத்திடும் பிலமாய்
கரிந்திடும்தேங்காய் விருக்ஷத்தின் பாலும்
கருதினால் சோகையும் பாண்டு
கனத்திடுந்தேகம் வெளுத்திடுஞ்சடலம்
கனவினால் சுரமுமுண்டாகும். 78

கனலதுமீறும் பாக்குவெற்றிலையும்
கல்சுன்ன மிதுவுணர்ந்ததனால்
கண்டத்தில்கோழை சேத்மமுண்டாக்கும்
கடவாய் தந்தமும் வேறகலும்
புனலும்வேறாகும் தனுவெனுங்கோசம்
பொரியுமுண்டாக்கும் நீர்கடுக்கும்
புதுமையாய்ச் சுக்கான்கல் கொண்டுயடைக்கும்
பொல்லா தீபனத்தையு மடைக்கும்

நினைவுவேறாக்கும் பிணியுணர்ந்தாக்கல்
நிணமெலா முதிரநீராக்கும்
நிகரிலாப்பேதி யனுதினமிகவும்
நேர்நிலைவேறிடும் நிசமாய்
வனிதையினாசை மயலுமுண்டாக்கும்
வயர்கடுத்ததீத வூஷ்டிணமாம்
மாரியில் நடந்தால் அகோரமாய்
சுரமும்வந்துமே லபித்திடுங்காணே. 79

லபித்திடும் ரவியில் நடப்பதும் நடந்தால்
நாவது வறட்சியுண்டாக்கும்
நமையதுமதிகம் வேர்வையுண்டாதல்
நான்விழி கீதமும்பாழாம்
சமித்திடுந்தாபம் கோபம்வந்தணுகும்
தணலினால் கோரமாஞ்சுரமும்
சங்கையுண்டாதல் தலையிடியிடித்துத்
தாதுவில் சுவாலையுமதிகம்

கபமது வழங்கும் காற்றினில்
கதித்தால் கருவிகள் தொண்ணூற்றாறும்
கால்கரம சதிவுதிரஞ் சுண்டிடுதல்
கல்லடைப்பதுவு நீர்கடுக்கும்

செயித்திடும் பிணிவந்தடுக்கையால்
ரோசிதினந்தினம் வெள்ளையோக்காளம்
சடமெலாங் குடைச்சல் மூக்குநீர்பாச்சல்
சலதோஷம் சிரசிலுண்டாமே 80

## கற்பமுண்ணநாள் முடுகுவிருத்தம்

உண்டுணர்வதாகி லுலகந்தனிலுயர்ந்த
கண்டுமது சாரையெனுங் கற்பமுணர்வீரால்
பண்டியல்புதைப்பிறையின் பௌர்ணமிநாளில்
உண்டிடுமூன்றாம் பிறையிலுன்னிதமதாமே. 81

உன்னிதமறிந்த முரியுற்பனமதாகில்
இன்னிதமிகுத்த தொழிலின் பெருமைகாண்கில்
அனினியநிமித்தமிது யாரறிவர்சித்தர்
வன்னிபதிகற்பமுணர் வாலைவயதாமே. 82

மாதபிராமியருள் மலர்க்கமலமீதில்
தாதுவைராக்யசுழி சந்நதியின்மூலம்
வேதமெனும்சுத்தகச மாமதியின்சூட்சம்
பேதமறவிந்ததித பிரபல்யமாமே. 83

விந்தநிதவாருதியில் மேருவெனுஞ்சாரல்
அந்தபதிசாகர மடுத்தகரையோரம்
வந்தநரனீரிலிசை மானுகளில்சோணர்
அந்தணர்வின்முத் துணர்வதாகில்வானமே. 84

முத்துகளிரத்னவகை முப்பொழுதுமுணர்வார்
அத்தொழில்கடுத் துதிரமுத்தினவாரி
சுத்தமதிபாரைதொடு மத்தகடலூறி
உத்தமரிசைந்துலகில் உச்சிதமென்பாரே. 85

உச்சிதகடவுள் குருவி வுப்பதெனுங்கொள்கில்
இத்திசையில் பண்டிதர்க் கிசைந்தவிழ்தமென்க
மத்துனர்கள்வாதியெனும் மானுகளில்வாரில்
வைத்தவருளீசனு மமைத்தபொருளாமே. 86

பொருளினைகல்லுப்பறிய பொன்மகமேராகும்
உருவதீ தமின்பெருமை வுணர்வதெளிதல்ல
பருவமணிகடலையிடை பாகமெனுஞ்செய்கை
மருமதியமமுரியடி வகையதுகாணாதே. 87

படியமுரிநாலுமொரு பாண்டமதிலிட்டு
அடியெனும்பூநீரி லரைபடியதெனுந்தாக்கி
வடியயறுபது கடிகை மதியமுரிதெளிய
மடியநிலவுப்பதனை மதியிலிடுவாயே. 88

மதியிலிடுவன்னியொரு வகையதுவின் கம்பால்
அதீதவிதபெரியவனல் லமுரியதுசுண்ட
இதியிதெனும்வாருமிக விப்படி செய்வீரால்
நிதியகடல்வாரியுவர் நீங்குதலையாமே. 89

உவரகல்பாரைநிலை யுப்பதிதசுத்தி
யெவருமறியாமலு மீரஞ்சுவிசைதீக்ஷ
கவரதிதகோடி மணக்கில்லைகடலுப்பில்
சவமெனவெழுந்து மூயிர் தானதுவிளம்பே. 90

விளம்பும் செயநீருவெடியுப்புவொருசேரு
வளம்பெற பூதிரதுவகைக்கொருசேரு
திளம்பெறவெண்காரமெனும் சேரதுவுமாகும்
இளம்படிகஞ்சே மிகுசாரமதுசேரே. 91

சாரமதுவோடிது வகைக்குசமனாகும்
கூறரியநாலுவகை குளிக்கல்லில் தாக்கி
ஆறரிய தாகமதிய முரியதனாலே
வீரமெனுமூன்றுதினம் விடாமலதையாட்டே. 92

விடாமலதிலிட்டு மெழுகுபதமேயாதல்
உடாமலும்வழித்துணர்வீ ரூகவையதுவாகப்
படாமலுமேசேருவகை பாகமதுநாலாய்
சுடாகமெனும்பில்லையது சூட்டிடுமிதாமே. 93

சூட்டிரவிதன்னில்மிக சூடுபடவாட்டிக்
காட்டிக்கனலேறத்தழல் காய்ந்ததன்பினோட்டில்
வாட்டியடிமேலு முறவாகவும்பதித்துக்
கூட்டியமண்சீலையது குக்குடமதாமே. 94

குக்குடமதாகவகை கொண்டுபுடமாறி
விக்கிரமெனும்பில்லையது வெவ்வேறதாகி
உக்கிரமுடன்குக்குடம் தோன்றுமேயாகில்
சக்கிரமெடுத்ததனை சாற்றிடலுகமன்றே. 95

சாற்றியகுழிக்கல்லதனில் தானதனைத்தாக்கி
மாற்றிடுமரைத்துப்பொடி மயனமதுவென்னில்
பேத்திடும்பீங்கான்தனில் பின்பதனையூட்டிப்
பார்த்துவைநீயதனில் பக்குவமதாக்கே. 96

பக்குவமெனும்பனியில் பாகமதுவாக
இக்கனியசுன் னமிது யிப்படியிரஞ்சு
வைக்கசெயனீருமது வேகமதுவேகம்
புக்கவேதினந்தினம் புகழ்ந்துசலம்வாங்கே. 97

வாங்கிடுஞ்செயநீரு வளமாகுமொருகுப்பிப்
பாங்குபெறவேயதனை பக்குவமதாக்கிச்
சாங்கமிதுபாரை நிலவுப்பதனைக்கொண்டு
தேங்குகுறிகல்லிலொரு சேரதுவும்பூட்டே. 98

சேரதனைபூட்டி செயநீரதுவும்தாக்கிக்
கூறொருநாளாட்டிக் குறித்துமெழுகானால்
பேரிதனைகொண்டுமிகப் பில்லையதுவாக்கி
நாரியர் நிழலணுகார விமுகத்திலாட்டே. 99

முகவனருத்பணியர விமுகத்தில் தழல்சொரியப்
புகழுங்க திர்முகவசியம் பூட்டியெழுவாரம்
மிகசதிரோடதனில் மேஷம்வருகாமல்
விகடமணுகாமலும் விதிப்படியதாக்கே. 100

விதிப்படிமேலோடுறவே மேலுமதுமூடி
நிதிப்படிமண்சீலையது நேர்மையதுவாக
மதிப்படிதுரித்தியதின் வாய்ப்படியவூதி
முதிரிமுணை தவரிடுகா முன்பதனைவாங்கே. 101

வாங்கிடுமிந்தவித மற்றமருந்ததனை
தூங்கிவிடுகாமலுமே சுத்தசலப்பனியிற்
பாங்குபெறசுத்தசலம் பாச்சிவிடும்பீங்கான்
நீங்கிவிடுகாமல் நிலவுப்பதுநீரூட்டே. 102

ஊட்டிவிடுநீரதனி லுப்பதனின்சுன்னம்
காட்டிவிடுமன்பெரிகி கல்லுப்பதின் குளம்பை
நாட்டிலறியார்கள் தினஞானியவர்கூர்மை
பாட்டிலறியாமல் பறைபாரையினுப்பாமே. 103

உன்னிதமுரைந்துகன லோடியனல்தாவி
கன்னியபிராமியருள் கற்பனையினாலும்
இன்னீர்சலமாமதி யிசைந்துயரைநாட்டி
சென்னிலமணலாமிதி லிசைசிந்தித்தருள்வாயே. 104

சிந்தையணுகாது சிவகாமியருள்பாதம்
வந்துதொழுதேபணிய மண்டலமண்மீதில்
கண்டுதினம்பூசி கனிவர்க்கமறுசுவையும்
மண்டலம் வைத்தேயுணர் வஸ்துவிதுவாமே. 105

## கல்லுப்பு

வைத்திடு பீங்கான்தனில் வாணுசலநீர்மேல்
சித்திரக் கல்லுப்பதுவின் செய்கையதுகாண்கில்
முத்துவின் சுத்தவெளிர் வைத்து பனிநீர்மேல்
கர்த்தநடனம் புரியம் கல்லுப்பிதுவாமே. 106

கல்லுப்பிதுபாரை கருகண்டனர்கள்வாதி
அல்லும் பகலுமொருவ ரருகிலணுகாமல்
நல்லசல மேற்பட்டரு ணன்மலர் பூஞ்சூட்சம்
கொல்லைவினையாதிதமுஞ் சூழ்வதிலையென்றே. 107

முழுமதிப் பாரையது சுத்தபனி நீர்மேல்
வாழுமொருமண்டல மதுப்படிகம்போலாம்
நீழுலகிலும்புகழும் நேர்மைநிலவுப்பை
தாழ்வுதலில்லாமல் தகடாய்விளையும் பாரே. 108

விளையுந்தகடாதீத்மும் வெள்ளப்பிரகம்போலாம்
களையதீதம்பதினாறு காந்திமதிசூழுங்
குளையெனவுங் குப்பிதனில் கொண்டதனைத்தாக்கி
மூளையெனவுஞ்சூட்டி மிகமுத்தமதில் வையே. 109

## குருகடாக்ஷம் பின் 100 என்று பாடியது

முத்திதரும்ஞான வழிமூலச்சுழிமீதில்
சத்தியபிராமியருள் சதுர்க்கமலபீடம்
வெற்றியருள் மத்தகச சித்தர்மணிவாசல்
நித்தமலர்பொழியிரவி நிர்மலமுங்காப்பாம் 110

நிர்மலநிரந்தர நிராதரசுரூபி
கர்மவினை துர்ப்பவித காமிதவிரோதி
வர்மவுவரைந்துகடல் வாருதியினாலும்
மர்மதிசூழுமணி மகுடமலர்காப்பாம். 111

மதிபெருகிக் கதியடைய விதவிதமெய்ஞ்ஞானம்
விதியின்னமைப்பது விசிதவிந்துமதிசாரம்
விதியின் மறைந்துபொழிய சுழியின் முனைமீதில்
பதியமலர் சூடியருட் பானமெனும்பணிவாம். 112

## வேறு

கருவிகள் தொண்ணூற்றாறு நிர்மலமாய்
கனலெனு மதியுணர்ந்ததனால்
காயம் வெவ்வேறாய் சனனமுண்டாதல்
கனரத்தன வொளியறிய
மருவிமும்மலமுங் கருகிநீறாகி
மதுரசஞ்சீவி யென்னமிதம்
மதினில வொளிவாய் சுழிமுனையிடபின்
வலமிடங்கதிர் மதிசூழும்

வருமதவாரி பொழியும்மும்மலமு
மாய்கையு மகிழ்ந்து சஞ்சலம்போய்
மதியெனும் ரவியை மனம்புணர்ந்துணர்
வாலையி னடிபணிந்தருள
குருமுனிமதுர வாக்கியத்துணர்
வாலைகுண்டலியெனு மலரக்கமலம்
கும்பமென்றிலகும் அகாரகாரணத்தால்
குஞ்சர முகனையே துதிப்பாம். 113

குஞ்சரத்ததித மதுரத்தேனின்பங்
குண்டலி வல்லமையிலகும்
குகைவளங்கரிய பிராணவாய் வதுவும்
குடியிருந்திலகு மானகரில்
நஞ்சரத்தமுத பஞ்சபூதியமும்
நடனவுல்லாசமே புரியும்
நாதவிந்துசித கருநெல்லி வளமும்
நன்மதிசாரை வெண்சூழுங்

கருணை மெய்ஞ்ஞானம் விதிப்பதாலினிய
கனியெனும் வமுதெனுங் கருத
விஞ்சையின் பெருமை விதிப்பதால்முன்னோர்
விட்டடிதொட்ட தோர்தசையால்
விளங்கியவன் னிரவியோனி
மேவுமிக மூலப்புளி யிருந்திடமே. 114

மிகமூலப்புளியு மமுரியி னியல்பாய்
மென்மேலுங் கட்டதீத பாயமுந்தி
விளங்கிடுஞ்சாரை யரவத்தால் மடங்கி
வேகுண்டஞ்சு தலைனாகப் பாம்பை
யுகமையாய்ப் புணர சுரேசன்னமதா
யுகாரமென்றது புளியுணர்மாய்
ஓராண்டு பின்வாங்கி ரவிதனிலுயர்த்தி
யோரிடியா யிடித்ததனை

ஜெகமனி தர்களும் யாவரு மறியாச்
சீலையில் வடித்துச் சூரணமாய்
சிருதயகலகம் அதனில்வைத்தினிகேள்
தேவியம்பிகை மலர்பணிந்து
அகத்தில மரருளாலடிப்ணிந்துதொழுது
மகாரமா மமுரி கொண்டிடவும்
அருணவுச்சகத்தி லறுவகை நீர்கொண்
டகாரம் விட்டடுகாரமே யுணரே. 115

உட்கொளக்காலந் தாரணையகாரம்
காலையிலா் மந்தியினுகாரம்
அழுகிவிட்டதை யுரமாக்கி
ஆண்டொன்று மிந்தப்படி பிசகாமல்
அடிவிட்டகன்று செல்லாமல்
உகாரங் கொண்டேனே மூலத்தின்வாசி
உங்கென்றுந் தாரைகொண்டுதவ
ஒருகடிகையினில் நவத்துவாரவாசல்

ஓடிடா வாசிகொண்டழுத்திப்
பதறமாயக்க காலையு மிரண்டு
பழக்கமதாக வப்பியாசம்
பதறிடாலுமே கண்ட தாரையினில்

நிர்மலநிரந்தர நிராதரசுரூபி
கர்மவினை துர்ப்பவித காமிதவிரோதி
வர்மவுவரைந்துகடல் வாருதியினாலும்
மர்மதிசூழுமணி மகுடமலர்காப்பாம். 111

மதிபெருகிக் கதியடைய விதவிதமெய்ஞ்ஞானம்
விதியின்னமைப்பது விசிதவிந்துமதிசாரம்
விதியின் மறைந்துபொழிய சுழியின் முனைமீதில்
பதியமலர் சூடியருட் பானமெனும்பணிவாம். 112

**வேறு**

கருவிகள் தொண்ணூற்றாறு நிர்மலமாய்
கனலெனு மதியுணர்ந்ததனால்
காயம் வெவ்வேறாய் சனனமுண்டாதல்
கனரத்தன வொளியறிய
மருவிமும்மலமுங் கருகிநீறாகி
மதுரசஞ்சீவி யென்னமிதம்
மதினில வொளிவாய் சுழிமுனையிடபின்
வலமிடங்கதிர் மதிசூழும்

வருமதவாரி பொழியும்மும்மலமு
மாய்கையு மகிழ்ந்து சஞ்சலம்போய்
மதியெனும் ரவியை மனம்புணர்ந்துணர்
வாலையி னடிபணிந்தருள
குருமுனிமதுர வாக்கியத்துணர்
வாலைகுண்டலியெனு மலரக்கமலம்
கும்பமென்றிலகும் அகாரகாரணத்தால்
குஞ்சர முகனையே துதிப்பாம். 113

குஞ்சரத்ததித மதுரத்தேனின்பங்
குண்டலி வல்லமையிலகும்
குகைவளங்கரிய பிராணவாய் வதுவும்
குடியிருந்திலகு மானகரில்
நஞ்சரத்தமுத பஞ்சபூதியமும்
நடனவுல்லாசமே புரியும்
நாதவிந்துசித கருநெல்லி வளமும்
நன்மதிசாரை வெண்சூழுங்

கருணை மெய்ஞ்ஞானம் விதிப்பதாலினிய
கனியெனும் வமுதெனுங் கருத
விஞ்சையின் பெருமை விதிப்பதால்முன்னோர்
விட்டடிதொட்ட தோர்தசையால்
விளங்கியவன் னிரவியோனி
மேவுமிக மூலப்புளி யிருந்திடமே. 114

மிகமூலப்புளியு மமுரியி னியல்பாய்
மென்மேலுங் கட்டதீத பாயமுந்தி
விளங்கிடுஞ்சாரை யரவத்தால் மடங்கி
வேகுண்டஞ்சு தலைனாகப் பாம்பை
யுகமையாய்ப் புணர சுரேசன்னமதா
யுகாரமென்றது புளியுணர்மாய்
ஓராண்டு பின்வாங்கி ரவிதனிலுயர்த்தி
யோரிடியா யிடித்ததனை

ஜெகமனி தர்களும் யாவரு மறியாச்
சீலையில் வடித்துச் சூரணமாய்
சிருதயகலகம் அதனில்வைத்தினிகேள்
தேவியம்பிகை மலர்பணிந்து
அகத்தில மரருளாலடிப்ணிந்துதொழுது
மகாரமா மமுரி கொண்டிடவும்
அருணவுச்சகத்தி லறுவகை நீர்கொண்
டகாரம் விட்டடுகாரமே யுணரே. 115

உட்கொளக்காலந் தாரணையகாரம்
காலையிலா் மந்தியினுகாரம்
அழுகிவிட்டதை யுரமாக்கி
ஆண்டொன்று மிந்தப்படி பிசகாமல்
அடிவிட்டகன்று செல்லாமல்
உகாரங் கொண்டேனே மூலத்தின்வாசி
உங்கென்றுந் தாரைகொண்டுதவ
ஒருகடிகையினில் நவத்துவாரவாசல்

ஓடிடா வாசிகொண்டமுத்திப்
பதறமாயக்க காலையு மிரண்டு
பழக்கமதாக வப்பியாசம்
பதறிடாலுமே கண்ட தாரையினில்

பாகமா யூதிடும்வாசி விகற்பம்வாராமல்
ஏழாயிரத் திருநூறும் விளங்குமூலத் தினிலிசைந்து
வேறதாய்ப் பிரிந்த சுவாசமொன்றாகி
மிகவளர் பிறையெனும் வகுப்பாம். 116

## முதலாண்டு

வளர்பிறை யிருபத்தோ ராயிரத்தறுநூர்
வாசியு மூலத்திலிருந்து
வாழ்விக்குமாதல் தசதிங்களாண்டு
மருவிய அமுரிகொண்டவைபோய்
இளவுருவாக யிரண்டு திங்களினி
லிவைமன வாஞ்சையை வேறாய்
எழுபத்தீராயிர நரம்புமே வலுவாய்
எண்சாணுடலாதி தங்கனலாய்
மருவியவாசம் பிராணன்மே நோக்கும்
வாசியும் கால்கொண்டு பாவை
மதிரவியிரண்டும் பிரகாசமே புரியும்
மனமொரு முறுதியோ ராண்டு
கருவருளதனா லீராண்டுமே சென்று
கனமாந் தேகமுஞ் செழுமை
காரசாரத்தைப் புவிதனில் மாந்தர்
கவைக்குதவா தெனப்பழிப்பார். 117

## இரண்டாவதாண்டு

பழஃகமதாக வாசிமூலத்தில்
படிந்துமே நாதவிந்ததனில்
பறியதாச்சொருப மாத்திரண் டதுவாய்ப்
பரப்பிரம்ம வொளிவதாய்ச் சயிலம்
அழகென்ன சிசுவாய்ப் பாலன்போலுருவாய்
அகார வுகாரத்தினருளா
லக்கினிச் சுவாலை யனலினாலெடுத்த
அசலாடிக் காயமென்றதுவாய்
உழவில் வெள்ளாமைப் பயிரிடுவிளவாய்
உகமையைப்போ லுருவாகி
வுகாரத்தால முரிவலுத்து கண்டதுவாய்
உயிருட லொன்றதாய்ப் பொருந்தி

செழுமையாய் ரோகம் யருணநுட்பதமாய்
தேவியம்பிகையெனும் வசியம்
செடலமாதிதமும் ரவியொளி பகலாய்
தெளிவதா மிருளும் போம்மதியே. 118

## மூன்றாண்டு

இருளதுமாறி மதியொளிவாகி
யிராவினிற் பளிங்கது போலாம்
இரண்டுடனாண்டு சென்றுபோய் மூன்றில்
இனியென்ன யிருதய மன்றறிய
பருவமாம் முரிநிறமென்ன சீசெழுமை
பருதியாம் முதல் பக்ஷங்காலை
பாகமா யருளடிக்கடி யருவி
பழமைமுன் வருவதும் வருகா
உகுவதாய் மூன்றுவேளை தான்வருதல்
மூலத்தின் புளியைச் சூரணமாய்
நீறாகியமாய்ப் பீங்கான் தனிலிட்டுமமுரி
மூன்றுசாமங்கள் சென்றுபின்
உருவெனு மிரதம் தனிலிட்டுறவாய்
உண்டையுஞ்செய் துணர்வீரால்
உணர்வறிந் துண்டுபிராண் வாசியைத்தான்
ஓமென்றுங் கும்பித்து வூதே. 119

ஊதிடுந்தாரை வுறக்கங் கொண்டாகா
உறக்கவுங் கூக்குரலாகா
உறுதியாய்க் கண்டந் தனிலுமேவாசி
ஓசைகொண் டொருவர்தானறியா
ஆதியுமந்தநாத விந்துவே
வண்டபிண்டங்களு மதுவே
அப்புவுப்பதுவே கருநெல்லிசாரை
யகாரவு காரமு மதுவே
கோதி லாக்காரசாரமு மதுவே
கோசமும் பீஜமுமதுவே
குருமுனி யருளால் புலத்தியன்விளங்கும்
குவட்டிலைச் சித்தர்கள் பணிய
வாதிகளறிய கற்பசூத்திரத்தை
வைத்துப் பூசித்து பார்தனிலே. 120

பாரினில்மூலப் புளிசுன்ன முரைக்கப்
பதினெண்பேர் சித்தர்களு மகிழப்
பணிந்துயான் துதிக்க உலகினில்சரக்கைப்
பக்குவமா கவுமினிகேள்
ஆரிறியாமல் கருநெல்லிக் கனிதான்
யரிவிந்துவெனும் மைப்பதறால்
அதுஒரு மணங்கு யெவரறியாமல்
அடக்கமாய்க்கொண் டொருபாண்டம்
நேரதாயடக்கி நதிசலம் வாங்கி
நேர்மையா யிருமணங்கிடைதான்
நிரைய சாலதனில் யிருவிதபாகம்
நிர்மலமதனையே புகட்டி
வேறுறவில்லா அறுபதுநாழி
மிகவுஞ் சேர்ந்தது வெனுமூர
விளக்கவாய்ப் பிசைந்துபின் பறுபதுவும்
மேவியே சென்றபின் விளங்கே. 121

விளக்கமாய்ப் பிசைந்து பின்புமூன்றதுநாள்
மிகதெளிந்தது சுத்த
சலமாய் விதரணையாக மண்ணிதுதெளிந்து
மென்மேலு மின்னீர் தனைவாங்கி
அளம்பெற சுக்கான் பாளையங்கோட்டை
யதுக்கு தென்பாரீசம் விளைவு
அதுமூன்று காதம் சென்றுமேநடக்க
நருவிய திருதேருங் குடிதான்
நிலமுலாவிளதும் மறவர்தன் னாடும்
நீன்புவியதற்குத் தெற்கதுவும்
நிகரிலாபூமி மலைவளம்புரியும்
நின்றிடுங்குன்றது வளப்பம்
விளைமலைச்சாரல் அதுக்கடிவாரம்
வெட்டுவார்சுண்ணாம்பு பாலாம்
வெண்பளிங் கதுவாம் புஷ்பராகத்தின்
விளிய சந்திர னொளிவாமே. 122

ஒளிவென்னமதியும் பிரகாசமேயிலகும்
ஒருமணங்கது சுன்னநீர் தான்
தெளிவுடன் வடித்து திவ்வியமாயிறக்கி
செழும்வன்னி மூட்டியேயடுப்பில்

நீர்க்கமாயனல் கொண்டக்கினி வீசத்
திரதமாய்க் கனல்கொண்டுசூட்டி
வழியதுவும் நுரைதான் வரும்பதம்வாங்கி
வரவரப் பின்னுமாறாமல்
மதிசஞ்சுண்ட யெண்ணைவத்திலகும்
மகடென மூவர்க்கசடெடுத்தே. 123

எடுத்தெடுத்துணர்வா யினிபதமாகில்
இலகியநாத மென்றிரதம்
இசைந்துகுங்குமம் போல் நிறமதுவொளியாய்
இருப்பதினியல்பு கண்டினிபின்பெடுத்து
டனிறக்கி ஆறவைத்ததன் பின்னிதனிப்
பார்த்திடுமளவதனில் அழகிய நிறமால்
திருவெனுமொளிவாய் அரிதளம்போலுமேபரிதா
னகற்றிடிலிதுவும் அதீதமாய்ப்புளியில்
கடுஞ்சுன்னமெனுங் கருவிதுவாம் கரையிலாத்தொந்த
மீரஞ்சுதிறத்தி கற்சுன்னம் படியதுமொன்று
தடுத்தடாமலுமே சலம்படிநாலிதன்னீர்
தெளிந்தது செலம்வாங்கி
சலத்தெளிவதனில் புளிச்சுன்னங்கரைத்து
தனியெடுத்ததனை வைத்திடுமே. 124

எடுத்திடுங்கசிவு மெண்மையுமதீதம்
லேக்கியப்புளியதின் சுன்னம்
இப்படி சபத்தினிய கற்பனையாய்
இயம்பிட வெண்மதிவெளிறாய்
அடுத்துறவாக யதிதசுன்னமதாய்
அற்புதமாகவும் வுரைக்க
அருட்படிகாரம் வெண்காரமுஞ்சாரம்
அதீதமாம் வெடியுப்புபாரை
தொடுத்துடன் வகைக்குச் சமனஞ்சுபலந்தான்
சுகாதீதமாகவு மெடுத்து
தொடுத்தொருபாண்ட மதனிலிட்டிதனை
சுயம்பெனும் புளிச்சுன்னவகைக்கு
கொடுத்திரு பத்து
அஞ்சுமேயுறவாய் கூறிய யன்பதுபலமும்
குறித்துமே பாண்டமிட்டிதனை
குருவெனுமமுரி விட்டுவுறவே. 125

அமுரியீராறு படியளவிட்டி
யறுபடிகல் சுன்னமதனில் அளந்து
நீர்தாக்கி கரைத்துறவுணர்ந்து
அருட்பெற மூன்றுநாளதின்பின்
அமுர்தவம் பிகையின் பாதமலர்போற்றிரவி
படாகாற்றுறவாமல் ரகசியமெனவும்
மடக்கமாயில்லம் நாள் கழிந்தது சதுர்நாளில்
தமுதயமாக பாண்டத்தினடுவில்

தமரொன்று தவறிடாமலுமாய்
சங்கை யில்லாமல்
பெருத்ததாய்ப் பாண்டஞ்சலமதி
லிரங்கவிட் டிசைவாய்
குமுறிடாமாலுமே தெளிவுநீர்வாங்கி
குறைவராத டுப்பில்வைத்தெரிய
கொடூரமில்லாமல் ஒருமரக்கொப்பாய்
கொண்டுடன் கமலம்போல்தீயே. 126

கமலவன்னியுமே தெளியும்போதுரையும்
கடல்னுரையுரவ வதுபோலுங்கசரவெடுத்து
நீர்கள் சுண்டிடு மாங்கல்மசமது
மெலாங்கழண்டு சோமனென்றொளியாய்
சுகாதீத வெளுறாய் சுயம்பிரகாசமாச்சுவரல்
சூட்சமிப்பாகம் வருதல் பின்பாகச்சுவரிடு
மிரதல்போல் தயிலம் வாமப்பாலமிர்தமது
வெனும்பாணம் வளப்பமென்றியல்
புவாஞ்சினைபோய் வஸ்துவாய்நாதம்
வருதல்கண்டு வறல்வண்மைகண்டு
மளிகொப்பளித்தல் காமப்பாலுணர்ந்த
கசடருக்கின்னூல் கருதிடில்
கமுதையாய் செனனம் கருவியிலுதித்தல்
வினையும் தந்தெய்தல்
காட்டொணாதிது கற்பனூலே. 127

கற்பம்பின்னூரில் வழலையின்பெருமை
காட்டொணா ரகசியஞானம்
கருவெனும்பாண்டம் மிரக்கிவைத்தார்
கனலெனுஞ்சுடரது தணிந்தால்

பற்பமாதா கரவினியுலர
பாகமாய் வைத்தெடுவாரம்
பளிங்கதுநிரமா யதீதசுன்னமதாய்
பாச்சிடுங் கும்பியிலடக்கி

மறதனப் பெட்டகத்தில் வாடைவீசாமல்
வாசமும் வெளியில்வாறாமல்
மதியெனும்விந்து சந்தரபுஷ்கரணி
வாருதிஅப்பு வென்றதிதம்
தர்ப்பரமெனும்பேர் அண்டமென்றிதுவாய்
சதாசிவன்சிரசில் கெங்கையதாம்
சாரமாயிலகும் வைகை
தாபறமெலாம் நிறைந்தொளிவே. 128

## உப்பின் பெயர்

நிறைந்ததற் சொரூபரோமநீர்
ஊசிநீறாமயநில வுப்பென்றிதுபேர்
நிறாதரமெனு முப்பமுரிபஞ்சாட்சரம்
நிகரிலா வுப்பிதை வுரைக்க
விரைந்தமா வெனுமே
நடுவணையெனு மாய்விளங்கிய
அவ்வெனு மெழுத்தாய்
மேதினிதனிலே பாலர்கள்
அமுரிமூன்று பத்திரண்டு சிறந்திடாமலுமே
செய்வினையுணர்வாய் செப்பிய
பாண்டமென்றதுவாய் தெளிவிட்டதனில்
கல்சுன்னநீரு திருத்தமாய்ப் படிபதினாரு
வரந்தரும்வாலை மலர்திருபத்தில்
மருவியாராதனை செய்து
வமுரியில் தாக்கி மனதுசஞ்சலியா
மதுதனைக்கரைத்து வைத்திடுமே. 129

மதுதெளிந்துவர்போய் மதுரசஞ்சீவியாம்
அமரியின் கசடெலா மகண்டு
வாருதியுவர் போய் சுத்தகெங்கையதாய்
வஸ்துவென்றது வொளியதுவாய்

இதுசதுர்நாளில் யிணையிலாமலுமே
யெடுக்கவுமிதுக்கடி நடுநேர்
இதுவொருபாண்ட மிகவும்வைத்திருக்க
இனிய நீரறுவிபோல் செலமாய்
அதுமையத்துவாரம் பக்குவஞ்செய்விதமாய்
அண்டமென்றது திருமாலாய்
அமுதமாய்ப்பரவி நதியதாய்த்தெளிந்து
ஆரதாய்ப்பெரிகி யவ்வழியில்
சுதனருளிலகும் முத்ததுக்கதிகம்
துய்யவெண் மதிநிலவாகி
சுயம்பிரகாச மெனுங் காரசாற
சுகாதிதப்பே ரின்பமெனுமே. 130

## வழலையுப்பு

மெனுமருசுவைநீர் யிருவகைசெயநீர்
இலகியதிராவக செலநீர்
எடுத்தகமெனுமே யிகலதாயுணர்ந்து
இடுமவன்னி கமலம்போலிசைந்து
கனம்பொருந்திவை நீர் கனலெனுமெதுவாய்
கசடகத்ததுனுரை விலங்க
கருதிடுமதுசூழ் கண்டுபோம்பொழுது
கண்ணாடியிலகு பொன்னுருவாய்
இனமிதுபாகஞ் சுவறிடுமினங்கண்டு
இறக்கிவைத்தாரச் செய்திடும்பின்
இடைதயிரதுபோல் யிரகிவுப்பதுவாய்
ஏகாட்சரமெனும் பொருளிதுபார்
தனமறிந்துணற வழலையுப்பிதுவே
தணலதும் ஆரிசாந்தமாய்
சாறயிந்திரிய பஞ்சாட்சரமெனுமாய்
சாத்தியவாரு கண்டிடுமே. 131

சாரமென்றிதனை குப்பிகொண்டடக்கி
சங்கையில்லாமலும் ரவியில்
தரணிமானிடர்கள் அனுசறியாமல்
தானதைவாரஞ் சென்றெடுத்து
காரமுஞ்சாரம் நாதவிந்தெனுமாய்
கல்லுப்புவெனுங் கருத்ததனால்

கதிர்மதிசுடர்தான் வழலைமுப்பிதுபேர்
காட்டொணா ரகசியமிதுகாண்
வேறேவொன்றிலைப்பார் யடுநடுமுடியும்
விளங்கினோம் அகத்தினருளால்
மேதினியிலகும் வாதிகாள்
இதன்பேருவெவ்வேறதாய் விதித்தனர்விழலாய்
பாறையுப்பறிந்து பாகங்கண்டறிவோர்
பருதியென்றது மதியறிவார்
பலபலனூலும் இதற்கொவ்வாசூட்சம்
பரமெனும் அறிந்தறியாரே. 132

## பொய்யர்கள்

அறிந்தறியாம லம்புவிமனிதர்
அனந்தஞ் சாஸ்திரங்களு மாய்ந்து
அகப்படா துருவுங் கருவறியாமல்
அகண்ட கடாகமுந் திரிந்து
பறிமயமாசைப் பிடித்து
பேய்ப்பிடித்தார்போல் பாரில் மானிடர்களைமயக்கிப்
பலபலசரக்குங் கறிக்கிசுட்ட தர்ப்பின்
பணம் பறித்தோஷியே பாரில்
வெறிபிடித் தவர்போல் வேடங்கொண்டலைந்து
வேசிமார் மயல்மிகவிம்பி
விறகமதாகி கள்ளுடன் கெஞ்சா
விதம்விதம் வாமங் கொண்டலைந்து
நெறிதவம் மறந்து வாய்மதம்பொழிந்து
நிலையறியாமலும் ஞானம்
நிகழ்ந்திடும் நாய்போல் குலைந்துமே திரிந்து
நிதம்நிதம் புலம்பியே வாழ்வார். 133

வாழுவதிலைபார் வழலைமுப்ப தீதம்
மருவிய முப்பதுமூன்றும் மறப்பிலாமலுமே
ஞானவானவர்க்கு மதிரவிசுடரது வஸ்யம்
தேனினும்தீதம முரியினுப்பு
திருத்தமாய் பலமோரு யிடைதான்
செய்கை வாசனையால் புளியெனும்லவணம்
செழுஞ் சுடருப்பதாம் பாரை
உளிக்கடங்காது கல்லுப்பு லவணம்

ஒருபலம் வகைக்கு மேசமனாய்
யுருவிது பிர்மாவிஷ்ணு ருத்திரனும்
ஒன்றதாய் குழிக்கல்லி லடக்கி
விழிமடமாது வழலையைத் துதித்து
வெடியுப்பின் செயநீர் விட்டதனை
விடாமலு மொருநாள்
இணைவிடாமலுமே விகர்ப்பம்
வாறாம லாட்டிடுமே. 134

விகற்பம் வாராம லிடைவிடாததனை
மிகவென மயனமதாக்கி
மெழகெனும்வரு தலுகமையதாக
மென்மேல தாயாட்டியே வழித்து
புகலிறா வட்டம் மெழுகையுமெடுத்து
புனிதமாய் ரவிமுகந் தாக்கி
புனல்சொறிந்திடவும் கனல்படத் தணியில்
யுகழவும் வைத்தொருவாரம் யகமகிழ்ந்தருளும்
யகத்தியரருள்தன் யருள்மலர்முத பொற்கமலம்
யர்ச்சனை புரிந்து யகலதிலடக்கி
அவ்வகல்வகலது மூடியிக பரகெதியில்
அகிலமும் புகழுமிதுக்கு மண்சீலையுமேழு
யிசைந்து சந்திகழா பிறவியிலுணர்ந்து
யெடுத்துகுக்கிடத் தினியம்பே 135

## சுன்ன ஜெயநீர்

இயல்புடம்புகட்டி எடுத்துவகலாற்றி
யிதர்க்குள்ள சுன்னம் பார்த்திடிலும்
எளிதல்ல முப்பு வுலகத்தோரரிய
யெறப்பிறப்பது பிரிந்திடிலும்
சயலதுமறிய தந்தையின் விதியால்
தவப்பய னரிவதுங் கடினம்
சார்த்திரமாரும் வேதனால்
மறையும்தத்துவ மாய்ந்ததுமேகடினம்
குயில்மடமாது கொங்கை மின்னாளர்
கொஞ்சும் வஞ்சியெனும் வாளை
தோகையம்பிகைப் பெண்ணமிர்த
பொற்கமலங் குறித்துடன் தொழுது

அர்ச்சனையெய் மயில்மலர் சூழும்
மறகதபச்சை வழலையெண்டிது
சுன்னமெடுத்து மதிமலர்சூடி
வலித்திடுங்கும்பி வசமதுள்ளடக்கி வைபதனம். 136

பதனமென்றதனில் பலமொரு யிடைகாண்
பாச்சிடுங் குளிக்கல்லில் பதமாய்
பரங்கிவைப்பது நவாசாரமந்திடைதான்
பச்சை கர்ப்பூர மந்திடைதான்
மசனசவ்வாது கஸ்தூரியும் புனுகும்
மயிலனிரமது வண்டுபசமை
வறாகனொன்றதுவே வகையதை சமனாய்
வழலையுப்புய முறியின்சாரம்
சுதனருளாவின் கோறோசனை யதுவுஞ்
சூட்டிடு மயனம தாக்கி
சுயவசீகரமாந் தூய்ய வெண்பீங்கான்
தொடுத்ததிர் பனியில் வைத்தினியார்
உதகமென்றி ரதஞ் சயில் திறாவகமா
முன்னித செயநீர் சுத்தவமிர்தம்
ஓரிரு மூன்றுநா ளறினமதிநீறு
கைமாய்க்குப்பியி லுணர்ந்தே. 137

உணர்ந்து வுன்னிதமால் ஜலமெலா
மெடுத்துவொன்று மில்லாமலு முகமை
வுருவரிந்துசித மருவிதமரியத்
தொடனொரு பாத்திரமதனில்
கணல்சொறிந்திடவும் சவ்வீரம்
நால்களஞ்சி தனைபொடித் தகமையதாக்கி
தனிறலி வாலை தம்பனமது
வேதவப் பயனாகவும் கதிரில்
குணவிசிதமதாய் பாவினைப் பதமாய்
குறித்திடில் முருக்கம் பூவதுபோல்
குருமுனியருளால் ஒருதின மதனில்
கொடிய சுன்னமதாய் விளங்கும்
இணையிலா வதீத வழலையென்றிதுவாம்
மெட்டெட்டே பருவத்தினாலும்
மீறியேபொருமல் குளிகை சாரணைக்கு
மிகப்பளிங்கது நிறவெளுரே. 138

வெளுத்து நீறாதல் மதமரிந்தியல்பு
வெண்மதிகுப்பி லுணர்த்தி
வெகுபதனமதாய் அடக்கம் வைத்துடனே
வேதாந்தியாய்ப் புனிதனில்
இயன்றுபழுத்த அஞ்செழுத்தாய்
அமுரியிலுணர்ந்த பழப்புளிமூலமென்
றெழுத்தால் பராபரன் பரையு
மிருவகை யதனில் பாச்சிடும் வழலையுங்கடுகு
மெழுத்ததற் கியங்கி யின்பமாங்
கனிகொண்டடன் சாணுடல் வலுத்து
வச்சிரமாய் யிருவகை யெழுத்தா
யியங்குதலதிதமினி யுரைத்தட விளங்கறிய
தளதளத் தசைதல் பிறஞ்சுவாய்
உந்தனணைத் தானொருவழி
தனித்தல் சதுர்மறைவேத
சுயப்பிரகாச சைதன்னிய தேகமீதாமே. 139

## நாலாமாண்டு

தேகமெண்சாணுஞ் செழுமையதாகிச்
செழுங்கனல் கதிர்மதி சூழ்ந்து
செடலமதீத முயிருடன் வலுத்து
சிவகெங்கை நதியென வியன்று
யேகமென்றமுரி ஆண்மூன்றதுபின்
நிருவிதக் காரமுஞ் சாரம்
இரதமெறாருகரை பிரண்டொடி
நிடம்வலஞ் சந்திர சூரியனும்
புகழ்சது றாண்டுமுதல் படிகடந்து
பூரணரவிமதி சேர்ந்து பூதாதிஐந்தொன்றாய்
பிறிதீவியின் மூலம் பிராணவாய்வது
புகழ்ந்திருந்து முகனையதாகி
அகண்ட தாரையிலும்
முனைசுழியிலாட பின்னுமாவா
முச்சந்தி விடுமதி ரவிபிட
முலாபிய தாரையிலூதே. 140

## யோகதாரனை

ஊதிடுத்தாரை யகண்டதோர் வாசி
வுலாவிய வுஉவழினேசம்
உறக்கம்நித்திரைபோய் சோம்பல் வீம்பலும்போய்
உடல்தொண் ணீற்றாருமே
விட்டவிடஞ் சோதியின் பெருமை
யகார காரணத்தில்
தினமொரு காலையுமாலை திருத்தமாயூதீ
ஓங்கார காரணத்தால்
தியானம்வைத் திருகடிகையு மாயோதி
யூதிடுவா யகாரகாரணத்தி லுகாறமாங்
கற்பத்தை மறவா உவ்வெனும்
அவ்விலுயி ரெழுத்தாட்ட
முடலுயி றொன்றதாய் போச்சு
சோதியென்றமுறிசுழிமூலப் புளியுஞ்
சுகாதீத கற்பத்திருந்து தாங்கிடும்வாசி
நாசியிலணுகா சொக்கிடாமலுங் கண்டத்தூதே. 141

கண்ட தாரையினி லூதிடும்வாசி
கபாலத்தின் வழியதாய்ச் சென்று
கருவலமாய்ச் சூழ்ந்து பின்னிடமாய்
கருதிவைத்தது வொருகடிகை
அண்டமும் வலமாய் ஆறாதனையதுசெய்
தாக்கினை யிடகலை புரிந்து
அசவு மென்மேலாய் யடிபணிந்தருளி
அதுவொரு கடிகை தான்செபிக்க
மண்டல முழுதும் பிரகாரத்தின்விசிதம்
மணிவிக்கதிக சோதியினில்
மதியிருந்தோருமை கடவுளினருமை
வாசிநின்றாடிய னேசம்
சண்யினுமணுகாண் நமனென்பதேது
சாத்தியமசாத்தி யமுமேது
சதாசிவப்பகவான் நடனஞ் செய்திருப்பார்
சாயுச்சிய பதவியுமாமே. 142

பதவியும்நாலு கடந்தகத் தீசர்
பாதசொற்கமல பங்கயத்தில்
பணிந்திரு பாதமலர் மணிவாசல்
பற்ப்பம் நீராடிய நதியில்
முதலிருமூன்று நான்கு திட்டையுமாய்
முத்தியுஞ் சித்திபெற்றுயன்று
மும்மூலச்சுழியில் முனையில் நின்றாடி
முப்பாழுக் கப்புரந்தாண்டி
யிதமஞ்சுகாய கற்பமஞ்சாண்டு
விடுமுப்புவழலை யுப்பணுகு
விளங்குவதெதற்கு கருதொட்டுபிரும்ப
விசிதமா யருசுவைவயத்த
மதனமாமவுனவஸ்து பேரின்ப
மதிவிளங்கி யறவியிரண்டு
மாறிமாறிடவும் வயல்தானுரு
மாத்துமஞ்சாவ தஞ்சாண்டே. 143

**வேறு**

ஆண்டுமின்னூற்று னாட்கழிந்திடில்
வேண்டுஞான விதித்தகற்பத்தினால்
மூன்றுமாறமுப் பாழுநீறாகிடும்
மாண்டுபோவதும் வையத்திலில்லையே. 144

வையத்தாசை மயக்கமற்றோர்களுக்
கெய்வதென்னக் கிலேசமொன்றில்லைபார்
துய்யவெண்மதி சோமநீர்சூட்சமே
அய்யமேது யஞ்சாச்சுதுமாத்துமே. 145

**வேறு**

மாத்துமஞ்செனிலும் மறுபடாதேகம்
வாசியும் வசமதாய்வழங்கும்
வளர்பிறைமதியால் மவுனம்வந்தெய்தும்
வாருதியுவறது விலங்கும்
சாத்தியஞானக் கவியிருனூரு
சங்கையுமாய்ந்திடும் புனிதர்
தன்னுக்குள் விளங்குஞ் சைதன்னியக்கருவை
தரணிமானிடர்களி லொருவன்

பத்திரவானாய் பனிரெண்டாண்டடுத்து
பலபலநூல்களும் படித்து
பரிதியென்றறிந்து மதியுரவாகிப்
பானமேகெதியெனப் பணிந்து
கார்த்துசர்க்குரு வின்னதுக்கிரகம்புரிந்து
கதிரவனெனு மதியளவால்
கற்பசாதனையில் காயமும்வலுத்து
கடவுளின் சிற்றிப்பெத்தனமே. 146

சித்தராய்ஜெனனமெடுத்து மெஞ்ஞானஞ்
செகத்தினிலுதிரமுன் கருவில்
தெளிந்தன்னை கற்பக்குழி தனிவிந்து
செனிக்குஞ்செவ்வித மன்னாட்பருவம்
வித்துபாய்ந்துதித்து நாதஞ்சேர்ந்துணர்ந்த
வேதசாஸ்திர யோகதீட்சையால்
விந்துனாதமுஞ்சேர்ந்த மிசையின்னவால்
விவேகம்வந்திடுமென வறியார்
சுத்ததிதமதிரவியுணர்ந்த துறாதுரத்குழியதில்
பொருத்தஞ்சூட்சமா றரிவதரிதரிதமுரி
சுயசுத்த ஞானபேரின்பம்
முத்தமிழுணர்ந்த அகத்தியமுனியால்
முறைதவறாமலுமுலகில் மொழியவாருதியின்
கடலுவர்நீங்கி முத்தியுஞ்சித்திபெத்தனரே. 147

பெற்றபேறதிர கற்பசாதனையை
பேசுவதெளிதெல்ல பேசார்
பேரின்மக்கடலில் மூழ்கியக்கறையில்
பெரும்பதியடந்தப் பண்போர்கள்
சித்தர்களுயர்ந்த மதிவளரபானம்
சிரஞ்சீவிபதவில் தெளிய
தேகசித்ததிமஞ்சாண்டு வுற்பகமே
செயம்பெறக் கற்பமுண்டறவை
நிற்றதிகாலை மதியில்முப்பதிதம்
நிகழ்ந்திடுங் கடுகளவெனினும்
நீங்கிடாமலுமே னெறியில்னின்றுயர்ந்து
நெஞ்சகமெனு மிடைகலகொண்டுற்று

வாசியதை பின்கலைக்கருதி
வுயர்ந்திலகிய சுழிமூலம்
வுகமைகண்டுதிப்பிராண வாய்வதனை
உம்மென்றுனோக்கி உச்சகமே. 148

## வேறு

உச்சிக்கீழ்பின் வுண்ணாக்கின்மேல்
பத்தீபம் பச்சைமாணிக்கம்பாரும்
பிரகாசமும் வச்சிரமாளிகைவைத்தப்
பொருளெனும் றட்சகனிருந்துச்சிதம்பாருமே. 149

மேலாதார மிருப்பிடம்வாசிதான்
தூலமாவதில் சூட்சமிருப்பிடம்
ஆலகால யமிர்தசஞ்சீவியும்
கோலமிவ்வாரு குறிப்பரிந்தூதுமே. 150

ஊதுந்தாரைவோ ரஞ்சதுவாண்டினில்
நாதவிந்து நடத்தையில்வாரினால்
வேதசாறம் வெண்சாரைப்பிரபல்லியம்
வாதவித்தை வசியமதாகுமே. 151

வசியவாவென வங்குசிங்கென்றுபின்
விஜயராஜ யோகஞ்செய்விதிப்படி
திசையெனுக்கலைவாய்வு வொன்றாகிடில்
தசையெனும் உருவந்தானும் ஒன்றாகுமே. 152

ஒன்றேயெழுபத் தீறாயிரம்நாடியி
லென்றேயிருபத்தோ றாயிரத்தருனூறு
வுண்டேயுதித்திடு மொடுங்கலையெனும்
நன்றேயொருமித்து நாடுமவதே. 153

நாடிஓமென் றொரு கடிகைப்பதம்
ஓடிடும் நவத்துவாரம்
ஓடாமலும் மேடியவாசியிழுத்து
மேல்நோக்கிடயாடி யண்டரண்டங்களுலாவுமே. 154

அண்டம்புக்கும் அழுத்தினால்வாசியை
தெண்டிரைக்கடல் திசையெட்டுலகெலாஞ்
சென்றுமேவித் திருநடனம்புரிந்
தென்றுமின்று மிவர்க்கொருநாழியே. 155

## ஆறாமாண்டு

நாதவிந்து நளினமாறாண்டுபார்
சூதவித்தை சூட்ச தேசியுமாவர்காண்
பூதமைந்து புகழ்ந்திருந்தேவிடம்
சாதனஞ்செய் ததனையறியார்களே. 156

விந்துதித்த விதமறியாமலும்
மைந்தறான வகைதெளியாமலும்
கந்தைசுத்திய காமக்குழியினி
லிந்திரியம் விட்டெங்கடிந்தரே. 157

மடிந்திடாமலும் மாய்கையகத்திடர்
நடந்துமுப்பா ழதுகடந்தேரிடா
நுடந்துயோனி யுல்லாசமறந்திடா
நடத்துவாசி னதிகண்டுலாவரே. 158

உவ்வும்அவ்வும் வுடலுயிரட் சரம்
மவ்வும்நவ்வும் மதிரவியாகிடில்
சிவ்வுவவ்வுஞ் செழுங்கனல்வாயுதான்
யவ்வும்வொவ்வு மகாரத்திலஞ்சதே. 159

அஞ்சுகூடி யமைத்தபிரபல்லியம்
பஞ்சபூதம் படைத்துப்பலனறி
நெஞ்சரிந்து நிலைத்து நின்வாசியை
யஞ்சிமூன்றி லடக்கவல்லார்களே. 160

அஞ்சுமூன்றும் அகாரவுகாரமாய்
பஞ்சதாதுப் படைத்துப்பரமதாம்
நெஞ்சில்நின்று நினைத்தபொருளறிந்
துஞ்சிடாமல் துரிதமாயூ திடே. 161

ஊதவூதவுன் னுக்குள்பிரகாசமே
நாதவிந்து நடத்தையரிந்திடில்
வாதசித்தி வருமாருயாண்டினில்
பேதம்வாறாப் பெருவெளிமூலமே. 162

மூலாதார முனைச்சுழிநிர்மல
வாலைகுண்டலி வச்சிரக்குகையினிற்.
ஞாலவாசி நகாரம்பிரிதீவியில்
தூலனாடி துடர்ந்துமுள்ளைப்பதே. 163

துடர்ந்துநாடியில் சோதிப்பிரகாசமே
நடந்துவாசி நயனங்கீழ் வாசியிற்
படர்ந்துபன்னி ரெண்டுமீரெட்டுமாய்
கடர்ந்துசோமன் கதிரவனாகுமே. 164

கதிர்முனைச்சுழி காரத்தைப்பற்றிடும்
மதிரவிமலம் வாருதியாகிடும்
விதியிருந்து விளக்கிடும்வாசியும்
துதியுஞ்ஞானச் சுகாதீதம்பாருமே. 165

## ஏழாமாண்டு

துதியுமாரு சுகங்கண்டுயேரிநில்
நதியின்மூலம் நளினமொன்றாகியே
நிதியுமுப்பு நிருத்துக்கடுகுவை
கதியுங்கற்பங் காலைமாலையுண்டிடே. 166

உண்ணவுண்ண வுனக்குள்பிரகாசமே
யெண்ணுமுண்ண யெட்டெட்டுமறியலாம்
பண்ணுநூல்மறை பாழையீரெட்டதும்
மண்ணுவிண்ணும் மருவிநின்றாடுமே. 167

மருவவும்மதி மாய்கையகத்திடும்
வுருவரிந்துட லுன்னுடல்காண்கிலார்
திருவரிந்து செகச்சாலமாடலாம்
குருவரிந்து குளிகைசெய்வோர்களே. 168

குளிகையென்ன குருவென்னவாசிதான்
வளியறியார் வழலைப்பெருமைதான்
அழிவதில்லை யகாரவுகாரமாங்
கருவதுண்டோர் கருவரியார்களே. 169

கண்டபேர்சிலர் கண்டுங்காணார்சிலர்
வுண்டபேர்சிலர் வுண்டுமுண்ணார்சிலர்
வென்றபேர்சிலர் வேண்டும்வேண்டார்சிலர்
வண்டபிண்ட மறிந்தறியார்களே. 170

அறிதல்வாத வயித்தியஞ்சித்தியாம்
குறியும்யோகக் குளிகைசித்தாவதும்
நெறியும்ஞானம் நிலைத்திடுந்தத்துவம்
பிறியமாஞ்செகப் பெண்மயல் தள்ளிடே. 171

மாயசித்தி மர்ப்பசெனங்களும்
ஓயாவாசியி லூதிடுஞ்சாயலும்
தோயவெண்மதி சோதிவிருட்சமும்
சாயாவிருட்சமுந் தன்னுக்குளறிவதே. 172

தன்னைத்தானே சாதித்துவுண்டோர்கள்
யன்னைதன்னு ளறிந்தமுதூட்டுவாள்
உன்னுள்ளுகந்துனின் றாடிடும்வாறினில்
முன்னமேமொழிந் தூதிடும்வாசியே. 173

வாசினின்று வளர்பிறையானதால்
மாசிலாமதி மாலின்மயத்தினால்
காசியோர்கடி கைக்குள்ளே போகலாம்
நாசியினுணி னாடித்துதித்திடே. 174

## எட்டாமாண்டு

நாடுங்கற்பம் நயந்திருரூனாலினில்
ஆடுங்காயமைங் காயமுஞ்சித்தியாம்
சாடுமாறணத் தயிலமிறக்கலாந்
தேடுமூலப் புளியின்செயலதே. 175

செய்கைமூலப் புளிச்சுன்னங்காரனீர்
வைகையதாமதி வாருதிநீர்சலம்
வெய்கையாஞ்செய நீரைவிட்டப்பதம்
பையச்சாடிப் பகர்வதரிந்திடே. 176

அருசுவைசெய நீரதுகொண்டபின்
மருபடாமல் மதியைவிட்டாட்டியே
குருகவும்புன்னைக் காயளவாகிடில்
இருதயத்தினில் மேலும்விளங்கிடே. 177

மேலதாகிவிளங்கிடும் காலைதான்
வாலையாய்வடி வாகும்வயதெனும்
மாலையில்வித மாரீவருகையில்
தூலசூட்ச சுகாதீதங்காணுமே. 178

காணும்யோகக் கருத்தரிந் தூதிட
தோணுஞ்ஞானச் சுயம்புலிங்கேசரே
தூணுமே துரும்பாகிடுந் தூணதாம்
வேணுமுப்பு விரிம்பிடுங் கற்பமே. 179

கற்பசாதனை கைவசமாகிடில்
அற்பதேகமது வஜ்ஜிர தூணதாம்
தற்பதாபர சங்கை யறிவதும்
சொர்ப்பமல்ல சுடரொளி சூட்சமே. 180

சுடரனந்தசிவ சூட்சசடாதாரம்
உடனறந்துயோக சாதனையிப்படி
நடனபொற் கமலாயஞ்
சூழ்மதி கடவுளின்பத காட்சியைப்பாருமே. 181

பார்க்கப்பார்க்கப் பரபிர்மம் சொருபமாய்
கார்க்க சற்குரு கற்பமெட்டாண்டினில்
பூர்க்குமாத்து புகழிரு நாலதாம்
யார்க்குந்தோணா ததிசயமாகுமே. 182

## ஒன்பதாமாண்டு

அதிதவாசியறிந் தொன்பதாண்டினில்
விதிமறைப்படி மேல்கண்ட தாரையில்
மதிமலர்த் திருமாலின் தெரிசனம்
கெதிபெருஞ் சிவகெவனங் கொண்டேருவாம். 183

கெவனவாசி வாவாவெனக்கேசரி
மவுனங்கொண்டு மதியமுர்தமுணர்
புவனம் பாயப்புகழ் கண்டதாரையில்
கவனமாய்க் கருத்தங்கனே காருமே. 184

காருமே கலையாமலும் வாசிதான்
பாருமே ரத்னம் பார்க்கப்பழக்கமாய்
நீருமேனிலைத் தொன்பதுஞ் சென்றதால்
சீருஞான சிவசத்தியின் கூறதே. 185

சத்துசித்தஞ் செகசற்வ லோகாதீதம்
சித்திபெற்ற தசைதீட்சை யாவறாய்
வெத்தியோக மெஞ்ஞான வசியமாம்
சுத்தவானாய் சுகம்பெருவார்களே. 186

## பத்தாமாண்டு

சூகாதீத மெனுஞ் சூட்சக்கருவரிந்
தாகாசபரியந்த மஷ்ட சித்தாடுவான்
நுகாந்தகாலமொரு கோடினாள்வரை
யேகாந்த மாயிருந்த தீட்சைபோற்றுவாம். 187

தீட்சை பத்துமுயர் திரேகம் வலுத்தது
மோட்சசுகாதீத முப்பாழுங் கண்டது
சாட்சியின் னூல் சகலமொழிந்தது
காட்சிபெத்து கனம் பெருவார்களே. 188

## மூலிகைகளாக

பெற்றபேற் பிறவி யொழிந்தது
பத்துமாத்துப் பசும்பொன் விளைந்தது
உத்துப்பார்க்க வுருவெளி யாச்சுது
சித்தரான செயலறிந்தோ துவாம். 189

ஓதுஞ்சித்த குலாவும் பொதிகையில்
சோதிவிருட்சஞ் சுணங்க விருக்ஷமும்
பூதவிருக்ஷம் பொற்கள்ளி பொற்றாமரை
வாதமூலி வளர்கரு நொச்சியே. 190

கருதுஞ் செந்துறா கற்றாழையில்செழும்
பெருதுவெண்சுத்தி பின்னுங்கையான் கரு
அருதுநிலக் கொடிவேலி பொற்சித்தியும்
துரிதவெண் கண்டங்கத் திரிதோணுமே. 191.

தோணுஞ் செங்கள்ளி செல்கொடிவேலியும்
காணுங்கருத்து கதிர்மூலிலையுடன்
பூணும்ரோம புகழும் விருட்சமும்
யீணுங்கதலி யிதுகருப்பாகுமே. 192

கறியயாம்பல் கருப்புயா தண்டையும்
பிரியசெங்கோவை பிலத்ததிகைப் பூடும்
வறியதோர் நிலப்புற னடிகருநெல்லி
யறியதோர்யமு கண்ணிவிருட்சமே. 193

## வேறு

தோர்த்துந்தோத்தாத் தொழுகண்ணி விருட்சமும்
சாத்துஞ்சாய விருட்சத்தின் னேர்மையும்
பார்த்தப்பேர்கள் பறியேம கற்பமாம் . . .
கார்த்தெடுங்காய சித்திக்குகந்ததே. 194

காயசித்திக்குகந் திருவத்தேழும்
கற்பமுண்டுதச வாண்டு சென்றபின்
தூயமூலியொவ் வொன்றொரு பட்சமும்
சுத்தமாகச் சமூலமுஞ் சூரணந்
நேயமாயிரு காலையு மாலையும்
நின்றுமே பனங்கற்கண்டு பத்துக்கொண்
றாய்சேர்த்து அதனைவுட் கொள்ளவும்
ஆனபின்னதின் ஆட்டமே பாருமே. 195

## வேறு

பாருஞ்சோதி விருக்ஷத்தின் பாலதை
நீருமேபலம் நேரிடையஞ்சதாம்
வாருபீங்கானதி லிட்டுணர்வதாய்
தீருமம்பிகை சீர்பாதம் போற்றுவாம். 196

போற்றுவாய் தொழுதம்பிகைபாதமே
யேற்றுவாசி யிடைபின் கலையதில்
மாத்தியூதி வங்கென் றிருத்தியே
பாத்திடும்பறை பாதம் பணிந்திடே. 197

பாதம்பணிந்து பால்பாகமாய் கொண்டிடு
வாதமென்பத்தினால் வாருதி புக்கிடும்
ஓதும்பித்தம் வொளித்துநாற் புத்திரெண்
டேதுசேத்தும மிருபத் தொன்றேகும். 198

எழுபத்திறாயிர னாடினரம்பதும்
அழிந்தியே யமதுபோலிரிகிடும்
விழுந்திடுஞ்செடம் மென்மேலுமழுந்திடும்
எழுந்துபோம்வினை யிருவினை யில்லையே. 199

இல்லையே நமனிம்பாலு ணர்ந்திடில்
தொல்லையில்லாச் சேரவிருக்ஷத்தின்கீழ்
கல்லுமேகறி டில்லாச் சுபஸ்தமாய்
வல்லாமல்வஸ்திர மடித்ததின் மேலேறே. 200

இருந்துமேல் படுத்தினியுன் மனிதனாய்
பருத்திப்பாச்சிப் பயர்பச்சரிசியும்
அருந்தவமரியா தோருனிண்ணயம்
பொருந்தீயாகாப் பிழைவறாக்காச்சுமே. 201

வாதப்பித்த சிலேத்தும சுரமது
தாதுபத்தி சடத்தில் சுவாலையாம்
காதடைத்து காந்தி செழுமையாம்
சேதம்வாறாச் செவியுமடைக்குமே. 202

மேலுமுச்சி யிருபுருவம் நடுமாலும்
நெஞ்சுவதின் கீழ் மார்மய்யமும்
ஒலதின்கீழ் நடுமையம்னாபியில்
சூலைகட்டி சுர தோஷந் தோன்றுமே. 203

தோன்றிடுஞ்சட மாதிதஞ் சூழ்ந்திடில்
நின்றிடம்நெடு சங்குப் பழமதாய்
மூன்றிடுமூன்றே முக்காலதுகடி
தாண்டிடாமல் சலசஞ்சு யூட்டே. 204

தாண்டிடாதிரு தாளைப் பிடித்திடும்
வேண்டிதந்தமும் மேல்கீழ் வொண்ணாகிடும்
தாண்டிக்கிட்டித் துடர்ந்தாள்
வாங்கிபின் நூண்டியோர் படியூட்டியுபாயமே. 205

ஊட்டிப்பார்க்க வுடைந்தே கட்டிகட்
காட்டிலேகுங் கனதுர்க்க வாசமாய்
மேட்டியாயுடல் மேலாஞ் சவுக்கியம்
நாட்டியே னாகத் தாளியறைத்திடே. 206

தாளியான தழையை யரைத்துடன்
கோளில்லால் குழைத்துச் செடமெல்லாம்
பாழில்லாமல் பதமாய் நதிதனில்
நாளில்லாமல் நயந்து குழித்திடே. 207

நயந்து யிவ்விதம்நாடினால் திரேகமும்
மயமுங்காயமா யாசித்தியாவறாய்
பயமும்நீங்கும் பதினாலு லோகமும்
நியமதாகி நிலவொளி யாகுமே. 208

நிலவுபோல்விழி நீண்டொளி வாகிடும்
துலவுயஞ்சனஞ் சோதிப் பிரகாசமாய்
வலுவதாகிடும் வாதவசியமும்
கொலுவதாய்பரை கொஞ்சுவாள் நெஞ்சமே. 209

பத்துமாத்துப் பரியேமத் தேகமாம்
சுத்தஞானச் சுடரொளித் தீபங்காண்
அத்தனபாத மனுதினம் போற்றியே.
யித்தலத்தி லென்னாளுமிருப்பரே. 210

எண்சாண்தேக மெழுகுவச் சிரமதாம்
உண்மூல மூலாக்கினை மீறிடும்
மண்ணும்விண்ணும் வளர்பிறை யாதலால்
யண்ணலாதி யன்பதம் போற்றுவாம். 211

வாசஞ்செய்தல் மதிரவி கற்பினை
நேசம்பூரணம் நேர்மை நெறிகளால்
பூசிதப்பறி பொன்சொரூபங்களை
வாசினாமய மாற்றமறிவரே. 212

மாறிமாறி வசியஞ் செய்வாசியா
லேறியேறி யிடைகலை பிங்கலை
மீடுமீறிமென் மேலுஞ் சுழிதனில்
வீறிவீறி விளங்குவதென்பதே. 213

தென்பொதிகையின் தெட்சணா மூர்த்தியால்
யன்பனான யடியனறிய னவின்றமொழிதனை
பொன்போலும் புலத்தீசர் வழங்கிய
யின்பஞானம் யிருனூர தீதமே. 214

அதீதசோதி விருட்சமப் பாலினில்
விதியதாகயினி மேலுமுரைப்படி
பதியதாய்ப்பரம் பத்து பத்தாயிசை
மதியிறங்கல் மார்க்கம தாகுமே. 215

மார்க்கமாய் மதிப் பாலுமேல்கீழதாய்
தீர்க்கமா யதிகட் டாமலேமுட்டியே
சேர்க்கையாகத் தெளிந்தகீழுடன் பூர்க்க
செந்தணல் பொட்டெடுத் தாத்துமே. 216

ஆத்திடும்பாதம் அய்யஞ்சு மாச்சதாம்
சூத்திரமாகுஞ் சுணங்கன் விருட்சப்பால்
போற்றிடும்முன் புகழ்ந்த செய்கைதான்
மாத்ததீத மயமென்ன பாருமே. 217

மயமதீதம் வசனித்த மூலிகள்
சுயமதாகிடுஞ் சூட்சனூ லாயிரம்
நியமதென்பொருள் நேரறிந் தோதினோம்
செயலதீதம் சித்தாடலாம் பார்த்திடே. 218

ஆட்டுமூலி யஷ்டமா சித்ததும்
தேடிமின்னூல் செகத்திலரி தெனும்
நாடினால்வேதை நாங்களருளிய
கோடிக்கொன்று குவலயத்தோர்களே. 219

கோடாகோடி குருமுனி வாக்கியம்
தேடித்தேடித் தியங்கினார் மாணுக்காள்
நாடிநாடி நயந்து ருவாகிய
மேட்டாமேட்டி மிகுந்த யின்னூலிதே. 220

இன்னாற்கற்ப மிருனூற்றிருபதும்
முன்னாமமுடிந் தாயிரம்யன்னூர்
தனமே யருளம்பிகை பொற்பதம்
சொன்னஞானச் சுருக்க முடிந்ததே. 221

சுருக்குஞான சுகாதீத சூத்திரம்
பெருக்கவாழி பிறாணாலயஞ் சூழ்நகர்
குருக்காசான் குருமுனி தன்பதம்
யுருக்கமாயுட லுற்பகம் வாழ்த்துவாம். 222

**புலஸ்தியர் விளக்கிய ஞானகற்பம் 222**

முற்றுப்பெற்றது

உ

கடவுள் துணை

திருவள்ளுவ நாயனா ரருளிச்செய்த

# பரிமுப்பு சூத்திரம்-30

சீர்சிறந்த குணமகமேர் தன்னிலுள்ள
செழுங்கமல வினாயகரைப் பணிந்துபேற்றி
கார்புகழ் பிர்மருத்திரன் மாலின்பாதம்
கருத்திலே யென்னாளும் கருதிப்போற்றி
பூரணியா மெந்தாயார் வாலைதேவி
பொன்னடியை சிரசதனில் பொரிந்துபோற்றி
வாரணத்தின் மேலேரும் மென்றநாதன்
வாழ்த்தியடி துதித்துயினி முப்புச்சொல்வேன். 1

சொல்லக் கேளிந்தநூல் யார்க்குங்கிட்டா
சிவயோகியா மாவருக்கும் மின்னூல்
கல்லிலே தேங்காயை யுடைத்தாப்போலே
கருதுகிறேன் முப்பதுக்குள் கருவையாய்ந்து
நல்லநினைவுள்ள மாணாக்கள் நீங்கள்
நாட்டாரோடி ணங்காதே தலத்தூக்கீனம்
பொல்லாங்கு செய்குணத்தை தவிர்த்துப்போடு
பொய்களவு பிறர்தாரம் பொண்ணுந்தள்ளே. 2

தள்ளடா நூல்பிரட்ட ரனேகருண்டு
தவராமல் பேசுவார் நூல்கள்கற்று
கள்ளர்களைக் கண்டாக்கால் கவிழ்ந்துகொண்டு
கண்ணெடுத்துப் பாராதே கருசொல்லாதே
வள்ளலடி மறவாதே மவுனயோகம்
வளர்பதியி லென்னாளும் வாழ்ந்துநில்லு
துள்ளாத முப்பதுவுங் கிடைத்ததென்று
துணிவாகப் பேசாதே துயர்வந்தெய்தும். 3

எய்தினால் கடைத்தேரமாட்டாயப்பா
யிகபரமாமிரண்டினுக்குந் துரோகியாவாய்
துய்யகுணந்தனைமீண்டு மோடிடாதே
சொன்னபடி நீயிருந்து தொழிலைப்பாரு
அய்யனருள் வந்தெய்தும் மஞ்ஞானமேகும்
அறுபத்து நாலுசித்துந் தானேயாடும்
பொய்யில்லை யாண்டையின்னூல் பராரியாணை
பூதலத்தி லெய்தவனே குணவானாமே. 4

ஆவதற்கு ஆயிரத்தைன்னூரில் சொன்னேன்
அரியும்படி பூநீரை யெடுத்துக்கொண்டு
தாவுவது காரமொன்று சாரம்நாலு
தனதாகத் தானறிந்து பாண்டத்திலிட்டு
மேவியே மூன்றுநாளான பின்பு....
விபரமாய்த் தெளிவிறுத்து தெளிவில்கேளு
தாவியே கந்தகமும் ரசமோடொக்க
தானரைத்துத் தெளிவுதனில் கொட்டிப்போடே. 5

போட்டாலு மின்னமுமே சரக்கைக்கேளு
புகழான துருசதுவும் வீரம்பூரம்
தேட்டான பாஷாணந் தாளகமோ டொக்க
சேர்த்துமே பொடித்தந்த தெளிவில்கொட்டி
வாட்டமாய் வாரமது வைத்துமூடி
வகையாக ஆதையிறுத்து வன்னிமூட்டி
காட்டாக ஜலமெல்லாந் தொக்குமாகில்
கனகமென்ற பீங்கானி லூற்றிப்போடே. 6

போடே நீ ரவியில்வைக்க வுப்பதாகும்
பொங்கமதா யுப்பெடுத்துப் பதனம்பண்ணு
காடமடக்கி மூடருடன் உரைசொல்லாதே
காட்டாதே யிப்பொருளைக் கருவாயெண்ணு
தேடாதே தேட்டிதுதான் வெளியில்சொன்னேன்
சிவன்மீதி லாணையப்பா செய்துபாரு
மாட்டேனென் றோடுமடா அறுபத்துநாலும்
வன்னியுண்டு ஜெயமாகும் வகைதான்பாரே. 7

பாரேநீ யிந்தவுப்பு யார்தான்செய்வார்
பாருலகில் ஆசையுள்ளோர் செய்வாரப்பா
கூறான குருமொழியைக் கூறிடாதே
கோஜ பீஜக்குறியைக் குணமாயாய்ந்து

சீராக் நூலதனைப் பூசைசெய்து
சிவயநம வக்ஷரத்தின் றன்மைகண்டு
பேர்பெறவே யுப்பைவிட்டு காரஞ்சொல்வேன்
பேசாதே வாதவுப்பு வயணங்கேளே. 8

கேளேநீ சாரமென்றால் நவசாரமல்ல
கெடியான வெண்காரம் வெடியுப்பல்ல
தானேநீ தேசாதி பாதமட்டும்
தனியாக வளர்ந்துதடா தண்ணீருக்குள்
கேளேநீ யுன்சடத்தி லுண்டுவுண்டு
கேட்டால்தான் கொடுப்பார்கள் கேள்விவேண்டும்
சாளான சிதம்பரத்தில் வளர்ந்தசாரம்
சடலமதி லிந்துப்பென் றிதற்குப்பேரே. 9

பேரதற்கு மாரியல்லோ யிந்துப்பென்பார்
பேசாதே யவரோடு வாதுவேண்டாம்
பாராதே யிவர்கள் முதற்பகையாயெண்ணு
பாடுபடா சண்டியென்று முறத்திற்றள்ளு
சீராய்க்கேள் சாரத்தை யறியவேண்டில்
சிவம்வேணும் தவம்வேணும் சிந்தைவேணும்
பேரான பெரும்பொருளைக் காணவேணும்
பேரின்ப வாழ்க்கையிலே நின்றிடாயே. 10

நின்றாக்கால் தன்னைத்தான றிவாயப்பா
நிர்வாணி வாலைப்பெண் ணிர்த்தஞ்செய்வாள்
குன்றான சாரந்தான் மண்ணிலுண்டாங்
குணமில்லா மாந்தர்களே கூறக்கேளு
சென்றான வெண்சாண் கள்ளையுண்டு
செகத்திலே யிதைகுடித்தால் வெறிமீளாது
குன்றான குவலையத்தி லானந்தக்கள்
குடித்தவனே மகத்தான சித்தனாமே. 11

ஆமென்று சொல்லுகிறே னதுயேதென்றால்
அடவான் வுன்னுடைய வுடலுக்குள்ளாம்
ஆமென்ற வாசமதாய்ப் பழுத்திருக்க
வளர்ந்துதடா வொழியாத அருவியாகி
தாமென்ற வுன்னுடைய தாளின்கீழாம்
தாரைகொண்டு யேகுது பாரமுரிதானும்
வாமென்ற தைப்பிடித்து மரக்காலெட்டு
மறவாமலதைவிட்டு வகையைக் கேளே. 12

கேளப்பா கடைச்சாரம் பலந்தானைந்து
கெடியான வெண்காரம் பலமுமைந்து
மாளப்பா விந்துமொரு பலந்தான்ரெண்டு
வகையாக யிடித்ததனை சாரத்தில்கொட்டி
மீளப்பா வாரமது வைத்துமூடி
விளம்புகிறேன் மைந்தாநான் தெளிவிருத்து
வாளப்பா வன்னியிட்டுக் குமரக்காய்ச்சி
வண்மையுடன் ரவிதனிலே யுலர்த்திடாயே. 13

உலர்த்தியேதான் குப்பிதனி லடைத்துக் கொண்டு
உத்தமிக்குப் பூசைசெய்து தாளிணையைப்போற்றி
மணர்ந்ததுதான் கர்ப்பூர வாசம்வீசும்
மனதடக்கிக் கொண்டாக்கால் வயதோநூறு
கனதனமாங் காரமுடன் சாரஞ்சொன்னேன்
கனிவான அண்டத்தை சொல்லக்கேளு
மணர்ந்ததொரு மண்ணுக்குள் வளர்ந்த அண்டம்
வன்னியுண்டு சலமுண்டு வார்த்தைமூன்றாம். 14

மூன்றாகி யொன்றாகிநின்ற அண்டம்
முப்பழமாய் சர்க்கரையா யமர்ந்த அண்டம்
குன்றாத கோபுரமாய் வளர்ந்த அண்டம்
குவலயத்தில் மூன்றுதிக்கு முதிக்குமண்டம்
சென்றான செண்டாகி முதித்த அண்டம்
செகஞ்சுமந்த ஆனைக்கல்லென்ற அண்டம்
ஒன்றாகி யெப்போது மழியாவண்டம்
ஏகாந்த சித்தருண்ண யினியதாமே. 15

தாமேதான் தானாகி முளைத்த அண்டம்
சண்டமாருத மெனும்சயில அண்டம்
வாமேதான் வான்கொழுந்தா யுதித்த அண்டம்
வாசமாய் கேசரமாய் நின்ற அண்டம்
சாமார்த்திய மல்லவப்பா யிந்தஅண்டம்
சமுசயமாய் பாடிவைத்தேன் பதினொன்றுக்குள்
சேமமாய்ச் சொன்னபடி பந்தஞ்செய்து.
தோண்டியெடு யிம்மொழியை மறந்திடாதே. 16

மறவாமல் கொண்டுவந்து வுரலிலிட்டு
மாவதுவா யிடித்ததனை யெடுத்துக்கொண்டு
திறவாமல் காரவுப்பை யதின்மேல்கொட்டி
திட்டமா மேல்சட்டியிட்டு சீலைசெய்து

இரவியில்வை மூன்றுநாள் காய்ந்தபின்பு
யியல்பெறவே தூபமிட்டு தீபங்காட்டி
தெரியாமல் புதைத்துவைப்பது மண்டலந்தான்
தேரியபின் பதையெடுத்து கல்வத்திட்டே. 17

இட்டுமே யரைக்கவொரு ஜெயநீர்கேளு
இரையாதே யிப்பொருளை வுன்னுள்வைத்து
திட்டமாய்ப் பண்ணைசெவ் வீரம்வாங்கி
திடஞ்சமனாய் நொச்சியிலை நாபியிந்து
வட்டமாய்ப் பொடித்ததனை பலமாய்மைந்தா
வாகாக அமுரிபடிஅரை வீசம்விட்டு
கெட்டியாய் பிசைந்துமே பீங்கானில்வைத்து
கெடியாகப் பனிதனிலே வைத்துப்போடே. 18

வைத்துமே வாரஞ்வென் றதையெடுத்து
வாகாக சீசாவில் பதனஞ்செய்து
சத்துவாய் சலுவத்தில் வைத்தமுப்பை
சதிராக விச்செயநீர் விட்டுஆட்டு
பத்தியாய் வாரமது அரைத்தெடுத்து
பரிவாக வில்லைசெய்து ரவியில்காய்ந்தால்
சித்தியா யன்பதெரு புடத்தில் தீரு
சீதளமா யாறியபின் னெடுத்திடாயே. 19

எடுத்துமே குப்பிதனில் பதனம்பண்ணு
ஏகாந்த அக்ஷரத்தை லக்ஷமோது
விடுத்துமே செம்பதுதான் பத்துக்கொன்று
வீசிப்பார் பத்தறையுந் தப்பாதப்பா
கடுத்துமே நீக்கிவிடு கல்லென்றேதான்
கருத்திலெண்ணு ஞானகற்ப யோகந்தன்னை
நடித்துமே அண்டரண்ட மயம்பொன்னாகும்.
நாடுமலை கல்மரங்கள் நிலம்பொன்னாகும். 20

பொன்னாகுங் கோடிவற யழியாமுப்பு
பொருளாய்ந்து பாடுபட்டோன் சித்தன்சித்தன்
என்னாளுமறிவுதனில் வளர்ந்து நிற்கும்
எம்பிரான்றான் முடித்த யேகமுப்பு
சொன்னேன்யான் சிவயோகி தனக்குக்கிட்டும்
சோரமில்லா நெஞ்சினர்க்கு சித்தியாகும்
என்னையிந்த முறையார்க்குங் கிட்டுங்கிட்டும்
எம்பிரானிட மறிந்தோர்க் கெய்துந்தானே. 21

தானேதான் சுத்தபத் தினியோடொக்க
தான்மருவு மற்றவரைத் தாயென்றெண்ணும்
மானென்ற மாந்தருக்கு மகாயோகிகட்கும்
மவுனமொடு யின்னூலை பார்ப்போருக்கும்
கோனான தானதருமம் குறைவில்லார்க்கும்
குற்றமது பாராட்டா குணத்தினோர்க்கும்
தேனேதானிக் குணத்தோர்க் கெய்துமின்னூல்
திருடருக்கு வொருநாளும் சித்தியன்றே. 22

அன்றேதான் செலவதிகஞ் செய்யவேண்டாம்
அண்ணாட மூன்றுபண மதிகமாகா
அன்றாடஞ் ஜெபதபங்கள் பக்தியோடும்
ஆத்மாவைக் கண்டறிந்து அசுவதாக
அன்றாடம் செய்தொழிற்கு மேலாகாது
அன்பர்களை யென்னாளும் மறக்கொணாது
அன்றாடம் பிழைக்கவென்று முப்பதுக்குள்
அடக்கிவைத்தேன் அடிமைசெய்து அடைவாய்வாங்கே. 23

வாங்குவா யாயிரத் தைன்னூருக்கும்
வகையான யெண்ணூர் அய்ன்னூர்முன்னூர்
பாங்கான வொருநூரு மன்பதும்பதினாரு
பதிவான முப்பதுவும் பதினொன்றுந்தான்
ஏங்காமலிதுவெல்லங் குறைவில்லாமல்
இவ்வுலகில்தான்கிடைத்தா லவனேநாயன்
பாங்கமாய்த் திரியாதே பழுதுமாகும்
பாடுபட்டால் பலனுண்டு பாரின்மீதே. 24

பாரின் மேலூனமில்லா பிறந்தபோது
பத்திமுத்தி வைராக்கியம் பண்ணவேண்டும்
கூறியேகுருவருளைத் தேடவேணும்
குருவறிந்து முன்கற்பங் கொள்ளவேணும்
தேறியேயோகத்தில் நின்றுகொண்டு
தெளிவான நூல்சுருதி செய்யவேணும்
வீரியமாய் ஞானபட்டை மேலணிந்து
வீதிசுத்தி வந்தவனென் பிள்ளையாமே. 25

ஆமேதானீரடியாய்ச் சொன்னவேதம்
அதுபோதும் ஞானத்தை யறிவோனுக்கு
காமேதான் காமனைத்தான் ஒழித்துப்போடு
கையதனிற் கனியெனவே கடவுள்நிற்பார்
சோமனென்ற நீரறிந்தோன் சுத்தசைவன்
சுத்தசலம்மறியாதோன் சுணங்கனாகும்
காமப்பால் கானற்பால் தணையருந்தி
கானகத்தில்தொழில்பாரு கடியசித்தி 26

சித்தியாம் முத்திபெற வைக்கும்நீரு
சீர்சிறந்ததாய்பதத்தில் வைக்கும்நீரு
வெத்தியாம் விளக்கொளியாய் நின்றநீரு
வேதாந்தவேதவொளி கண்டநீரு
சத்தியாய் சிவமாகித் தழைக்குநீரு
தாரணியெங்கும் நிறைந்து சமைந்தநீரு
புத்தியாய்ப் பூமலராய்ப் பழுத்தநீரு
பெண்மாயை தனையொழிக்கும் பிரமநீரே. 27

நீரிலேநீரறிந்தால் நிலைக்கும்வாதம்
நிலையான சிதம்பரமுங் காணலாகும்
காரிலே கார்பூத்து கறுத்துதோன்றும்
காருமென்ற பொருள்தானுங் கடியக்காட்டும்
சீரியதோர் நாகத்தை யாட்டலாகும்
திருடரென்ற நலச்சுடரைக் கொல்லலாகும்
வீரியத்தைத்தான் குலைத்துப் பேடியாக்கும்
விளையாடுங்குழந்தைகுணம் விளையுந்தானே. 28

தானானவிதுகளுக்கு ஆதியாக
தாய்தந்தையிரண்டெழுத்தைக் காணவேணும்
வீணாகத் திரியாதே வெளியுள்பாரு
வெண்மதியாம் வாசியென்ற சவாரிசெய்வாய்
ஏனோதான் வாழ்நாளை விருதாசெய்தாய்
என்மகனேயதையறிய நாளேயில்லை
சேனாருங்கலைநெய்தோர் செய்தபாதை
சுளுவுயிதின்படி செய்தால் சித்திகாண்பாய். 29

காணப்பா முப்பதுக்குள் கருவையெல்லாம்
காட்டினேன் பரிபாகைஷ கபடில்லாமல்
ஏனென்று பேசாதே மனைவியோடே
யிருந்தவனே யென்னுடைய பிறவியாகும்
தோணவே யிவ்வுலகில் யார்க்குக்கிட்டும்
தெள்ளமுர்தம் சொற்கடவா மாதுதேவி
வாணப்பாதவ முடித்தோன் தனக்குக்கிட்டும்
வழிதுறைகள் சுளுவாக முடித்தேன்தானே. 30

தானேதானிந்தவொரு நூலைத்தானும்
தனியாக வைத்துயிதை பூசைசெய்து
மானேதான் சிவயநமஓம் கிலியுமென்று
மனதிலே நீநினைக்க நாலும்பேசும்
கானேதானே.டாதே காமத்தியால்
கலங்காதே மலங்காதே காடேறாதே
வானேதான் பொருளிதென்று நீயும்வைத்து
வஞ்சனையில் லாமொழிமுப் பதுவுமுற்றே. 31

## திருவள்ளுவ நாயனார்

*முப்புசூத்திரம் முப்பதும்*

முற்றிற்று

உ

கடவுள் துணை

திருவள்ளுவ நாயனா ரருளிச்செய்த

# சூத்திரம் - 16

பூரணமாய் நின்றெழுந்த முதலேகாப்பு
புகழ்பெரிய அம்பிகைப்பெண் சித்தர்காப்பு
காரணமாங்காரசாரம் குருவேகாப்பு
கதிரொத்த சுழிமுனையாள் பாதம்காப்பு
வாரணமாம் ரவிமதியும் வழலைகாப்பு
வாக்கான சரஸ்பதியும் பிரமன்பாதம்
ஆரணமாம் லட்சுமிபெண் பாதத்தோடும்
அறுமுகனும் கணபதியும் ஆதிகாப்பே. 1

காப்பாகயென்கருத்துக் கிசைந்தமைந்தா
கருத்துள்ளயேலேல சிங்கமேகேள்
வாரப்பா மறைவான முப்புமார்க்கம்
வாரறியசொல்லுமென்றாய் பணிந்துகேட்பாய்
தேரப்பா சித்தரெல்லாம் பாடிவைத்த
தென்மகனேயறியவென்றால் நாளோயில்லை
ஆரப்பா அவருக்கும் அஞ்சிநானே
அறைகிறேன் சிந்தைவந்து அறிந்துகேளே. 2

கேளப்பா ஈரடியாய் வேதஞ்சொன்னேன்
கெடியாக யிவ்வுலகோர் பிழைக்கவேண்டி
கேளப்பா பரிபாஷைக் கூறில்லாமல்
கொட்டினேன் ஆயிரத்தியைந்நூற்றுக்குள்
தாளப்பா அதைக்குறுக்கி யெண்ணூறுசொன்னேன்
தயவாக வதைக்குறுக்கி யந்நூர்சொன்னேன்
மூளப்பா வதைக்குறுக்கி முந்நூர்சொன்னேன்
முக்கியமாயதைக் குறுக்கி நூறுஞ்சொன்னேன் 3

சொன்னேனேயிவைகளிலே விரிவாய்த்தானே
துய்யகுணமுள்ளதி.. சித்தர்சிங்கம்
பொன்னேயென் புத்திதனில் மிகுந்தபிள்ளாய்
பூரணமாய் முப்பதுக்குள் கருவையெல்லாம்

பன்னேன் பரிபாஷை பிழையில்லாமல்
பேதாதிபேதங்கள் பிழையில்லாமல்
பின்னேகேள் கோரக்கர் கமலர்பாதம்
பிரித்தல்லோ பாடுகிறேன் தமிழாய்த்தானே. 4

தானானவாதத்தின் முப்புகேளு
தலைகீழாய்பாடி வைத்தார் சித்தரெல்லாம்
யேனோதானுலகத்தோர் மழுங்கும்வண்ணம்
யேகமாய் பரிபாஷை யாகச்சொன்னார்
வானபிரானெனக் குறைத்த வண்மையாக
வஞ்சனைகளில்லாமல் சொல்லக்கேளு
காணாதகாரத்தின் பெருமைதன்னை
கண்காட்சியாகவேதான் காட்டுறேனே. 5

காரானவீரமென்றும் பச்சையென்றும்
கதிரென்றுங் கன்னியுட நாதமென்றும்
பேரானபிணமென்றும் குருவண்டென்றும்
பொற்பெறியகும்பக்கல் வழலையென்றும்
வாரானபுளியென்றும் சவ்வாதென்றும்
வகையாக ஐங்கோல வன்னியென்றும்
கூரானகோசமென்றும் குமரியென்றும்
குணமானநீர் மேல்நெருப் பென்றுந்தானே. 6

தானான சிலையென்றும் தாரையென்றும்
தற்பரையாம்சத்திசிவ தாயேயென்றும்
கோனான யானையென்றும் குதிரையென்றும்
கூறுவார் நாமங்கள் பேதாபேதம்
வீராகயிதனாலே மாந்தரெல்லாம்
வெவ்வேறாய்செய்தழிந்து விருதவானார்
வானான காரமென்றால் மண்தானப்பா
மண்ணிலே மகத்தான மண்தான்பாரே. 7

பாரேநீதைமாசி மீனம்மூன்றில்
பனிக்குமே சந்திரனில்விந்துவாலே
சீரேகேள்மண்தனிலே ஜலமேபாய்ந்து
சிக்கியதில் ரேசித்து ஜெனிக்குங்காலம்
வாமேதான் ரவிபடர்ந்து பூர்க்கும்பாரு
வானவர்கள் மெச்சுகின்ற வழலைமைந்தா
மீராமல்மெறியவிட்டு மூன்றாநாளும்
விடிந்ததொரு நாலானாள்ரவிக்குமுன்னே. 8

ரவிதானும் படுகாமுன் னதனைவாங்கி
நாதாந்த மூர்த்தியரைப் பணிந்தெடுத்து
கவியாதே இதற்குநிகர் வேறுமில்லை
சந்திரனைத் தரித்தசிவ மைந்தனார்க்கு
புவிமீதில் சொல்லிவிட்டேன் பூரம்தன்னை
புத்தியினால் செய்பாகம் அறிந்துகொண்டு
அழியாதசாரத்தின் னருமைதன்னை
அறைகுறேன் ஏலேலசிங்கமே யறிந்துகொள்ளே. 9

கொள்ளவே ஆதியிலே யுதித்தநாதம்
குணமானசுத்தசல மிதர்க்குப்பேறு
விள்ளவே வழலையென்றும் பச்சையென்றும்
வாகானவஸ்துவென்றும் தேன்பாலென்றும்
விள்ளுவார் அப்பென்றும் பனங்கள்ளென்றும்
விள்ளவே சாயவேர் சஞ்சீவியென்று
கள்ளான பாறையென்றும் விந்துவென்றும்
கானகத்துச்சாரையென்றும் பாடினாரே. 10

பாடினார்வெண்சாரை கருநெல்லியென்றும்
பதிவானகாசாம்வே ரென்றும்சொல்வார்
தேடினால் வெளிகளிலும் கிடையாதப்பா
தெள்ளமுதே வுன்மனதி லுண்டுதேறு
வாடாதேயண்டபிண்டம் நிறைந்துநிற்கும்
வகையானபனை மரமென் றதர்க்குப்பேறு
நாடிப்பாரந்தமர மெங்கும்நிற்கும்
நாடியானபாளைகொய்து நாட்டம்பாரே. 11

பாரேநீ பொதிகைமலை சார்பிலப்பா
பாங்காக நான்குபே ரதற்குமுண்டு
தேரேநீ மலையினுச்சி காடுமுண்டு
தெளிந்துனின்ற கீழ்வறையும்ரோமக்காடு
கூறேநீ ஐந்தெழுத்தை தழுவிநிர்க்கும்
குணமான அகாரமென்று மதற்குப்பேறு
வாரேநீ பீஜமென்று மதற்குப்பேறு
வகையான அகாரந்தான் ஐந்தெழுத்துமாமே. 12

ஆமப்பா காரமுடன் சாரம்சொன்னேன்
அதற்குயிரும் நிலைமூன்று மறியச்சொன்னேன்
காமப்பா அவைகளிட பேரும்சொன்னேன்
கருத்தறிய வந்தநிலை சூட்சம்சொன்னேன்
நாமப்பா மறைப்பெல்லாம் வெளியாய்ச்சொன்னேன்
நான்கண்ட பாகமிது வேறுமில்லை
காமப்பால் தனைஒழித்தோர்க் கெய்துமின்னூல்
கண்டுகொள் வுப்பெடுக்கக் கருதுவேனே. 13

கருதுவேன் காரமது வொன்றேயாகும்
கனிவான சாரமது காலதாகும்
உறுதியாஞ் சாரத்தி லதைக்கரைத்து
யுறவாக்கியதை நீயும்பதம்பண்ணு
கூரக்கேள் மூன்றாநாள் தெளிவிருத்து
கொம்பனையாள் கடைசரக்கு வீரம்பூரம்
தேறேநீ பொடித்ததிலே தூளைக்கொட்டி
சீராகமுன் போலத் தெளியவையே. 14

வைத்துமே மூன்றுநாள் தெளிவைவாங்கி
வாகாக அடுப்பேத்தி தீயைமூட்டு
நயந்துமே ஜெகமெல்லாம் கண்டபின்பு
நாயகமே பீங்கானில் வார்த்துப்போடு
பகத்தியில் ரவியில்வைக்க வுப்பதாகும்
பாங்காக யதையெடுத்துப் பதனம்பண்ணு
நித்தமுமே தாயேகா ரென்றுசொல்லி
நிலையாக்குப் பிதனி லடக்குவாயே. 15

அடைத்ததொரு கிருகண்ணாம் நாகம்வாங்கி
அதையிலுப்பெண்ணையால் சுத்திசெய்து
திடப்பட வேனாகமதை யுருக்கிமைந்தா
திப்பவே வுருக்குமுகம் கிராசம்செய்ய
வடுப்புடவே வுப்பெடுத்துக் கொடுத்துப்பாரு
வாதியே நாகசெம் பாகும்பாரு
மூடிப்பட்டதை குருவாய் வைத்துக்கொண்டு
மூவுலகில் சித்துவிளை யாடுவாயே. 16

ஆடுவாய் செம்பதைத்தான் பத்துக்கொன்று
அடைவாக நீகொடுத்தால் ஈரஞ்சப்பா
மூடரப்பா முறையறிந்து செய்யமாட்டார்
முட்டாளுக் குறையாதே முழுகிப்போவாய்
தேடாதே தேய்விதுதான் யேலேலசிங்கா
தெரியவே சொல்லிவிட்டே னுனக்காமைந்தா
காடெல்லாந் திரிந்தயர்ந் தலையவேண்டாம்
கண்டுகொள் பதினாறும் கணக்காய்முற்றே. 17

## திருவள்ளுவ நாயனார் அருளிச்செய்த
### சூத்திரம் பதினாறு
முற்றிற்று

உ

திருவள்ளுவ நாயனா ரருளிச்செய்த

# பஞ்சரத்தினத் திருப்புகழ் - 11

ஆதியந்தமு மேபடைத் தாண்டருள்
சோதியாம்பர னாதனடிதொழு - தருள்மேவி
நீதியாளெனை யாண்டரு ளன்னையாம்
சாதியென்குல நாரணி பூரணி
போதியென்றுயர் பெற்றதோர் வாலையாம் நின்பாதம்
மாதுபங்கய மாமலர்சூடியான்
யீதறிந்து யியம்புவேன் பூரணி
யேதுமே தடையில்லை யென்னூலது - யெளியோர்க்காய் 1

எளியனாயிரம் மேலுடனைந் துனூர்
பொழியுமேகம தாகியேகூறினேன் - புவிமீது
கிளியுமெட்டுநூர் மொழியு மைந்துனூர்
விழியுமூன்றுநூர் சுழியுமொன்றுனூர்
வழியுமெண்பது புகழுமன்பது கழிவுமுப்பது
அழிவிலாத பதினாறுபத்துடன் - அதுமேலாம்
கொழியுமாண்டையே விதியரிந்தவர்க் கழிவிலாப்பொருள்
கருணையாலேயான் மொழியுஞ் செந்தமிழ்
பொதுவிதாகுமே (ஏலேலம்) 2

யேலம்யேல மெனக்கூவிப் பாடுகிறேன்
ஜாலஜால ஜெயயோகமறிந்திடார்-சனியாலே
கோலகாலரருள் நீலகண்டப் பொருள்
நீலினீலியெனும் தாயுமோ னமருள்
ஆயிஆயியெனு ஆயிசொன்னதிது - அரனாணை
போலிபோலி யெனவூர்கள் சுற்றியே
வேலிவே விதழை காய்கிழங்குகனி
நாவிநாவி யாகும்யாகும்மென - (இதுமோசம்) 3

மோசமோசமென் றேயுரை யாடுவான்
ஆசபாசவினை யானதேயொழிந்தோ - தணுகானே
தேசதேச மதிலே திரிந்தாலென்
கேசனானசூதர் ரசவாதமோச மாகிக்கண்கெட்டு

வாடுவர் - தெரியாதால்
கோசபீஜமருள் நேசங் கண்டவன்
வாசிவாசிவா ரேசகத் திவருள்
பூசையற்று மனநேச முற்றுவன் - (தனவானாய்) 4

தனந்தனமென தேடயெண்ணூறினில்
நினைவினோர்களே கனமானதை (காணாரே)
நினைவுமாறிடா தெனது சீடனே
கவனமதாகவே முப்பு மார்க்கமும்
உனதுமீதினி லன்புவைத்துயான் (உரைசெய்வேன்)
கனககாரமது புவியதாகிடும் தினமதாக
பனிகால மானதில் நினைவதாகயெடு
கவினமாறிடா = (இதுதானே). 5

தானேயென்ற பொருள் தன்னைத்தானறியும்
மோனமந்திர சாரமுங்கட்டு - மதிலுண்டு
ஏனமாளவு பாகமீரிடா சோனையும்பொருள்
தானங்கூடிட காணலாமிது
காரமுஞ்சாரமும் கரைத்தேதான்
வானவன்னியில் காய்ந்த பின்னது
சீனகும்பியில் பதனமானது
நாணயத்துடன் காத்துமேவிடா (தடைந்தேதான்). 6

அடைத்த பின்னதில் அவ்வையுச்சதி
அடைத்துமண்டல மேகழித்தெடு- கதித்தவன்
இடத்தினில் பெருமிடத்தில் வைத்திடு
ஜடத்த யின்னமோர் பொருளைக்கூறுவேன்
அடைத்தபூமி னாதமெடுத்திடு - வங்கேசன்
தடைத்த திவ்விட மாடைத்ததையும்முடி
திடத்துடனிரு யெழுத்தையுமதி
அடைத்துடனொரு வாரமுமானபின் - (அதின் மண்ணை) 7

மண்ணைகெல்லியே மாரளவேயெடு
விண்ணுமண்ணு மிணைந்தொரு ரூபமாய் - நிழலாடும்
கண்ணில் கண்டபோ தவ்வெழுத்தேநினை
பண்ணுஞ் சாரைபோல் பாயுஞ்சலமிது

யெண்ணியெட்டுடன் அஷ்டதிக்கு பந்தனமு மினிசெய்வாய்
பண்டு நூல்தனில் சொன்ன வைப்பிது
எண்ணியெண்ணிவெகு பேர்கள் காணிடா
மண்ணிமண்ணில் மடிந்தவர் கோடியே - (யதுமாய்கை) 8

கோடியான கல்லுதேடிப் பாருவிளை
யாடலாமதில் வீடெலாங்கனகம் - இதையீசன்
வாடிடாமலிதை ஆதியில்வரத் தேடிவைத்தபொருள்
வாதியென்ற சித்தன் - தேடிடாமலொரு நாளிலே
இதைசெய்வானே
ஜாடும்போலிது காரசாரவுப்பை ..............................
போகநீ விடு புளியதாகிடும் - (புகலாதே.) 9

புகலிடாமலிதை குப்பியிலேயடை
ஜெகமறிந்திடா மண்டலஞ்சமாதி - கழிந்தெடு
யிகபரம்புகழ் மவுனமந்திர மகமகிழ்ந்திட
யெட்டு நூறது துகையுரைத்துமே
கல்வந்தனில்மிசை - இடுநீயே
வகையுவிட்டு பதமாக வழித்தெடு
துகையதாகரவி காய்ந்தபின்பு
ஒட்டமதாக யேழுமண்கள் செய்துமே - (புடம்போடு) 10

போட்டபின்னதை வாட்டியேயெடு
காட்டுவாய் பரிபத்துக்கேயிது - (கடுகொன்றாய்)
மூட்டுமூட்டி லிதுஉலக முடியளவும்
ஆட்டு ஆட்டுவிது முப்புநாட்டது காட்டாதே
வுன்சிரமும்பொடிபடும் - (உரையாதே)
ஏட்டைக்கொண்படித் தெண்ணிலாலென
பாட்டுமேபயனானது சொல்லுமே
கேட்டுக்கொண்டபடி செய்யும்சிங்கமே
பதினொன்றுமுற்றே. 11

## திருவள்ளுவ நாயனாரருளிச்செய்த

### பஞ்சரத்தினத் திருப்புகழ்

முற்றிற்று

# புலஸ்தியர் வாதசூத்திரம் 300

**பாடல் எண்**

1. ஆதியந்தம் - ஆரம்பம், முடிவு
3. அயத்தின் செம்பு - இரும்பைச் செம்பாக்கியது
5. பசளை - அறியாப் பிள்ளை
   கிடம் - மண்சட்டி
6. புகைநீர் - திராவகம்
10. (வ) ஆண்டோடு - முட்டை ஓடு
12. பழச்சாறு - எலுமிச்சம் பழச்சாறு
    பெரியபுடம் - கஜபுடம் 100 எருவால் புடம் போடுவது
27. பரை - சிற்பரை - வாலை
38. கவசம் - மேல் பூச்சு
    மேனி - குப்பைமேனி
39. நெகிழரைத்து - நயமாய் அரைத்து
    சூதம் - ரசம் - பாதரசம்
41. ஏமம் - பொன்
45. அண்டம் - முட்டை
53. அகல் - அகல்விளக்கு, அகல் போன்ற கிண்ணி
54. மயனமாய் - மைபோல
55. களங்கம் - கள்ங்கு
68. அயச்செம்பு - இரும்பிலிருந்து உண்டாக்கிய செம்பு இரும்பைச் செம்பாக மாற்றியது.
73. ரவிதனிலே யுலரப்போடு - சூரிய வெப்பத்தில் காயவை.
74. மதிதனிலே ஈந்துபாரு - வெள்ளியை உருக்கி அதனுடன் சேர்
75. கௌரி - கௌரி பாஷாணம்
    அயச்சட்டி - இரும்புச்சட்டி
84. வெள்ளாட்டு அமுரி - வெள்ளாட்டு மூத்திரம்

88. சிலாக்கு - சிலாகு - குச்சி

91. ஆவிநெய் - ஆவின் நெய் - பசுநெய்

92. விந்துருகும் - விந்து இறுகும் - ஆண்மை அதிகமாகும்

பாடல் எண்

100. கெந்தி - கெந்தகம்

108. கிராசம் இடுதல் - சுருக்குக் கொடுத்தல்

132. காரம் - வெண்காரம்

148. மாலை-காமாலை

நவலோகம்- ஒன்பது லோகங்கள் பொன், வெள்ளி, செம்பு, ஈயம், நாகம், இரும்பு, காந்தம், உருக்கு, பாதரசம்.

182. பதங்கம் - கீழ் சட்டியில் பொருளை வைத்து எரிக்கும்போது மேலே மூடிய சட்டியில் படிவது கெந்தகச் செம்பு - கெந்தகத்திலிருந்து உண்டாக்கிய செம்பு

187. விராலியிலைச் சாறு-சாறு வராத இலைகளிலே விராலியிலையும் ஒன்று. இதனுடன் துரிசுச் சுண்ணம் சேர்த்துக் கசக்கிப் பிழிந்தால் சாறு வரும்.

196. சிவவிந்து - பாதரசம் - சூதம்.

217. கருவத்தில்-கலுவத்தில்

227. நீலன் - துரிசு

237. சிங்கி- மிருதார்சிங்கி ஒருவகைப் பாஷாணம்

280. சுட்டுக்கெட்டு -பொன் செய்வதற்காகப் புடம் போட்டுப் புடம்போட்டுக் கெட்டார்கள்.

283. பாணி-பானி- தண்ணீர்

✦ ✦ ✦

குறிப்புக்காக...

தாமரை
நூலகம்